www.padippakam.com

# புதிய கலாச்சாரம்

ஜனவரி - 2001
ம.க.இ.க. மாத இதழ்
ரூ. 5.00




## மூளை தயார் முண்டங்கள் தயாரா?

படிப்பகம்

www.padippakam.com

திரைப்பட விமரிசனம்:

# புரட்சிக்காரன்: தாழ்ந்த திராவிடர் கழகமே!

தெலுங்கு டப்பிங் புரட்சிகளையே பார்த்துச் சலித்துத் ''தமிழால் ஏலாதா'' என்று ஏங்கியவர்களின் குறை தீர்க்க வந்திருக்கிறது 'புரட்சிக்காரன்'.

''பிறப்பால பார்ப்பனன் புரட்சிக்காரனாக முடியாது'' என்பது தி.க.வின் அதிகார பூர்வமான கொள்கை. அதிகார பூர்வமற்ற முறையில் தி.க. தயாரித்துள்ள இப்படத்தின் கதாநாயகனான புரட்சிக்காரனோ பிறப்பால் பார்ப்பனன். இதெப்படி சாத்தியமானது?

''பார்ப்பனக் கதாநாயகனை வைத்து இந்து மதத்தை அம்பலப்படுத்தினால் தான் தணிக்கைக் குழுவின் கண்களில் மண்ணைத் தூவி 'புரட்சியை' ரிலீஸ் செய்ய முடியும்'' என்று தயங்கித் தயங்கி ஆசிரியருக்கு எடுத்துச் சொல்லியிருப்பார் இயக்குநர் வேலு பிரபாகரன்.

ஆர்.எஸ்.எஸ்ஐ ஒழிக்க புரட்சித் தலைவியை ரிலீஸ் செய்து, தமிழர்கள் அனைவரின் கண்களிலும் மண்ணைத் தூவி வரும் ஆசிரியருக்கு இந்தத் தந்திரமெல்லாம் பிள்ளை விளையாட்டு.

அது கிடக்கட்டும். இந்தப் புரட்சிக்காரன், குமாஸ்தா வேலை பார்க்கும் சராசரிப் பார்ப்பனனல்ல; கட்டுக் குடுமி வைத்த கிராமத்து சநாதனப் பார்ப்பனன்.

சநாதனப் பார்ப்பானை புரட்சிக்காரனாக்க என்ன செய்வது? ''தமிழ் சினிமா மசாலா மரபுப்படி, மேற்படி கதாநாயகனே பார்ப்பனியத்தின் கொடுமையால் பாதிக்கப்பட்டால்தான் அவன் புரட்சிக்காரனாக மாறுவதை ரசிகர்கள் ஒத்துக் கொள்வார்கள்'' என்று விளக்கியிருப்பார் இயக்குநர்.

இட ஒதுக்கீடு போன்ற சொந்தப் பிரச்சினைகளுக்குப் போராடுவதன் மூலம்தான் தமிழர்கள் சாதி ஒழிப்புப் புரட்சிக்குத் தயாராவார்கள் என்ற தி.க.வின் அணுகுமுறையும், தமிழ் சினிமாவின் மசாலா மரபும் ஒரே மாதிரியாக இருப்பதைக் கண்டு வியந்த ஆசிரியர் இதற்கு மகிழ்ச்சியோடு சம்மதித்திருப்பார்.

நல்லது. கதாநாயகனைப் புரட்சிக்காரனாக்கும் பொருட்டு அவன் தங்கையின் தாலியை அறுத்து இளம் விதவையாக்கி விடலாம். அவள் ஒரு முசுலீம் இளைஞனைக் காதலிப்பதால் மத நல்லிணக்கமும் புகுத்தப்பட்டு விடுகிறது. பார்ப்பனப் பண்பாட்டின் கொடுமையினால் அவள் தற்கொலை செய்து கொள்கிறாள். உடனே கதாநாயகன் 'புரட்சி'க்குத் தயாராகிறான்.

ஆனால் ஒரு பார்ப்பனன் தன் சொந்த அனுபவத்திலிருந்து புரட்சிக்காரனாக மாறுவதாகச் சொல்லிவிட்டால் அய்யாவை இருட்டடிப்பு செய்தது போல ஆகிவிடுமே! எனவே சத்யராஜை அந்தக் கிராமத்துக்கு வரவழைத்து கொஞ்சம் பிரச்சாரம் செய்து, கொஞ்சம் சண்டை போட்டு ஒரு பாட்டும் பாடி பிறகு செத்துப் போகச் சொல்லலாம்.

இந்த இரண்டாவது கொலை கதாநாயகனின் கோபத்தை இரண்டு மடங்காக்கப் பயன்படும். வேறு வழியே இல்லாமல் தான் கதாநாயகன் ஆயுதம் எடுத்தானேயொழிய அவன் (அதாவது நாங்கள்) வன்முறையில் நம்பிக்கை கொண்டவரல்ல என்று தணிக்கைக் குழுவிற்கு சமாதானம் சொல்லவும் பயன்படும்.

இப்படியாக, திராவிடர் கழகத்தின் அரசியல் வியூகங்களும், புரட்சிக்காரன் படத்தின் திரைக்கதை அமைப்பும் அச்சில் வார்த்ததைப் போல ஒன்றுபடுவதை எழுதிக் கொண்டே போகலாம். பக்கம்தான் போதாது.

கதாநாயகன் கதை இப்படி என்றால் வில்லன் பிரேமானந்தா மாதிரி ஒரு 'போலி' சாமியார். அதாவது காவி உடுத்திய தமிழ் சினிமா வில்லன். அவன் கற்பழிக்கிறான், கொலை செய்கிறான், சிலை கடத்துகிறான், பின்லாடனுக்கு நாட்டைக் காட்டிக் கொடுக்கிறான். இதையெல்லாம் மறைக்க மக்களிடம் மூட நம்பிக்கையைப் பரப்புகிறான்.

ஆனால் கதாநாயகன் கடத்தி வரும் சங்கராச்சாரி மற்றும் கிறித்தவ இசுலாமிய மதத் தலைவர்களோ, உண்மையான சாமியார்கள். ''பகுத்தறிவு இல்லாத மூடர்கள்'' என்பதற்கு மேல் எந்தப் பாவமும் அறியாதவர்கள். ராஜ்குமாரைப் போல பரிதாபமாக முகத்தை வைத்துக் கொண்டு காட்டில் அமர்ந்திருக்கிறார்கள். கதாநாயகனின் கேள்விகளுக்குப் பதில் சொல்லத் தெரியாமல் விழிக்கிறார்கள்.

உண்மையான வில்லன்களான சங்கராச்சாரியும் பிற மதத் தலைவர்களும் இந்தச் சித்தரிப்பைக் கண்டு நெகிழ்ந்திருப்பார்கள்.

மதத் தலைவர்களைக் கடத்தி வைத்துக் கொண்டு தனது கோரிக்கைகளை நிறைவேற்றச் சொல்கிறான் புரட்சிக்காரன். பக்தர்கள் யாரும் கலகம் செய்யவில்லை. மாறாக பகுத்தறிவு எழுச்சியில் நாடே கலகலக்கிறது.

பரிதாபத்துக்குரிய பெரியார் தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்கள், படிப்புக்குப் பணம் கட்டிவிட்டு, நடிப்புக்கு ஊர்வலம் போகிறார்கள்.

தொடர்ச்சி 27-ஆம் பக்கம்

## அறிவிப்பு:

**வாசகர்கள், முகவர்கள், மாற்றுப்பத்திரிக்கை அனுப்புவோர் மற்றும் வெளிநாட்டு வாசகர்கள் கவனத்திற்கு**

**புதிய கலாச்சாரத்தின் நிர்வாக அலுவலகம் கீழ்க்கண்ட புதிய முகவரிக்கு மாற்றப்பட்டிருக்கிறது.**

**இரா. சீனிவாசன்,**
**18, முல்லை நகர் வணிக வளாகம்,**
**2-வது நிழற் சாலை,**
**அசோக் நகர், சென்னை - 600 083.**

**R. Srinivasan,**
**18, Mullai Nagar Shopping Complex,**
**2nd Avenue,**
**Ashok Nagar, Chennai - 600 083.**

★ சந்தா, வாசகர் கடிதம், படைப்பு உட்பட அனைத்து தொடர்புகளும் புதிய முகவரிக்கு அனுப்புமாறு கோருகிறோம்.

★ அலுவலகத்தில் பழைய பு.க. இதழ்கள், ம.க.இ.க. பாடல் ஒலிப்பேழைகள் விற்பனைக்கு கிடைக்கும். இவ்வாண்டு தமிழ் மக்கள் இசைவிழா பேச்சு ஒலிப்பேழைகளும் விற்பனைக்குக் கிடைக்கும். தேவைப்படுவோர் நேரில் வருக!

★ அலுவலக வேலை நேரம் காலை 10 முதல் 1 மணி வரை. ஞாயிறு விடுமுறை.



படிப்பகம்

www.padippakam.com

கலை இலக்கியம்
யாவும் மக்களுக்கே

• போர்: 18
• குரல்: 8
• ஜனவரி - 2001

உள்நாடு
தனி இதழ்: ரூ. 5.00
ஆண்டு சந்தா: ரூ. 60.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: US$ 9

சந்தா,
படைப்புகள் அனுப்பவும்
தகவல்களுக்கும்:

இரா. சீனிவாசன்,
18, முல்லைநகர் வணிக வளாகம்,
2-வது நிழற்சாலை,
அசோக் நகர்,
சென்னை - 600 083.

# அழகிப் போட்டியும் அதிபர் தேர்தலும்!

மயிரிழையில் உயிர் தப்பி விட்டது அமெரிக்க ஜனநாயகம்! கவர்ச்சி அரசியல், குண்டர் அரசியல், தேர்தல் தில்லுமுல்லுகள், பணத்தை இறைப்பது, சாதகமான அதிகாரிகளைப் பயன்படுத்திக் கொள்வது, தாழ்த்தப்பட்டோரை வாக்களிக்க விடாமல் தடுப்பது போன்ற இந்தியத் தேர்தல் ஜனநாயகத்தின் கேலிக் கூத்துக்கள் அரங்கேறும் போதெல்லாம், அமெரிக்காவின் "முதிர்ந்த, நாகரீகமான, நாணயமான" தேர்தல் முறையைக் காட்டி "அதை நோக்கி நாம் முன்னேற வேண்டும்" என்று எழுதுவது எம்.எஸ். உதயமூர்த்தி போன்ற முதலாளித்துவ அறிவுக் கூலிகளின் வாடிக்கை. நடந்து முடிந்த தேர்தலில் அமெரிக்காவின் ஒய்யாரக் கொண்டை அவிழ்ந்து ஈறும் பேனும் பொலபொலவெனக் கொட்டியதை உலகமே கண்டது.

அமெரிக்க உச்சநீதி மன்றத்தின் உதவியால் தடை பல கடந்து அதிபராயிருக்கிறார் ஜார்ஜ். டபிள்யு. புஷ். புஷ்ஷின் ஜாதகம் என்ன? எண்ணெய் வர்த்தகத்தில் கொழிக்கும் குடும்பம். அப்பா சீனியர் புஷ் 88-92 இல் அதிபராக இருந்தவர். ஹார்வர்டு வணிகக் கல்லூரியில் படித்த புஷ் ஆடம்பர விருந்துகளுக்கும், பொறுக்கித்தனங்களுக்கும் பெயர் பெற்றவர். 60களின் வியட்நாம் போரின் போது, ஏனைய பணக்கார இளைஞர்களைப் போல டிமிக்கி கொடுத்தவர். ஆளானதும் அப்பாவின் எண்ணெய் வர்த்தக நண்பர்கள் உதவியுடன் தொழில் துவங்கினார். பலமுறை நட்டமடைந்தாலும் எண்ணெய் நிறுவனங்களின் உதவிமட்டும் குறையவில்லை. பின்னர் அரசியலில் நுழைந்து டெக்சாஸ் மாநில கவர்னரானார். தனது ஆட்சியில் 100 பேருக்கு மரண தண்டனை நிறைவேற்றினார். குடியரசுக் கட்சியின் நிறவெறி மற்றும் ஏனைய பிற்போக்குத் தனங்களை பலமுறை வெளிப்படையாக ஆதரித்தவர். அதிபர் தேர்தல் பிரச்சாரத்தின்போது "நைஜீரியா நாட்டை ஒரு கண்டம்" என்று குறிப்பிட்டவர். அதாவது பொது அறிவில் நடிகை ரம்பாவுக்கும் கீழானவர். நிர்வாக அறிவில் சின்ன எம்.ஜி.ஆரைவிட தரம் குறைந்தவர். குடியரசுக் கட்சியின் அதிபர் பதவிக்கான வேட்பாளராவதற்கு, அதாவது உட்கட்சித் தேர்தலுக்கு இந்தக் கோமாளி செலவழித்த தொகை 450 கோடி ரூபாய். எனவே இவருடன் போட்டியிடுவதற்கு யாரும் நெருங்க முடியவில்லை.

தற்போதைய துணை அதிபரும், புஷ்ஷுடன் போட்டியிட்டுத் தோற்றவருமான ஜனநாயகக் கட்சியின் அல்கோரின் ஜாதகம் என்ன? அரசியலையே தொழிலாகக் கொண்ட பிரபலமான குடும்பம். அப்பா நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தவர். வெள்ளை மாளிகை மீது செல்வாக்கு செலுத்தும் சிந்தனையாளர் குழாமினால் அதிபர் பதவிக்கென்றே தீனி போட்டு வளர்க்கப்பட்ட ராஜகுமாரன். வாஷிங்டனில் 20 வருடம் கொட்டை போட்டவர். காப்பீடு, மருந்து நிறுவனங்களின் நேசத்திற்குரியவர். கிளிண்டனுடன் 8 வருடம் குப்பை கொட்டியதால் இவருடைய ஆளுமை கேள்விக்குள்ளானது. 'இல்லை நான் தனித்துவமானவன்', என்று அதிபர் பிரச்சாரத்தின்போது ஏகப்பட்ட நிர்வாக புள்ளி விவரங்களை அள்ளி விட்டார். அல்கோரின் அறிவு ஜீவித் தோற்றமே அவரை அன்னியப்படுத்தும் கேடாய் முடிந்தது.

அதையே அஸ்திரமாக்கினார் புஷ். வெள்ளை மாளிகையின் அதிகார இடுக்குகளிலிருக்கும் அல்கோர், சாதாரண அமெரிக்க மக்களைப் புரிந்து கொள்ள மாட்டார் என்று பிரச்சாரம் செய்த புஷ் தன்னை அரசு நிறுவனங்களுக்கெதிரான ஒரு கலகவாதியாகக் காட்டிக் கொண்டார். வாஷிங்டனின் அதிகாரத்தை மக்களிடம் கொண்டு செல்ல வேண்டும் என்றார். ஒரு சராசரி அமெரிக்கனின் அறிவும், கேளிக்கைப் புத்தியும் கொண்ட சாதாரண மனிதனாக நடித்தார்.

இத்தகைய 'பெர்சனாலிட்டி' (ஆளுமை) பிரச்சினையால் கருத்துக் கணிப்புகள் புஷ் முன்னணியில் இருப்பதாகத் தெரிவித்தன. துவண்டு போன அல்கோர் தனது அறிவு ஜீவி முகமூடியைக் கடாசிவிட்டு 'சாதாரண நபராக' காட்டிக் கொள்ள பகீரதப் பிரயத்தனம் செய்தார். படத்துக்குப் படம் கமலஹாசன் மாறுவது போல வாராவாரம் தனது பெர்சனாலிடியை மாற்றிக் காட்டினார். கட்சி மாநாட்டு மேடையில் மனைவி டிப்பரை ஆழமாக 'கிஸ்ஸ்'டித்தார். 'டி ஷர்ட், பெர்முடா' சகிதம் ஓடினார்; ஆடினார்.

முத்தம் வேலை செய்தது. அடுத்த கருத்துக் கணிப்பில் புஷ்ஷுடன் சமமானார் அல்கோர். அறிவு ஜீவி இப்படியாகக் கோமாளியானார்; கோமாளி அறிவு ஜீவியானார். அமெரிக்க மக்களுக்கோ 'டைனஸ்டி, சான்டா பார்பரா, பே வாட்ச்' போன்ற சென்டிமென்ட் - கவர்ச்சி டிவி. தொடர்கள் போல பொழுது போனது. அரசியல், பொருளாதாரப் பிரச்சினைகளில் இருவரும் வார்த்தைகளில் மட்டும் வேறுபட்டார்கள். பொருளென்னவோ 50 ஆண்டுகளாக மாறிவிடவில்லை. அமெரிக்க தேசத்தைக் கட்டியெழுப்புவது பற்றி சில்வஸ்டர் ஸ்டாலோன் ('ராம்போ' பட நாயகன்) பாணியில் முஷ்டியை உயர்த்தினார் புஷ். உலகத்தின் ஜனநாயகத்தையும், மனிதநேயத்தையும் காப்பாற்ற வேண்டிய அமெரிக்காவின் கட்டுப்பாடு குறித்து 'இன்டிபென்டன்ஸ் டே' ஹீரோ போல அல்கோர் உறுதி ஏற்றார். →

படிப்பகம்

www.padippakam.com

பட்ஜெட்டில் இராணுவத்துக்கு ஒதுக்கப்படும் 50 சதவீதத்தைத் தொடருவதாக புஷ் உறுதியளிக்க, இன்னும் அதிகம் ஒதுக்குவதாகக் கூறிய கோர் தியாகியானார். இசுரேலை ஆதரிக்கவும் யாசர் அராபத்தை உதைக்கவும் இருவரும் சபதமேற்றனர். பட்ஜெட்டின் உபரியில் முதலாளிகளுக்கு வரிவிலக்களிப்பதாக புஷ் முழங்கினார். நடுத்தர மக்கள் இன்னுமதிக நுகர்வோராக மாற வழி ஏற்படுத்துவதாக கோர் ஆசை காட்டினார். மற்றபடி அமெரிக்காவின் அச்சுறுத்தும் அணுஆயுதக் குவிப்பு, பெருந்தீனி கேட்கும் நட்சத்திரப் போர் திட்டம், பெருகிவரும் வேலையின்மை - துப்பாக்கி கலாச்சாரம், உலகமயமாக்கம், உலக போலீசுக்காரன் வேலை குறித்து இருவரும் பேசவில்லை. ஏன் பேசவில்லை என்பதையும் யாரும் கேட்கவில்லை.

அதிபர் பதவிக்குபோட்டியிட்ட மூன்றாவது வேட்பாளரான பசுமைக் கட்சியின் ரால்ஃப் நாடாரை செய்தி ஊடக பிரம்மாக்கள் தீண்டவேயில்லை. பன்னாட்டு நிறுவனங்களிடம் மேற்படி இரண்டு பேரும் தேர்தல் நிதி வாங்கியதைப் பற்றி நாடார் கேள்வி கேட்பார் என்பதற்காக, பிரபலமான தொலைக்காட்சிகள் நேரடி விவாதத்திற்குக் கூட அவரை மறுத்தன. மற்றபடி அதிகாரவர்க்க பலத்துடன் இரு கட்சிகளும் அனைத்து முறைகேடுகளையும் 'தொழில் நுட்ப' தரத்திலும், குண்டர் பலத்திலும் செய்து முடித்தன. புஷ்ஷின் தம்பி ஆளுநரயிருக்கும் புளோரிடா மாநிலத்தில் ஆயிரக்கணக்கான கருப்பின மக்கள் வாக்களிக்க விடாமல் தடுக்கப்பட்டார்கள். ஜனநாயகக் கட்சிக்கு ஆதரவான இடங்களுக்கு கோளாறு செய்யும் ஓட்டெடுப்பு எந்திரங்கள் அனுப்பப்பட்டன.

இறுதியில் உச்சநீதி மன்றத்தின் 7:2 என்ற தீர்ப்பு விகிதத்தில் கோமாளி அதிபரானார். 'அந்த 7 நீதிபதிகள்' புஷ்ஷின் அப்பாவினாலும், ரீகனாலும் நியமனம் பெற்ற குடியரசுக் கட்சிக்கு ஆதரவான நீதிபதிகள். 'அந்த 2 நீதிபதிகள்' கிளிண்டனால் நியமனம் பெற்ற ஜனநாயகக் கட்சி ஆதரவு பெற்ற நீதிபதிகள். நம்மூர் முன்சீபுக்கு இருக்கும் பெயரளவு நடுநிலைமை கூட இதில் இல்லையே என்றால் 'இதுதாண்டா அமெரிக்க நீதி' என்கிறார்கள்.

தேர்தல் முறையின் சிக்கலால் இழுபறியான நாட்களைப் பற்றிய கவலை ஓட்டுப் போட்ட - போடாத மக்களிடமிருந்து வரவில்லை. பன்னாட்டு முதலாளிகள், வால் ஸ்ட்ரீட் பங்குச் சந்தை முதலைகள், செய்தி ஊடக மடாதிபதிகள், ஹாலிவுட் நட்சத்திரங்கள் போன்ற சாத்தான்கள், ''இந்த இழுபறி நிலைமை நல்லதல்ல. சுயநலத்தை(!) விட்டு விட்டு தோதலால் சிதறுண்ட அமெரிக்க சிந்தனையை ஒன்றிணைப்போம்! புதிய அதிபருக்குத் தோள் கொடுப்போம்'' என்று ஓதுகிறார்கள். அவர்களைப் பொறுத்த வரை வெளிப்படையான ஒரு கூஜா அதிபர் கிடைத்து விட்டாரே!

சமீபத்தில் உலக அழகியாகத் தெரிவு செய்யப்பட்ட பிரியங்கா சோப்ராவிடம் ''தற்போது உயிருடனிருக்கும் உலகப் பெண்களில் வெற்றிப் பெண்ணாக யாரைக் கருதுகிறீர்கள்?'' என்று பொது அறிவுக் கேள்வி கேட்ட போது, பளிச் சென்று ''அன்னை தெரசா'' என்ற பிணத்தின் பெயரைச் சொன்னார். ''பதில் தவறாக இருக்கலாம், ஆனால் அதை நம்பிக்கையுடன் தீர்மானமாகச் சொன்னாரே, அது தான் தகுதி'' என்று அவரையே உலக அழகியாக்கி விட்டார்கள். புஷ்ஷும் அதிபராகிவிட்டார்.

ஜனநாயகம் என்பது மட்டும் என்னவாம்? ஒரு நம்பிக்கைதானே!

●

---

## நூல் அறிமுகம்: பிரெக்டின் கெலிலியோ கெலிலி

# அறிவியலின் கதியும் அறிவியலாளனின் நிலையும்

**கி.**பி. பத்தாம் நூற்றாண்டில் பாரசீக அறிஞர் அல்பெருணி அன்றைய இந்தியாவின் சாதி, மதச் சமூகத்தையும் அறிவியல் முன்னேற்றத்தையும் தனது நூலொன்றில் அற்புதமாகப் படம் பிடித்தார்.

அன்றைய அறிவியலாளர்களான வராகமிகிரர், பிரம்ம குப்தர் இருவரையும் பற்றிக் கூறும்போது, ''இவ்வறிஞர்களுக்கு சூரிய.- சந்திர கிரகணம் ஏன் ஏற்படுகிறது என்பது நன்றாகத் தெரியும். இவர்கள் அறிவியல் விவரங்களைக் கணக்கிட்டு கிரகணம் பற்றித் துல்லியமாக தமது ஆய்வு நூல்களில் விளக்கி வரும் போது திடீரென்று ராகு பாம்பு சூரியனை விழுங்குகிறது என்ற பிராமணர்களின் பழைய நம்பிக்கையைக் குறிப்பிடுகிறார்கள். தனது மனச்சாட்சிக்கு விரோதமாக பார்ப்பனர்களுக்குப் பயந்து இப்படிச் சொல்ல வேண்டியிருப்பது பற்றி,'' அல்பருணி வருத்தப்படுகிறார்.

17-ஆம் நூற்றாண்டில் இத்தாலியைச் சேர்ந்த கலிலியோ திருச்சபைக்குப் பயந்து தனது வானியல் ஆய்வுகளைக் கைவிடுகிறார். மனச்சாட்சிக்கு வரோதமான கலிலியோவின் வாழ்வை சமகால நாடகமாக்கியிருக்கிறார், பிரெக்ட் என்ற ஜெர்மனியின் மார்க்சியக் கலைஞர்.

பிரெக்டின் நாடகத்தில் இரண்டு விதமான கலிலியோக்களைக் காண்கிறோம். ஒருவர் மறுமலர்ச்சிக் காலத்தில் வாழ்ந்த உண்மையான கலிலியோ. இவரைத் தெரிந்து கொள்வதற்கு மறுமலர்ச்சிக்கால வரலாற்றுப் பின்னணியைத் தெரிந்திருப்பது அவசியம்.

●●●

பழமையான கிரேக்க நாகரீகம் தான் ஆரம்பகால அறிவியல் சாதனைகளைப் படைத்தது. அரிஸ்டாட்டிலும் அவருக்குப் பின் 5 நூற்றாண்டுகள் கழித்து வந்த தாலெமியும் (கி.பி. 2 ஆம் நூற்றாண்டு) பூமியை மையமாக வைத்து சூரியன், சந்திரன், கோள்கள், நட்சத்திரங்கள் சுழல்கின்றன எனும் வானியல் கோட்பாட்டைப் படைத்தனர். பின்பு கிரேக்கத்தின் அறிவுத் துறை வரலாறு அரெபியாவுக்கு இடம் பெயர்ந்தது. அரெபிய அறிவியலாளர்களால் வளர்த்தெடுக்கப்பட்ட கிரேக்க அறிவியல் 13-14ஆம் நூற்றாண்டுகளில் மீண்டும் ஐரோப்பா வந்தது. அன்றைய உலகின் மையமாக இருந்த ரோமன் கத்தோலிக்க திருச்சபை தாலமியின் பூமி மைய வானியல் கோட்பாட்டினை வரவேற்று அங்கீகரித்தது.

எல்லா ஐரோப்பிய நாடுகளிலும் ஏராளமான சொத்துக்களை வைத்திருந்த திருச்சபை, கல்வி - அறிவியல் - இறையியல் - அரசியல் போன்ற முக்கியத் துறைகளில் ஆதிக்கம் செலுத்தி, நிலவுடைமைச் சமூகத்தின் பிற்போக்குக் கோட்டையாக விளங்கியது. அதனுடைய இறையியல் பணியும், விவிலிய விளக்கமும் அதற்காகவே பயன்பட்டது. எனவே, திருச்சபை பூமியின் மையம் என்பதை நிறுவ பூமிதான் அண்டவெளியின் மையம் என்று விளக்கிய தாலமி கோட்பாடு அவர்களின் அங்கீகாரம் பெற்றது. தவறெனச் சொன்னவர்கள் திருச்சபையின் மதவிரோத குற்ற விசாரணைக் குழுவான **இன்க்விஸிசன்** பயங்கரவாதிகளால் தண்டிக்கப்பட்டார்கள்.

www.padippakam.com

பூமிதான் சூரியனைச் சுற்றுகிறது என்ற விளக்கிய போலந்து நாட்டுப் பாதிரி கோப்பர் நிக்கஸ் திருச்சபையால் முடக்கப்பட்டார். அதையே உரத்து முழங்கிய இத்தாலியைச் சேர்ந்த ஜோர்தனோ புருனோ நாத்திகன் எனக் குற்றம்சாட்டப்பட்டு எரிக்கப்பட்டார். கோப்பர் நிக்கசின் ஆய்வுப்படி தயாரிக்கப்பட்ட வானியல் வரைபடங்கள், நேரக்கணிப்பு, பஞ்சாங்கம் ஆகியவற்றை ஏற்ற திருச்சபை அவரது கோட்பாட்டை மட்டும் மதவிரோதம் என்று அறிவித்தது.

தனது தொலைநோக்கியின் மூலம் கோப்பர்நிக்கசின் வானியல் கொள்கையை நிரூபித்த இத்தாலியின் கலிலியோவும் திருச்சபையால் சிறை வைக்கப்பட்டார். இறுதியில் தனது ஆய்வையே தவறென மறுக்கவும் நிர்ப்பந்திக்கப்பட்டார். இருப்பினும் தனது 'டிஸ்கோர்சியா' என்ற நூலில் தாலமி கோட்பாட்டை ஆதரிப்பவனுக்கும், கோப்பர்நிக்கசின் கோட்பாட்டை ஆதரிப்பவனுக்கும் நடைபெறும் உரையாடலின் மூலம் தனது கொள்கையை மனிதகுலத்திற்குப் பறைசாற்றிவிட்டு 1642-ஆம் ஆண்டில் கலிலியோ மடிந்தார்.

கலிலியோ காலத்து ஐரோப்பியச் சமூகம் நவீன கால வரலாற்றின் தொடக்கமும், மனிதகுல வரலாற்றின் திருப்புமுனையும் ஆகும். ரோஜா யுத்தம், சிலுவை யுத்தம் போன்ற பெரும் போர்களினாலும், காலரா - பிளேக் போன்ற கொள்ளை நோய்களினாலும் அக்கால மக்கள் தொகை கணிசமாகக் குறைந்தது. யாரைச் சுரண்டிக் கொழுத்தார்களோ அந்தப் பண்ணையடிமைகளுக்குக் கூட வேலையும், கால்வயிறுக் கஞ்சியும் கொடுக்க முடியாமல் நிலவுடைமை ஆளும் வர்க்கம் திணறியது. பழைய உலகம் அழுகியபோது புதிய உலகமும் பிறப்பதற்காகப் போராடிக் கொண்டிருந்தது.

புதிய கடல் வழிகள் அறியப்பட்டன. நீராவி - விசைத்தறி எந்திரங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. சிறு, நடுத்தர பட்டறைத் தொழிற்சாலைகள் தோன்றி சந்தைக்கான உற்பத்தியைத் தொடங்கின. வேலை இழந்த பண்ணையடிமைகள் நகரத்தை நோக்கிப் படையெடுத்தனர். அரசியல் அரங்கில் திருச்சபை, நிலப்பிரபுக்கள், பேரரசர்கள் ஒருபுறமும்; சிற்றரசர்கள், வணிகர்கள், பட்டறை முதலாளிகள் மறுபுறமும் முரண்படத் தொடங்கினர். மத அரங்கில் ஜெர்மனியின் மார்டின் லூதர் திருச்சபையை எதிர்த்து புராட்டஸ்டன்டு மதத்தை தோற்றுவித்தார். திருச்சபையின் மண்ணுலக ராஜ்ஜியத்தில் மூன்றிலொரு பங்கு பிரிந்து சென்றது. அறிவியலறிஞர்களினால் விண்ணுலக ராஜ்ஜியமும் தகர்க்கப்பட்டது. நிலவுடைமைச் சமூகத்தை அழித்து 18 ஆம் நூற்றாண்டில் நடைபெற இருந்த முத

**எத்தகைய ஒரு புரட்சியினை உருவாக்கப் போகிறோம் என்பதை மறுமலர்ச்சிக்கால மாவீரர்கள் எவரும் அறிந்திருக்கவில்லை. அவ்வகையில் அவர்கள் வரலாற்றின் கருவியாகச் செயல்பட்டனர். வரலாற்றுணர்வை விளக்குகின்ற தத்துவமும், சமூக அறிவியலும் அப்போது குழந்தைப் பருவத்திலிருந்தன.**

லாளித்துவ புரட்சியின் கொதிநிலைக் களனாக இருந்த இக்காலம் 'மறுமலர்ச்சிக் காலம்' என்று வரலாற்றில் புகழப்படுகிறது.

மறுமலர்ச்சிக்கால அறிஞர் பெருமக்களைத்தான் மார்க்சியப் பேராசான் ஏங்கெல்ஸ் மாபெரும் மனிதர்கள் என்று புகழ்ந்துரைக்கிறார். விரிவாகப் பயணம் செய்வதிலும், பன்மொழிப் பயிற்சியிலும், பல்துறைத் திறமைகளிலும் ஈடுபாடு கொண்ட அம்மாமனிதர்கள் பேசியும், எழுதியும், வாளெடுத்தும் தம் காலப் போராட்டத்தில் பங்கேற்றனர். படிப்பறை ஆராய்ச்சி மட்டும் செய்வது அப்போது இழிவாகக் கருதப்பட்டது. இத்தகைய மறுமலர்ச்சிக் கால அறிவியலாளர்களில் கலிலியோவும் ஒருவர்.

எத்தகைய ஒரு புரட்சியினை உருவாக்கப் போகிறோம் என்பதை மறுமலர்ச்சிக்கால மாவீரர்கள் எவரும் அறிந்திருக்கவில்லை. அவ்வகையில் அவர்கள் வரலாற்றின் கருவியாகச் செயல்பட்டனர். வரலாற்றுணர்வை விளக்குகின்ற தத்துவமும், சமூக அறிவியலும் அப்போது குழந்தைப் பருவத்திலிருந்தன. இயற்கையை, அதன் இயக்கத்தை, தனித்தனித் தோற்றங்களாக மாறா நிலையில் வைத்துப் பார்த்த அன்றைய அறிவு, சமூகத்தை புரிந்து கொள்ளவும் அந்தப் பார்வையையே பயன்படுத்தியது.



ப்ரெக்ட்

எனவேதான் திருச்சபையையும், விவிலியத்தையும் மனதார ஏற்றிருந்த கலிலியோ தன் அறிவியல் ஆய்வுகளை திருச்சபை ஏன் எதிர்க்க வேண்டும் என்பதை முற்றிலும் அறிந்திருக்கவில்லை. அப்போது முளைவிடத் தொடங்கியிருந்த முதலாளித்துவ சமூகமும், முகிழ்த்து வந்த தெளிவற்ற வர்க்கப் போராட்டமும் கலிலியோவின் குழப்பத்தை நமக்கு உணர்த்தும்.

ஆயினும் பிரெக்டின் இன்னொரு கலிலியோ இத்தகைய குழப்பங்களுக்கு விடை தருகிறார். காரணம் மறுமலர்ச்சி காலம் தொட்டு இன்றைய நவீன காலம் வரையும், இனிமேலும் வரக்கூடிய ஒரு அறிவியலாளனின் வாழ்க்கை இயக்கத்தை இந்த புதிய கலிலியோவிடம் காண்கிறோம். தத்துவத்திற்கும் - அறிவியலுக்கும், அறிவியலுக்கும் - சொத்துடமை வர்க்கச் சமூகத்திற்கும், தூய அறிவியல் விதிகளுக்கும், சமூக அறிவியலின் தேவைகளுக்கும், உள்ள முரண்பாடுகளை பொருத்தமான காட்சியமைப்புகளுடனும், உயிரோட்டமான உரையாடலுடனும், அழகான நகைச்சுவையுடனும், இயல்பான துணைப் பாத்திரங்களின் சித்தரிப்புடனும் பிரெக்ட் இந்நாடகத்தைப் படைத்திருக்கிறார்.

தத்துவத்தை உயிராகவும் நடைமுறையை உடலாகவும் கொண்ட மார்க்சியத்தின் உலகக் கண்ணோட்டத்தைக் கற்றுத் தேர்ந்த ஒருவரே இத்தகைய வரலாற்றுணர்வு கொண்ட, கலையழகு மிளிருகின்ற ஒரு இலக்கியத்தைப் படைக்க முடியும். பிரெக்ட் வரலாற்றுக் கலிலியோவை இன்றைய நவீன அறியவியலாளனையும் இந்நாடகத்தில் இணைத்து ஒன்றாகப் படைத்திருப்பதன் காரணம் என்ன?

மேற்கண்ட முரண்பாடுகளிலிருந்து அறிவியலின் ஆரம்ப கால அவஸ்தையையும், நவீன அறிவியலின் அவலநிலையையும், நேர்மறையில் ஒரு அறிவியலாளனது இலக்கணங்கள் என்ன என்பதையும் வாசகர்கள் உணர வேண்டும் என்பதே நாடகத்தின் கருவும், நாடகாசிரியரின் நோக்கமும் ஆகும்.

●●●

✱ அறிவுத் தேடலுக்காக அல்ல ஆடம்பரக் கனவுகளுக்காகவே கல்வி என்பதற்கு இன்றைய கணினி மோகம் ஒரு எடுத்துக்காட்டு. அன்றோ அந்த மோகம் அறிவியலாக இருந்தது. தனக்கு விருப்பமில்லாமல் தாயாரின் தொந்தரவிற்காக அறிவியல்

www.padippakam.com

கற்க வரும் பணக்கார வாலிபனிடம் கலிலியோ கேட்கிறார், 'இயற்பியலை ஏன் கத்துக்கணும்? குதிரை வளர்ப்பைப் பத்தி படிக்கலாமே?'

★ கலிலியோவின் தொலைநோக்கியை வைத்து பார்க்கும் கனவான்களில் ஒருவர், 'இனி மொட்டை மாடியில் நம் வீட்டுப் பெண்கள் குளிக்கக் கூடாது' என்கிறார். மற்றொருவர் தொலைவில் படகில் தெரியும் மீனை பொரித்துச் சாப்பிட்டால் எப்படியிருக்கும் என்கிறார். இன்னுமொருவர் தொலைநோக்கிக்கு என்ன விலை வைக்கலாம் என்று வியாபாரக் கணக்குப் போடுகிறார். வானியல் ஆய்வுகளுக்குப் பயன்பட வேண்டிய தொலைநோக்கி ஒரு விளையாட்டு - வியாபாரப் பொருளாக பயன்படுவது பற்றி கலிலியோ நொந்து கொள்கிறார். இன்றும் பழிவாங்கும் அமெரிக்க டயனோசர்கள், வீட்டு வேலை செய்யும் ஜப்பானிய ரோபட்டுகள் ஜாதகம் கணிக்கும் இந்தியக் கம்ப்யூட்டர்கள் ஆஸ்திரேலிய யானை குட்டி போட்டதை உலகச் செய்தியாக காட்டும் தொலைக்காட்சிகள் என இந்த விளையாட்டு தொடருகிறது: அதனால்தான் ஒரு அறிவியலாளன் தன் ஆய்வையே ஒரு வியாபாரமாக செய்வதற்கு மட்டும் சுதந்திரம் உண்டு என்று கலிலியோ புலம்புகிறார்.

★ தொலைநோக்கி மூலம் பால்வெளி மண்டலத்தின் நட்சத்திரக் கூட்டத்தை நண்பனுக்குக் காட்டுகிறார் கலிலியோ. 'திருச்சபையின் அறிவை எதிர்க்கும் இந்தக் காட்சியை யார் நம்புவார்கள்', நண்பர் கவலையடைகிறார். ''நாளைக்கு பயணம் என்றால் இன்று தன் சுமையிழுக்கும் கழுதைக்கு ஒரு கட்டுப் புல்லை அதிகமாகப் போடும் கிழவி, மழை வருவதை உறுதி செய்து கொண்டு தலையில் குல்லா போடும் பள்ளிச் சிறுவன் என சாதாரண மக்கள் - தங்கள் வாழ்க்கையில் பகுத்தறிவைப் பயன்படுத்தும் பாமரர்கள், அறிவியல் ஆய்வுகளை நிச்சயம் ஏற்பார்கள்'', நம்பிக்கை கொள்கிறார் கலிலியோ. திருப்தியுறாத நண்பரோ, 'உன்னைப் பார்க்கும் போது சிதையின் மேல் நிற்பது மாதிரி தெரியுது' (புருனோவை திருச்சபை எரித்ததை நினைக்கிறார்) என்று பதறுகிறார்.

★ இங்கே சமஸ்கிருதத்தைப் போல ஐரோப்பாவில் லத்தீன் ஆதிக்கம் செலுத்திய காலம். கலிலியோவின் சீடரும், கண்ணாடிக்குச் சாணைபிடிக்கும் தொழிலாளியுமான ஒருவருக்கு லத்தீன் தெரியாது. அறிஞர் பெருமக்கள் லத்தீனில் விவாதிக்கும் போது கலிலியோ (இத்தாலிய மொழி) நமது மொழியிலேயே விவாதிக்க வேண்டும் என மல்லுக்கட்டுகிறார். அறிஞர்களோ அறிவின் மேன்மையே பாழ்பட்டுவிடும் என்று பார்ப்பனர்களைப் போல சாபமிடுகிறார்கள். போப்பிடம் பேசும் இன்க்விசிஷன் தலைவனோ, 'இந்தக் கயவன் கலிலியோ தன் வானசாஸ்திர நூல்களை லத்தீனில் எழுதாமல் செம்படவச்சி பாஷையில், ஆட்டுரோமம் விற்பவர்களின் பாஷையில் எழுதுகிறான்' என கோபம் கொள்கிறான்.

★ தன் ஆய்வு வசதிக்காக அருகாமை நாட்டிற்கு குடிபெயர விரும்பும் கலிலியோ அந்நாட்டின் (10 வயது சிறுவன்) அரசனுக்கு முழு அடிமைத்தனத்தோடும் மிகுந்த பணிவுடனும் ஒரு கடிதம் எழுதுகிறார். பின்பு 'என்னை மாதிரி ஒருவன் கவுரமான பதவியை அடையணும்னா குப்புறப்படுத்து கும்புடு போடறதைத் தவிர வழியில்லப்பா' என்று விளக்கம் தருகிறார். பில்கேட்சை இதயக் கோவிலில் வழிபடும் கணினி இளைஞர்கள், இந்த வசியத்தில் மட்டும் கலிலியோவை மிஞ்சுகிறார்கள்.




★ அரிஸ்டாட்டிலின் விளக்கம் தவிர வேறு எதையும் ஏற்கமாட்டோம் என்று தொலைநோக்கி வழியாகக் கோள்களை பார்க்க மறுக்கும் அறிஞர்களிடம், 'உண்மைகள் பிறப்பது அதிகாரத்தின் அதட்டலிலிருந்து அல்ல; நடைமுறை அனுபவங்களிலிருந்தே அவை உதிக்கின்றன' என்று சீறுகிறார் கலிலியோ. ''பண்டிதராகிய நீங்கள் உங்களின் பத்தாம்பசலித்தனமான கருத்துக்களை கைவிட வேண்டும்'' அவரது சீடரான கண்ணாடித் தொழிலாளியும் வாதிடுகிறார்.

★ தங்களது அறிவார்ந்த விசயங்களில் ஒரு தொழிலாளி எப்படித் தலையிடலாம் என்று கோபமடையும் அறிஞர்களிடம், பல்வேறு உழைக்கும் பிரிவினரிடம் தான் கற்றுக் கொண்டதைப் பட்டியலிடும் கலிலியோ, அம்மக்கள் மட்டுமே ஐம்புலன்களையும் பட்டறிந்து உண்மைகளை ஏற்பவர்கள், அந்த உண்மைகள் தங்களை எங்கு கொண்டு செல்லுமோ என்று கவலை கொள்ளாதவர்கள் என்கிறார். இன்றும் அறிவை அதிகாரத்தோடு பயன்படுத்தும் கல்லூரிப் பேராசிரியர்களும் அரசு அதிகாரிகளும் சாதாரண மக்களை ஆட்டு மந்தையாகவும், கீழ்ப்பணிவையே கடமையாகக் கொண்ட அடிமைகளாகவும்தானே கருதுகிறார்கள்!

★ பிளேக் நோயின் வருகையினால் நகரமே காலியாகிறது. காலி செய்ய இயலாத ஆதரவற்றவர்களுடன் கலிலியோவும் தங்குகிறார். தனது ஆய்வை விட்டகல அவருக்கு மனம் வரவில்லை. ஆனால் ''எந்த வசதியுமில்லாத இந்தியாவில், தம் மாத்துண்டு சம்பளத்தை வைத்துக் கொண்டு என்ன செய்ய முடியும்'' என்று அமெரிக்கா போவதை நியாயப்படுத்துகிறார்கள் ஐ.ஐ.டி.யின் இளம் விஞ்ஞானிகள்.

★ ''மனித குலத்தைச் சுமந்திருக்கும் இப்பூவுலகை அண்டவெளியின் ஒரு சாதாரண கோளாக்கி பூலோகத்தையும், பரலோகத்தையும் வேறுபாடில்லாமல் ஆக்கிவிட்டீர்களே இன்னும் சில நாட்களில் மனிதனும் மிருகமும் ஒன்றுதான் என்று கூறுவீர்களோ'' என்று கேட்கும் பாதிரி ஒருவனுக்கு கலிலியோ தரும் பதில் சுவாரசியமானது! எப்போதும் சட்டைப் பையிலிருக்கும் தனது கல்லைக் கீழே போட்டு, ''இல்லை சுவாமி (மனிதனுக்கும் கீழோ இந்த அற்பக் கல்) இது... எப்படிக் கீழே விழ முடியும்? அதை நான் மேலே எழும்பச் செய்கிறேன்'' என்று குனிந்து எடுக்கிறார். பொறுக்க முடியாத பாதிரி தரும் பதில் 'திமிர் பிடித்த பன்றி'

★ அறிவியல் ஆர்வம் காரணமாக கலிலியோவின் மாணவராகிறான் ஒரு இளம் பாதிரி. தனது பெற்றோரைப் போன்ற பரம ஏழைகள் தமது துன்ப துயரங்களைப் பொறுத்துக் கொண்டு வாழ்வது எதனால், இவையெல்லாம் விதி எனக் கற்பித்து 'நம்பிக்கை'யளிப்பது விவிலியமும், திருச்சபையும் தானே, அவற்றைக் கேள்வி கேட்டால் பெரும்பான்மை உழைக்கும் மக்கள் எப்படி 'அமைதியாக' வாழ முடியும், என்று வாதிடுகிறான் அந்த மாணவன். அது அறியாமையின் அமைதி, தனது தொலை நோக்கி கொண்டு கோள்களை மட்டுமல்ல ஆளும் வர்க்கத்தையும் நெருக்கமாகப் பார்க்கும் மக்கள் தங்கள் துயரங்களுக்குக் காரணம் யார் என்பதைப் புரிந்து கொள்வார்கள், 'ஐயம் கொள் ஆய்ந்து பார்' என்ற நமது ஆய்வுமுறை அவர்களுக்கு இகலோக விடுதலையைக் கொண்டு வரும் என வேறு ஒரு இடத்தில் பதிலளிக்கிறார் கலிலியோ.

www.padippakam.com

★ ''நமது ஆய்வு உண்மையாக இருந்தால் நம்முடைய உதவியில்லாமல் அது வெற்றியடையணுமே'' என்கிறான் மாணவன். ''இல்லை, நாம் எந்த அளவு வெற்றி பெறுகிறோமோ அந்த அளவுக்கே உண்மையும் வெற்றி பெறும்'' என்கிறார் கலிலியோ. அதற்கு மக்களிடமிருக்கும் 'புனிதமான பொறுமையை' 'நியாயமான கோபமாக' மாற்ற வேண்டும். இந்த உண்மை தெரியாமல் இருப்பவன் முட்டாள்; தெரிந்தே பொய் என்று சொல்பவன் அயோக்கியன் என்று சினமடைகிறார் கலிலியோ.

★ 'ஹெரெஸ் என்ற கவிஞனின் பாடல் ஒன்றில் 'இருக்கை' என்ற சொல்லை எடுத்துவிட்டு 'மேசை' என்ற சொல்லை போடச் சொன்னால் அந்தக் கவிஞன் சம்மதிப்பானா? என்னுடைய பிரபஞ்சக் கோட்பாட்டில் வளர்ச்சி - தேய்வு இல்லாத ஒரு வெள்ளிக் கோளைக் கொண்டு வந்து பொருத்தினால் என்னுடைய அழகியல் உணர்வு புண்படாதா என்று அறிவியலின் விதியை அழகியலோடு உவமை சேர்த்து ஒரு கவிதைக் கேள்வியைக் கேட்கிறார் கலிலியோ.

★ ''அவர்கள் சிரிக்கும்போது எனக்கு வயிறு கலங்குகிறது, ஏன் அப்படிச் சிரிக்கிறீர்கள் புரியவில்லையே'' கலிலியோவின் வேலைக்காரம்மாள் கேட்கிறார். ''குருமார்களுக்கு ஆலய மணி ஒலிப்பது எப்படியோ அப்படித்தான் இயற்பியல் விஞ்ஞானிகளுக்கு சிரிப்பு என்று அப்பா அடிக்கடி கூறுவார்'' பதிலளிக்கிறார் கலிலியோவின் மகள். ஆன்மீகத்தின் பொய்யொழுக்கமும், அறிவியலின் உண்மைக் கொண்டாட்டமும் அழகிய முரண் உவமையாகச் சேர்ந்திருக்கக் காரணம், இரண்டும் இரு பிரிவினரிடத்தில் கொண்டிருக்கும் முக்கியத்துவம் தான்.

★ ''நமது ஆய்வை முழு நம்பிக்கையோடு அல்ல, ஓரளவு நம்பிக்கையோடு தான் தொடங்க வேண்டும். நமது ஊகமும், முடிவுகளும் மாறலாம். ஒவ்வொன்றையும் துருவித் துருவித் திரும்பத் திரும்பக் கேள்விகளை எழுப்ப வேண்டும். இன்று சரி எனக் கண்டதை நாளையே மறுக்க வேண்டி வரலாம். நமது வேகம் நத்தையைப் போல மாறலாம். இறுதியில் தோற்றுப் போய் குப்புற விழலாம். சோர்வு வரலாம். ஆயினும் மீண்டும் மீண்டும் ஆய்வு. அதுவே நமது தெளிவான இறுதி முடிவைத் தரும். அப்போது அதை எதிர்ப்பவர்களை இரக்கம் காட்டாமல் எதிர்ப்போம்'' என்று அறிவியல் ஆய்வின் வழிமுறையைக் கூறுகிறார் கலிலியோ. தத்துவத்துக்கும் நடைமுறைக்கும் உள்ள உறவைப் புரிந்து, முரணை வென்று வரும் புரட்சி நமது நினைவுக்கு வருகிறது.

★ திருச்சபையின் வீட்டுச்சிறைக் கண்காணிப்பில் தனது இறுதி நாட்களைக் கழிக்கும் கலிலியோ தனது பழைய மாணவனைச் சந்திக்கிறார். தன்னைப் பற்றியும், அறிவியலைப் பற்றியும் சுயவிமரிசனம் செய்கிறார். ''மனிதகுலத்தின் சுமைகளைக் குறைப்பதுதான் அறிவியலின் ஒரே இலக்காக இருக்க வேண்டும். அறிவியல் அறிவியலுக்கே என்று தூயகலைவாதம் பேசினால் அறிவியல் முடங்கிவிடும்; நமது கண்டுபிடிப்புகளும் மனித குலத்தை அடக்குவதற்கும், பின்னடையச் செய்வதற்கும் தான் பயன்படும்; இத்தகைய அறிவியலாளர்களின் வெற்றிக் குரல் மனிதகுலம் பயத்தால் எழுப்பும் கூக்குரலாக எதிரொலிக்கும்.''

**''மனிதகுலத்தின் சுமைகளைக் குறைப்பதுதான் அறிவியலின் ஒரே இலக்காக இருக்க வேண்டும், அறிவியல் அறிவியலுக்கே என்று தூயகலைவாதம் பேசினால் அறிவியல் முடங்கிவிடும்; நமது கண்டுபிடிப்புகளும் மனித குலத்தை அடக்குவதற்கும், பின்னடையச் செய்வதற்கும் தான் பயன்படும்; இத்தகைய அறிவியலாளர்களின் வெற்றிக் குரல் மனிதகுலம் பயத்தால் எழுப்பும் கூக்குரலாக எதிரொலிக்கும்.''**

''அறிவியலாளனான எனக்கு ஒரு வாய்ப்பிருந்தது. என்கால அறிவியல் சாதாரண மக்களையும் சென்றடைந்தது. இந்த அரிய சூழ்நிலையில் நான் ஒருவன் உறுதியாகப் போராடியிருந்தால் அது மாபெரும் விளைவுகளை உருவாக்கியிருக்கும். மருத்துவர்கள் எடுத்துக் கொள்ளும் 'ஹிப்போக்ரெடசின் உறுதி மொழி' போன்று அறிவியலாளர்களும் மனிதகுல மேன்மைக்காக மட்டுமே எங்களின் ஞானத்தைப் பயன்படுத்துவோம் என்று உறுதிமொழி மேற்கொள்ளும் நிலை உருவாகியிருக்கும். ஆனால் இன்றைய நிலையில் எதற்கு வேண்டுமானாலும் தங்களை விற்றுக் கொள்ளும், சில்லறைச் சுகங்களுக்கு வாய்ப்பளிக்கும் அடிமை விஞ்ஞானிகளின் ஒரு தலைமுறையை நாம் எதிர்பார்க்கலாம். அவ்வளவு தான்.. என்னுடைய தொழிலுக்கு நான் துரோகம் செய்துவிட்டேன். என்னைப் போன்ற துரோகிக்கு அறிவியலாளர்களின் குழுவில் இடமில்லை''.

●●●

பிரெக்டின் நாடகத்திலிருந்து எதைச் சொல்வது எதை விடுவது என்ற குழப்பத்தாலும், பக்க அளவு கருதியும் இந்நூலறிமுகத்தை முடித்துக் கொள்கிறோம். இத்தகைய கருத்துச் செறிவான நூலை விறுவிறுப்புடனும்,நயத்துடனும், அதே சமயம் எளிமையுடனும் தி.சு. சதாசிவம் மொழி பெயர்த்திருக்கிறார். அவருக்கும் இந்த அரிய நூலை வெளியிட்ட அலைகள் பதிப்பகத்தாருக்கும் நமது வாழ்த்துக்களைத் தெரிவிப்போம். நாடகத்தைச் செறிவுடன் உணரும் வாசகருக்கு ஏராளமான முக்கியமான செய்திகள் இருக்கின்றன. அதற்கு கீழ்க்கண்ட நூல்களைச் சேர்த்துப் படிப்பது பயனளிக்கும்.

1. ஏங்கெல்சின் **'இயற்கையின் இயக்கவியல்'** என்ற கட்டுரை.

2. ஏங்கெல்சின் **'கற்பனாவாத சோசலிசமும் விஞ்ஞான் சோசலிசமும்'** என்ற கட்டுரை.

3. நவீன ஐரோப்பிய வரலாறு.

4. ஜார்ஜ் தாம்சனின் **'மனித சமூக சாரம்'**

5. மாவோவின் **'அறிவுத் தோற்றம்'** பற்றிய கட்டுரை.

நாடகத்தைப் படித்து முடித்ததும் வாசகர்கள் சிந்திக்க வேண்டிய விசயங்களும் நிறைய இருக்கின்றன. அன்று திருச்சபையால் கட்டி வைக்கப்பட்ட அறிவியல் இன்று எதனால் கவ்வப்பட்டிருக்கிறது? இன்று கோள்களின் சுழற்சி உட்பட ஏராளமான அறிவியல் உண்மைகள் மக்களுக்குத் தெரிந்திருந்தால் அறியாமையும், மூடநம்பிக்கையும், ஏழ்மையும் இன்னும் ஏன் அகலவில்லை? இந்தக் கேள்விகளுக்கு உங்களால் விடை காண முடிகிறதா?

இல்லையென்றால் மீண்டும் நாடகத்தைப் படியுங்கள்.

● வேல்ராசன்

| | | |
|---|---|---|
| நூல் | : | கெலிலியோ கெலிலீ |
| ஆசிரியர் | : | பெர்தோல்ட் பிரெக்ட் |
| தமிழில் | : | தி.சு. சதாசிவம் |
| விலை | : | ரூ. 60 |

வெளியிட்டோர் :
அலைகள்,
25 சிவன் கோயில் தெரு,
கோடம்பாக்கம், சென்னை - 24,
தொ.பேசி. 4815474

கிடைக்குமிடம் :
கீழைக்காற்று,
10, ஔலியா சாகிபு தெரு,
எல்லீசு சாலை, சென்னை - 2.
தொ:பேசி. 8412367

www.padippakam.com



கோடீஸ்வரன்:

# மூளை தயார் முண்டங்கள் தயாரா?

இந்தியாவின் தனியார் தொலைக் காட்சிகள், அறியாமை அரக்கனை சங்காரம் செய்திட இந்த நூற்றாண்டின் மின்னணு யுகத்தில் ''அறிவு அவதாரம்'' எடுத்து ஓங்கி நிற்கின்றன. அடித்துக் கொண்டு வரும் அத்தனை அலைவரிசை களிலும் அறிவை வளர்க்கும்(!) நோக்கமே நீக்கமற நிறைந்திருக்கிறது. மக்கள் கூட்டத்தை மேம்படுத்த மேனி களைத்துப் பாடுபட்டவர்கள் இப்போது இறுதியாக ஓர் உத்தியைக் கண்டுபிடித்திருக்கிறார்கள்.

ஒவ்வொரு தனிமனிதனுக்கும் அறிவின்(!) அடிப்படையில் கோடிகள் கொட்டிக் கொடுத்து அவனை எப்படியாவது சமூக உயர்நிலைக்குக் கொண்டு வந்து விடுவது என்பதுதான் அது. ஓர் ஐந்தாண்டு திட்டத்தை விடப் பொறுப்புணர்வோடும், இலக்குத் துல்லியத்தோடும் ''அலைவரிசை முதலாளிகள்'' அறிவை சகாய விலையில் சாமானியர்களுக்கும் கிடைக்கச் செய்கி றார்கள். ஸ்டார் டிவி (குரோர்பதி), ஜி. டிவி (சவால்தஸ் குரோர்கா), சன் டிவி (கோடீஸ்வரன்) என்பவையே அந்த 'அறிவின் அவதாரங்கள்'

ஏன் இந்தத் திடீர் 'அறிவுப் புரட்சியை' தனியார் அலைவரிசைகள் பிடித்துக் கொண்டன? இதன் பின்னணி மிகவும் வஞ்சகமானதும், அதே நேரத்தில் கூர்ந்து ஆய்வு செய்யப்பட வேண்டிய அளவுக்கு அடிஆழத்தில் ஆபத்தை உடையதும் ஆகும்.

உண்மையில் அறிவு என்பது இந்த ''கோடி ரூபாய் சூதாட்டங்கள்'' ஏற்படுத்தும் கருத்துதானா? இல்லை. அறிவு என்பதன் ''நடைவண்டி நிலையோடு'' இவர்கள் நிகழ்ச்சிகள் ஓய்ந்து விடுகின்றன. இந்த நிகழ்ச்சிகளின் கருத்தமைவின் படி, ஒரு கேள்விக்கு சரி தவறு என்று விடை சொல்வது அல்லது நான்கு விடைகளில் பொருத்தமான ஒன்றைப் பொறுக்கி எடுப்பது - இதைத்தான் நாம் 'அறிவின் நடைவண்டி நிலை' என்கிறோம்.

எப்படி எனில் தகவல்களைப் பதிவு செய்து சேகரம் பண்ணுவது மூளையின் ஒரு பணி. ஆகவே அதை அப்படியே உரிய நேரத்தில் உதிர்ப்பது என்பதை கணிப் பொறியே செய்து விட முடியும். மனித மூளையை இதை விட மகத்தான முறையில் வீணடிக்க முடியாது.

அறிவு என்பது ஒவ்வொரு கால கட்டத்தில் ஒவ்வொரு நாட்டுச் சூழலுக் கேற்ப ஒவ்வொரு விதமாய்க் கற்பிதம் செய்யப்பட்டு வந்திருக்கிறது. சான்றாக அரசனுக்கு - போர், அரசன் நலம் - பற்றி மட்டுமே அறிவுரை வழங்கிய அதிகார மையச் சார்புடைய ஒன்றும் அறிவு என வழங்கப்பட்டிருக்கிறது. சிறந்த உள்ளத்தீம் பொதிந்த செய்யுள்கள் (குறிப்பாக வெண்பா) இயற்றுவது என்பதும் அறிவாளியைத் தீர்மானிக்கும் அளவு கோலாக இருந்திருக்கிறது.

> உண்மையில் அறிவு என்பது இந்த ''கோடி ரூபாய் சூதாட்டங்கள்'' ஏற்படுத்தும் கருத்து தானா? இல்லை. அறிவு என்பதன் ''நடைவண்டி நிலையோடு'' இவர்கள் நிகழ்ச்சிகள் ஓய்ந்து விடுகின்றன.

முகலாயப் பேரரசின் காலகட்டத்தில் சிறந்த 'சதுரங்க ஆட்டக்காரரே அறிவாளி' என்கிற அபிப்ராயங்கள் நிலவியதுண்டு. 15-ஆம் நூற்றாண்டுக்குப் பிறகு தமிழர் வாழும் பகுதிகளில், ''கவனகர்கள்'' (பதின், பதினெண்) மிகப் பெரிய அறிவாளிகளாக மனப்பாட சக்தியால் மரியாதை பெற்றதுண்டு.

வெள்ளைக்காரர்களின் காலனிய ஆட்சியில் அவர்களின் ''குமாஸ்தாக் கல்வியின்'' மனப்பாடக் கிளிகளாக விளங்கியவர்கள் மிகப்பெரிய அறிவாளி களாகப் பட்டங்களோடு பவனி வந்திருக் கிறார்கள். சான்று ஜஸ்டிஸ், ராவ்பகதூர், திவான் பகதூர், சர் போன்றவை.

இதன் தொடர்ச்சியாக இன்று ஒரு கேள்விக்கு விரைவாக விடைசொல்லும் ஒரு நபரை அறிவாளி என மின் - ஊடகங் கள் முன் மொழிய காகித ஊடகங்கள் வழிமொழிகின்றன. இன்றைய சமூகவியல் வரையறுப்பின்படி அறிவு என்பது நான்கு கூறுகளை உடையது அவை.

1. தகவல்களைப் புலன் வழி பதிவு செய்தல்

2. அவற்றை எண்ணங்களாக, சிந்தனை களாக மாற்றுதல்

3. சிந்தனைகளின் வழி சூழலுக்குத் தகவமைதல் - தகவமைத்தல்

4. கடந்த அனுபவங்களில் இருந்து நிகழ்வுக்குப் பாடமும் எதிர்கால முன்ன கர்வுக்கு தர்க்கபூர்வமான ஊகங்களை மேற்கொள்ளல்: செயல்பட உந்துதல்.

ஆனால் இந்த 'தகவல் திமிர் பிடித்த' சூதாட்டமோ இவற்றின் தொடக்க நிலைத் தகுதியான தகவல்களைப் பதிவு செய்து கொண்டு அவற்றை உதிர்ப்பது என்பதை மட்டுமே அறிவுத் திரவத்தின் உச்சபட்ச கொதிநிலை என்கிறது. அதற்கான

படிப்பகம்

www.padippakam.com

சூதாட்டப் பரிசு பார்வையாளர்களிலோ, அல்லது பங்கேற்பாளர்களிலோ உள்ள சமூகவியல் தெளிவு உள்ளவர்களையும் ஈர்க்குச்சியைத் துடுப்பாகப் பயன்படுத்த நிர்ப்பந்திக்கிறது.

இதன் இன்னொரு சகிக்க முடியாத விளைவு சில மீடியா பண்டிதர்கள் இந்நிகழ்ச்சிகளுக்கு கேள்வி - பதில் தயாரித்து தரும் சூதாட்டத் தரகர்களாக மாறியிருப்பதுதான். இந்தத் தரகு வேலைக்கு அறிவின் பேரால் கோடி கள் கொட்டிக் கொடுக்கப்படுகின்றன. (சில தினமணி, இந்து வாசகர்கள் அதிலும் காலாவதியான தகவல்களைச் சுட்டிக் காட்டி தங்கள் அறிவின் அபாரத்தை மெச்சி தங்கள் முதுகைத் தாங்களே தட்டிக் கொள்கிறார்கள்.)

கடந்த சில ஆண்டுகளாகவே அழகிப் போட்டிகளின் வருகையை உச்சி மோந்து உயிர்சிலிப்பவர்கள் அப்போட்டிகளில் அறிவுக்கும் போதுமான அளவுக்கு இடம் அளிக்கப்படுகிறது என்றார்கள் (இங்கே அறிவின் பணயமாக வக்கிரம் காப்பாற்றப் படுவதைக் கவனிக்கவும்). அந்த நான்கே நான்கு கேள்விகள் எப்படி அழகியின் அறிவைத் தீர்மானிக்கப் போதுமானவை என்ற கேள்வியை சில காகிதப் புலிகளும் (வணிகப் பத்திரிகையாளர்கள்) கேட்டிருந்தார்கள்.

ஆனால் இன்றைக்கோ அறிவின் பெயராலேயே நடத்தப்படும் இப்போட்டிகள் குறித்து கொட்டாவி விடக் கூட வாய் திறக்க மறுக்கிறார்கள் இந்த மீடியாப் பண்டிதர்கள். ஒருவேளை வாய்திறந்தால் அதுவும் அறிவின் அவதாரம் பற்றிய கதாகாலட்சேபமாக இருக்கிறது.

இதில் சுவாரஸ்யமான இன்னொரு விஷயம் இந்நிகழ்ச்சிகளின் நடத்துநர்கள் அனைவருமே முன்னாள், இந்நாள் நட்சத்திரங்கள்.

நட்சத்திரங்களைக் காட்டி நடைபெறும் இந்தச் சூதாட்டத்திற்கான பொருளாதாரம் விளம்பர நிறுவனங்களிடம் இருந்து வசூலிக்கப்படுகின்றன. விளம்பர நிறுவனங்கள் பார்வையாளர்கள் அல்லது நுகர்வோர்களிடமிருந்து பல்முனை ஏய்ப்புகளின் மூலம் சூறையாடி விடுகிறார்கள். இந்த நிகழ்ச்சித் தயாரிப்பாளர்களையும் விளம்பர நிறுவனங்களையும் பொறுத்த வரை மக்கள் வெறும் பார்வையாளர்களும் வெறும் நுகர்வோர்களும் மட்டுமே.

அவர்களுக்கென தனித்த வாழ்க்கை, அலுவல், பிரச்சினைகள் என எதுவுமே இருக்காது. இருக்கவும் அனுமதியில்லை. பார்வையாளர்களின் மனத்தில் எப்போதும் ரீங்கரித்துக் கொண்டே இருக்கும் ஒரு குரல் (விளம்பரங்களில் ஒலிக்கும் கட்டையான குரல்) ''மெகா சீரியல்களில் இருந்து உங்களுக்கு விடுதலை இதோ பளிச்சிடும் வெண்மையில் சூதாட்டம்'' என்பதுதான் அது.

நட்சத்திர நடிகர்களைத் தூண்டில் புழுக்களாக்கி நீரில் மேயும் மீன்களை (மக்களை) தங்கள் குடுவைக்குள் சேகரிக்கிறார்கள் வியாபாரிகள். மத்திய தர வர்க்க மக்களுக்குத் தெரியுமா தூண்டில் புழுக்கள் மீனுக்கு இலவசம் அல்ல என்று?! இந்த நிகழ்ச்சிகளில் கேட்கப்படும் கேள்விகள் ஒரு தனிமனிதனின் மனப்பாடச் சக்தியை நினைவாற்றலைப் பரிசோதிப்பதாக மட்டுமே-அமைந்து விடுகின்றன. சான்றாக கல்பனா சாவ்லா எந்த மாநிலத்தைச்

## நீங்கள் கோடீசுவரனாக வேண்டுமா?


இந்த நிகழ்ச்சிகளைத் தயாரித்த முதலாளிகள் தெளிவாக ஒரு விசயத்தைப் புரிந்து வைத்திருந்தார்கள் - அல்லது நிகழ்ச்சி மூலம் புரிந்து கொண்டார்கள். எல்லோரும் பணத்தைத் தேடி ஓடுகிறார்கள் - கொஞ்சம் வரலாறு, கொஞ்சம் விளையாட்டு, கொஞ்சம் இசை, கொஞ்சம் சமையல் எல்லாவற்றையும் சேர்த்து நொதிக்க வைக்கும் ஒரு வித்தை மட்டும் தெரிந்தால் போதும்!

உலகம் முழுவதும் இந்த மோகம் பிடித்து ஆட்டுகிறது. கொலம்பியாவில் உள்ள மருந்துக் கம்பெனிகள், அரச குடும்பங்கள், லெபனீயர்கள் என்று பலதரப்பையும் பிடித்துக் கொண்டுவிட்டது.

இந்தியாவில் பிழிந்து எடுத்து விடுகிறார்கள்: ஜப்பானில் கேள்விகள் படு சுலபம். அங்கே ரொம்பக் கஷ்டமான கேள்வி. என்ன தெரியுமா? ஏப்ரல் முட்டாள்தினம் எந்த மாதத்தில் வருகிறது? ஜனவரியில், பிப்ரவரியில், மார்ச்சில் அல்லது ஏப்ரலில்.

''உங்களில் யார் கோடீஸ்வரர்?'' என்ற இந்தி நிகழ்ச்சி ஸ்டார் டிவி வலைப் பின்னல் சொந்தக்காரர் ராபர்ட் முர்தோக்கினுடையது. போட்டியில் கலந்து கொள்கிறவர்களுக்கு கோடி கிடைக்கிறதோ இல்லையோ, அமிதாப்பச்சன் போன்ற பிரபல நடிகரோடு ஒரு மாலை நேரத்தில் பொழுதைப் போக்குகிற பரவசம், ஆனந்த லகரி!

பெரியண்ணன் என்று அழைக்கப்படுகிற பச்சன் இந்த நிகழ்ச்சிக்காகவே வண்ண நூலிழைகளால் பின்னப்பட்ட கோட்டு - சூட்டுகளை மாட்டிக் கொண்டு வருகிறார். இந்தப் பிரமாண்டத்தைப் பார்த்து கலந்து கொள்ள வந்த சிலருக்கு வாய் திறந்து பேசக் கூட முடியவில்லையாம். அத்தனைப் பிரமிப்பு!




படிப்பகம்

www.padippakam.com

# வை ராஜா வை

சந்தைகளிலும், சினிமாக் கொட்டகைகளின் வாயிலிலும் ''வை ராஜா வை'' என்று மூணு சீட்டுக்காரனும்,நாடா குத்துபவனும் கூப்பிடுவதைப் பார்த்திருப்பீர்கள். ஆர்வம், தயக்கம், பயம் என்ற பல்வேறு மன நிலைகளில் உள்ள பார்வையாளர்கள் 10,20 பேர் அவனைச் சுற்றிக் குவிந்து நிற்பதையும் கண்டிருப்பீர்கள்.

இதே காட்சியை இப்படிக் கொஞ்சம் கற்பனை செய்து பாருங்கள். பல ஆயிரம் வாட் விளக்கொளியில் உயரமானதொரு மேடையில் உட்கார்ந்திருக்கிறான் மூணு சீட்டுக்காரன். கீழே அரங்கத்தில்சுமார் ஒரு கோடி மக்கள், தாத்தா முதல் பேரன் வரை குடும்பம் குடும்பமாக, கை வேலையைப் போட்டுவிட்டு ஓடிவந்து வேடிக்கை பார்க்க நிற்கிறார்கள். தாங்களும் பங்கேற்பதற்கு முண்டியடிக்கிறார்கள்.

கற்பனை செய்து பார்க்கவே வெட்கமாக இல்லையா? தமிழகத்திலும், இந்தியா முழுவதும், ஏன் உலகின் 80 நாடுகளில் நடந்து கொண்டிருப்பது இதுதான். உலகிலேயே அதிகமான பார்வையாளர்கள் இந்தியாவில்தானாம்.

சூது ஒன்றும் நமக்குப் புதிதில்லை. பெண்டாட்டியைப் பணயம் வைத்து சூதாடிய அரசன் முதல் அரசே முன்னின்று நடத்தும் லாட்டரிச் சீட்டு வரை, ஒரு வெகு நீண்ட பாரம்பரியம் நமக்கு உண்டு என்பது உண்மைதான். எனினும் ''இது ஒரு ஒழுக்கக் கேடு'' என்ற மதிப்பீடு மக்களிடம் நிலவியதன் காரணமாகத்தான் ''விழுந்தால் வீட்டுக்கு - விழாவிட்டால் நாட்டுக்கு'' என்றொரு புதுமொழியை உருவாக்கி சூதாட்டத்தையே நாட்டுப்பற்றுள்ள நடவடிக்கையாகச் சித்தரிக்க வேண்டிய அவசியம் அரசுக்கு ஏற்பட்டது.

தமிழக அரசின் லாட்டரிச் சீட்டு முழக்கத்தை 'கோடீசுவரன்' முழக்கத்தோடு ஒப்பிட்டுப் பாருங்கள். ''நான் ரெடி நீங்க ரெடியா'' என்று கேட்பது பார்வையாளர்களை ஏதோ களத்துக்கு அழைப்பது போலவும் சவால் விடுவது போலவும் இல்லையா?

ஆம். குலுக்கல் சீட்டில் பரிசு பெற விரும்பும் 'அதிருஷ்டசாலி'களுக்கு இங்கே வேலையில்லை. 'திறமைசாலி'களுக்கு மட்டுமே வேலை. நான்கு விடைகளில் சரியானதை ஊகித்துச் சொல்வதும் ஒரு திறமைதானே! எந்தக் குதிரை ஜெயிக்கும் என்று ஊகிப்பதும், எந்த நிறுவனத்தின் பங்குகள் விலை போகும் என்று ஊகிப்பதும் ஒரு திறமையில்லாமல் சாத்தியமில்லையல்லவா?

''ஐயோ, எவ்வளவு ஈசியான கேள்வி. இதுகூடத் தெரியல பாரு'' என்று இருக்கையை விட்டுத் துள்ளுகிறான் தொலைக்காட்சி முன் அமர்ந்திருக்கும் இளைஞன். கேள்விக்கு பதில் சொல்லும் இளைஞர்களின் இத்தகைய பொதுவான ஆர்வம் ஒரு நொடியில் வேறொன்றாக மாறி விடுகிறது. ''நமக்கு இவ்வளவு திறமை இருந்தும் சும்மா வேடிக்கை பார்த்துக் கொண்டு இருப்பதா?'' என்று கோடீசுவரனாவதற்கு விண்ணப்பம் போடுகிறார்.

பாலுறவு நடவடிக்கைகளைத் திரைசேர்ந்தவர் என்பதாகக் கேட்கப்பட்டு விடைகளில் ஒன்றை பொறுக்கி எடுக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார். இது தகவலாகத் தொடங்கி தகவலாகி மட்டுமே முடிவடைகிறது.

இதையே இந்தியாவில் அதிகமான மக்களால் உண்ணப்படும் அரிசி, கோதுமை ரகம் எது என்று அமைப்பார்களேயானால் அதற்கான விடையைச் சொல்கிற ஒரு பங்கேற்பாளர் ஒரு கூட்டிணைவான பண்பாட்டு அம்சத்தை விளங்கிக் கொண்டவராக ஆகிறார். இதன்மூலம் அவர் அறிவும் சமூகமயப்படுத்தப்பட்டிருக்கிறது எனலாம்.

இதேபோல் தான், மக்களின் உடை, ரசனை, பொழுது போக்கு, சுற்றுலா, நிலவியல், உளவியல், வரலாறு பற்றிய சமூகமயப்படுத்தப்பட்ட கோணங்களில் இல்லை கேள்விகள். ஆமணக்கு விதையைப் போல் மேலிருந்து தன் மர நிழலிலேயே விழுந்து விளையா மல் போகின்றன. கேள்விகள் ஓர் இலவம் பஞ்சு போல் தனக்குரிய முளைப்பிடம் தேடிப் பறக்க வேண்டாமா? இவை கேள்விகளே அல்ல, ''மலிவான தகவல் சரக்குகள்''. இதனுடைய பங்கேற்பாளர்களின் சமூக அக்கறை வெளிப்படும் தருணம் ஒரு ஆயுள் முழுக்க சிரிப்பதற்கு தகுதியுள்ளது.

அது என்னவெனில் ஒரு கோடிரூபாய் பரிசு கிடைத்தால் என்ன செய்வீர்கள் என்ற கேள்விக்கு மென்பொருள் நிறுவனங்களில் முதலீடு செய்து சமூக முன்னேற்றத்திற்கு வழிவகுப்பேன் என்பதும், அதே போல் யாருடன் விருந்து சாப்பிட விருப்பம் என்பதற்கு மறக்காமல் 'கம்ப்யூட்டர் கடவுள் பில்கேட்ஸ்' என எழுத்துப் பிசகாமல் சொல்வதும், பொருளாதாரத்தில் பின்தங்கிய மாணவர்களுக்கு கல்விக்காக உதவுவது (இதில் இட ஒதுக்கீடு என்பதற்கு மறைமுகமான எதிர்ப்பு பதிவு செய்யப்படுவது கவனிக்கத்தக்கது) என்பது போன்ற ''தர்ம கர்த்தா சோசலிசத்தை'' அவிழ்த்துவிட்டுத் தங்களின் மேட்டிமையைக் காட்டிக் கொள்கிறார்கள். இதற்கும் அழகிப் போட்டியில் அழகிகள் கூறும் விடைகளுக்கும் என்ன பெரிய வேறுபாடு உள்ளது? அது அழகின் பேரால் அபத்தம்; இது அறிவின் பேரால் அபத்தம்.

இந்த நிகழ்ச்சியை பார்வையாளனின் மனத்தில் அழுத்தம் திருத்தமாகப் பதிய வைக்கவே நட்சத்திர நடத்துநர்கள்; பிரம்மாண்டமான அரங்க அமைப்புகள்; பார்வையாளனை நிகழ்ச்சியோடு ஒன்ற வைக்க பின்னணியில் இதயத் துடிப்பு இசை, போட்டியாளர் தன் உறவினரோடு கலந்தாலோசித்து முடிவெடுக்கும் வாய்ப்பு. அரங்கத்தில் குழுமியிருக்கும் பார்வையாளரின் கூட்டிணைவான (!) உதவியைப் பெறல் எனப் பல்வேறு ஜனரஞ்சக அம்சங்களை இணைத்து வேலிக்காத்தான் முள் மரத்துக்கு வேப்ப மரத்தின் ஒப்பனையைச் செய்கிறார்கள்.

இறுதியாக, இந்த நிகழ்ச்சியால் லாபம் அடைபவர்கள் தொலைக்காட்சி நிறுவனங்கள், விளம்பர நிறுவனங்கள், சில மத்தியத் தர வர்க்க மக்கள். இதற்கு அறிவின் பேரால் இவ்வளவு பெரிய ஆர்ப்பாட்டம். நம் விலாக்களில் இருந்தே எலும்புகளை உருவி நம்மில் சிலருக்கு எலும்பு போடுகிற முதலாளித்துவ சூட்சுமம் தான் இது.

கோடீஸ்வரன் நிகழ்ச்சியில் சரத்குமார் கூறுகிறார். ''நீங்க கோடீஸ்வரன் ஆகணும். நான் ரெடி நீங்க ரெடியா'' என்று. இந்தச் சூதாட்டக் கேவலத்தை ஒழித்துக் கட்டும் நிலை வரும் போது உங்களைப் பார்த்து நீங்க ரெடியா என்று மக்கள் கேட்க மாட்டார்கள். அது அறிவின் மீதான பற்று காரணமாக நிகழாது. சமூகத்தின் மீதான பற்று காரணமாக நிகழும்.

● **வெயில் மொழியன்**

www.padippakam.com

யில் பார்த்து, தானே அத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபட்டதைப் போலக் கிளர்ச்சியடையும் ரசிகன் திரையரங்கை விட்டு வெளியே வந்தவுடன் அதை மறந்து விடுவதில்லை. பாலியல் வன்முறையாகவும், பெண்களைத் துரத்துவதாகவும், பாலியல் வக்கிரமாகவும் அந்தக் காட்சிகள் சமூகத்திற்குள் மொழிமாற்றம் செய்யப்படுகின்றன. கண்ணெதிரில் 'திடீர் சுலபமாக ஒருவன் கோடீசுவரன் ஆகும் காட்சி, பத்து கேள்விகளுக்குப் பதில் சொல்லிவிட்டு பல லட்சங்களுடன் புறப்படும் காட்சி பார்வையாளனைச் சும்மா விடாது. நீலத் திரைப்படம் போல இது ஒரு நீலச் சூதாட்டம்.

ஐரோப்பாவில் இச்சூதாட்டம் புதிய பரிமாணத்திற்குச் சென்றுவிட்டது. இங்கே இந்தியாவில் நடக்கும் கோடீசுவரனில் ஜெயித்தவனைக் கண்டு பார்வையாளர்கள் வியக்கிறார்கள் அல்லது பொறாமைப் படுகிறார்கள். தோற்றவனைக் கண்டு கொஞ்சம் அனுதாபப்படுகிறார்கள்.

விசிலடித்து, ஊளையிட்டு, கைதட்டி... தோற்றவனைப் பலவகையிலும் அவமானப் படுத்தி அரங்கை விட்டு வெளியேற்றும் நிகழ்ச்சி இப்போது அங்கே ஐரோப்பாவில் அறிமுகப்படுத்தப் பட்டிருக்கிறது.

**நீங்கள் ரெடியா? போட்டியில் குதிப்பதனால் நீங்கள் ஒரு ரூபாய் கூட இழக்கப் போவதில்லை. உழைப்பு, நேர்மை, இரக்கம் போன்ற மதிப்பீடுகளை மட்டுமே இழப்பீர்கள். வென்றாலோ ஒரு கோடி!**

"முதல் சுற்றிலேயே தோற்றாலும் சரி, பாதி தூரம் வந்து தோற்றாலும் சரி, தகுதியும் திறமையும் இல்லாமல் கோடீசுவரனாகும் ஆசையை மட்டும் வைத்துக் கொண்டு ஆட்டத்திற்கு வரும் நபர்களாகவே அவர்கள் கருதப்பட வேண்டும். இத்தகைய நபர்களுக்கு இரக்கம் காட்டக் கூடாது" என்பது பார்வையாளர்களிடம் உருவாக்கப்படும் மனநிலை.

"இப்படி அவமானப்படுத்தப் படுவதற்காகத் தோற்றவர்கள் கோபப்படக்கூடாது; மாறாக, எல்லா ஏளனங்களையும் அவமரியாதைகளையும் புன்னகையுடன் ஏற்றுக் கொண்டு அரங்கை விட்டு வெளியேறும் மனப்பக்குவம் அவர்களுக்கு இருக்க வேண்டும்." இது பங்கேற்போரிடம் கோரப்படும் மனப்பக்குவம்.

"நூற்றுக்கு நூறு மதிப்பெண் பெற முடியாமல் 95 மட்டுமே பெற்றதால், பொறியியல் கல்லூரியில் இடம் பிடிக்க முடியாத மாணவர்கள், விற்பனை இலக்கை எட்ட முடியாததால் வேலையிலிருந்து வெளியேற்றப்படும் விற்பனைப் பிரதிநிதிகள், உழைப்புச் சந்தையில் விலை போகாத தொழிலாளர்கள், சந்தைச் சூதாட்டத்தின் விதி தெரியாமல் ஏமாந்து போண்டியாகும் விவசாயிகள்... போன்றோர் மீது சமூகம் இரக்கம் காட்டத் தேவையில்லை. தோற்றவர்களும் தங்கள் தகுதியின்மை குறித்து குற்றவுணர்வு கொள்ள வேண்டுமேயன்றி கோபம் கொள்ளக் கூடாது" - இதுதான் இந் நிகழ்ச்சி உருவாக்க முனையும் சமூக உளவியல். சூதாட்டத்திலும் கொடியது இதுதான்.

நீங்கள் ரெடியா? போட்டியில் குதிப்பதனால் நீங்கள் ஒரு ரூபாய் கூட இழக்கப் போவதில்லை. உழைப்பு, நேர்மை, இரக்கம் போன்ற மதிப்பீடுகளை மட்டுமே இழப்பீர்கள். வென்றாலோ ஒரு கோடி!

● சூரியன்

| தொலைக்காட்சி நிறுவனம் | நிகழ்ச்சியின் பெயர்/ பரிசுத் தொகை | நடத்தும் நட்சத்திரம்/ சம்பளம் | விளம்பரக் கட்டணம் | தொலைக்காட்சி நிறுவனத்தின் ஆண்டு வருமானம்/ பிற தகவல்கள் |
|---|---|---|---|---|
| ஸ்டார் டி.வி. | கௌன் பனேகா குரோர்பதி (ஒரு கோடி ரூபாய்) | அமிதாப்பச்சன் (ஆண்டுக்கு 8 கோடி) | ஒரு நிமிடத்துக்கு 15 லட்சம் | 195 கோடி (திங்கள் முதல் வியாழன் வரை இரவு 9 முதல் 10 மணி வரை |
| ஜீ டி.வி. | ச்வால்தஸ் குரோர்கா (பத்து கோடி ரூபாய்) | அனுபம்கெர் (4கோடி) மனீஷா கொய்ராலா (5 கோடி) | ஒரு நிமிடத்துக்கு 15 லட்சம் | 180 கோடி (திங்கள், செவ்வாய், வியாழன் இரவு 8.30 முதல் 9.30 வரை (நிகழ்ச்சி இப்போது நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது) |
| சன் டி.வி. | கோடீஸ்வரன் (ஒரு கோடி ரூபாய்) | சரத்குமார் (ஆண்டுக்கு 2 லிருந்து மூன்று கோடி) | ஒரு நிமிடம் 1.80 லட்சம் | 60 கோடி ரூபாய் வாரத்தின் சனி, ஞாயிறு இரவு 9 முதல் 10 மணி வரை இப்போது மலையாளத்தில் சூர்யா டி.வி.யிலும் துவங்கி விட்டது. |
| சோனி டி.வி. | கிஸ்மத் வாலா (பரிசுத் தொகைக்கு வரம்பு இல்லை) எவ்வளவு அறிவோ(!) அவ்வளவு பரிசுத் தொகை | கோவிந்தா (சம்பளம் தீர்மானிக்கப் படவில்லை) | தீர்மானிக்கப்பட வில்லை (ஸ்டார், ஜீயைவிட அதிகமாக இருக்க வாய்ப்புண்டு) | 200 கோடிக்கு மேல் (இன்னும் இந்த நிகழ்ச்சி ஒளிபரப்பு தொடங்கவில்லை) |

www.padippakam.com

சென்ற இதழ் தொடர்ச்சி:

# ஜெ.ஜெ. சில குறிப்புகள்

# இதுதாண்டா கைக்கூலிக் கலை

1917 அக்டோபர் புரட்சி வெற்றி பெற்று உலகின் முதல் சோசலிச நாடு உருவானவுடன், அதை வீழ்த்துவதற்கு ஏழு வல்லரசுகள் கூட்டுச் சேர்ந்து ரசிய ஓடுகாலி கோல்செக் தலைமையில் படையை ஏவின. ஆனாலும் சோசலிசத்தை வீழ்த்த முடியவில்லை.

சோவியத் சோசலிச ஒன்றியத்தை வென்று ஒடுக்குவதற்கு ஜெர்மனி, இத்தாலி மற்றும் ஜப்பான் அடங்கிய அச்சு நாடுகள் தொடுத்த தாக்குதலும் முறியடிக்கப்பட்டது.

உலகப் பரப்பில் இருந்தே கம்யூனிசத்தை வேரறுப்பதற்கு அமெரிக்க உளவுப்படை சி.ஐ.ஏ.வின் பயங்கரவாத - நாசகாரத் தாக்குதலைக் கட்டவிழ்த்து விட்டான் கொடுங்கோலன் மெக்கார்த்தி. அதுவும் பலிக்கவில்லை.

இதிலிருந்து கம்யூனிசத்தின் எதிரிகள் கண்டுகொண்டது என்னவென்றால், ''கம்யூனிசத்தை வெளியில் இருந்து மட்டும் தாக்கி அழிக்க முடியாது. அதை உள்ளிருந்து சீர்குலைத்தும், உறவாடிப் பலவீனப்படுத்தியும்தான் அழிக்க முடியும்'' என்பதுதான்.

கம்யூனிசத்தை உள்ளிருந்து சீர்குலைப்பவர்கள், அதன் வடிவத்தை, தோற்றத்தை எடுத்துக் கொண்டு, அதற்கே முதலாளித்துவ சாரத்தை, உள்ளடக்கத்தைத் தருகிறார்கள்.

இதைத்தான், ''இனி பாட்டாளி வர்க்க இயக்கம் என்னும் பொதுத்தளத்தில் நின்று கொண்டுதான் கம்யூனிசத்தை எதிர்க்க முடியும் என்று அதன் எதிரிகள் புரிந்து கொண்டு விட்டார்கள்'' என்றார் லெனின். இதைத்தான் செங்கொடியை அசைத்துக் கொண்டே செங்கொடியை எதிர்ப்பது என்றார் மாவோ.

இதைத்தான் உலகம் முழுவதுமுள்ள போலிக் கம்யூனிஸ்டுகளும் அவர்களால் ஊட்டி வளர்க்கப்படும் ஜெயகாந்தன்களும் செய்கிறார்கள்.

கம்யூனிசத்தோடு உறவாடிச் சீர்குலைப்பது, அடுத்துக் கெடுப்பது என்ற நோக்கில் வேலை செய்பவர்களோ வேறு உத்தியைக் கையாள்கிறார்கள். முதலாவதாக, ஓநாய்கள் தமது நீண்ட வால்களைக் கால்களுக்கிடையே செருகிக் கொண்டு வீட்டு நாய்களாக நடிப்பதைப் போன்று இவர்கள் தமது முதலாளித்துவ - ஏகாதிபத்தியப் பிற்போக்கு சித்தாந்த சார்பை மூடி மறைத்துக் கொள்கிறார்கள். கம்யூனிசத்தின் உன்னதமான மனித நேய இலட்சியம் என்னும் பொதுத் தளத்தில் தாமும் இணைந்திருப்பதாகப் பாசாங்கு செய்கிறார்கள்.

கம்யூனிசத்தின் சாரமே மனிதநேயம் என்பதாகவும், அதற்கு மாறாக கம்யூனிச அமைப்புகளும், கம்யூனிசத் தலைவர்களும் கொஞ்சமும் மனிதத் தன்மை இல்லாத சர்வாதிகாரத்தோடு நடந்து கொள்வதாகவும் இந்தப் போக்கை எதிர்க்கும் போராளிகளைப் போலவும் பாசாங்கு செய்கிறார்கள். இதிலிருந்து கம்யூனிசம் ஒரு நல்ல உன்னதமான சித்தாந்தம்தான், ஆனால் கம்யூனிச - சோசலிச சமுதாயம் என்பதோ கேடானது; கம்யூனிஸ்டுகளோ, சுயநல சர்வாதிகாரிகள் என்று அவதூறு செய்கிறார்கள்.

உலக முழுவதுமுள்ள முதலாளித்துவ சோசலிசக் கட்சிகள் முதல் கிறித்துவ புதிய இறையியல் அமைப்புகள் வரையும், ஜெயமோகன், சுந்தர ராமசாமி போன்ற ஏகாதிபத்தியத்தின் தன்னார்வத் தொண்டர்களும் இப்படித்தான் செய்கிறார்கள்.

* * *

ஜெயகாந்தன் தன்னை ஒரு கட்சி சாராத கம்யூனிஸ்டு வகையைச் சேர்ந்தவரென்றும், தன்னை ஒரு கம்யூனிஸ்ட் என்று சொல்லிக் கொள்வதில் பெருமிதம் அடைபவர் என்றும் சொல்லிக் கொள்கிறார்.

> ''இனி பாட்டாளி வர்க்க இயக்கம் என்னும் பொதுத்தளத்தில் நின்று கொண்டுதான் கம்யூனிசத்தை எதிர்க்க முடியும் என்று அதன் எதிரிகள் புரிந்து கொண்டு விட்டார்கள்'' என்றார் லெனின்.

கம்யூனிஸ்ட் என்று அவர் சொல்வது நாட்டிலுள்ள இரண்டு சட்டபூர்வக் கம்யூனிசக் கட்சிகளும் கொண்டுள்ள உள்ளடக்கத்தின் அடிப்படையில்தான்: இந்த இரண்டுமே சிங்காரவேலர் - ஜீவா, டாங்கே - நம்பூதிரிபாடு ஆகியோர் கம்யூனிசத்துக்கு அளித்த இந்துத்துவா அடிப்படையிலான வியாக்கியானத்தையே தமது சித்தாந்தமாகக் கொண்டவை. அவற்றின் நிழலிலே வளர்ந்தவர் ஜெயகாந்தன். அதனால் வளர்ப்புப் பிராணிக்குரிய குணத்தைக் காட்டும் வகையில் மார்க்சியத்துக்கு இந்துத்துவா வியாக்கியானம் தருகிறார்.

ஒரு காலத்தில் தன்னை நாத்திகவாதி என்று கூறிக் கொண்ட ஜெயகாந்தன் இப்போது இந்துத்துவாவுடன் சங்கமித்து விட்டார். இந்த மாற்றத்தை நியாயப் படுத்துவதற்கு அவர் வைக்கும் வாதம் போலிக் கம்யூனிஸ்டுகளின் நிலையெடுத்து, அதைக் கடந்து போய் அமெரிக்க ஏகாதிபத்தியமும் கம்யூனிச/சோசலிச கூறுகளைக் காண்பதாகப் புளுகுகிறார்.

''நான் நாத்திகனென்று சொன்னதுகூட ஒரு assumption (கற்பிதம்)தான், நாத்திகனும் ஆன்மீகவாதியாக இருக்க முடியும். வாழ்க்கையின் மீது அக்கறையும், தான் வாழாத ஒரு காலத்தைப் பற்றிய கனவுகளும், அதை நனவாக்கும் முயற்சிகளும் கொள்ளும் அனைவருமே ஆன்மீகவாதிகள்தான் என்று நான் நினைக்கிறேன். அந்த வகையில்தான் கார்ல் மார்க்சை நான் ஆன்மீகவாதியென்று சொன்னேன். ஆகவே, நாத்திகனுக்கு ஆன்மீகம் புறம்பானதல்ல.'' ''எல்லா மதங்களையும் அணைத்துக் கொள்ளும் வாழ்க்கை முறைக்குப் பெயர்தான் இந்துத்துவம் என்று நான் நினைக்கிறேன். எனவே மதங்களோடு நமக்கு முரண்பாடு இல்லை. அடிப்படைவாதம் என்பது மத நம்பிக்கை என்பதற்கு முரணானது என்பேன். இன்னும் சொல்லப் போனால், எல்லா மதங்களுக்கும் ஆபத்தானது அந்த மதங்களைச் சார்ந்த அடிப்படைவாதம் தான். எனவே, ஆன்மீகமும் நாத்திகமும் கலந்த ஒரு புதிய சித்தாந்தத்தை நான் கம்யூனிசத்திடமிருந்து கற்றேன். கம்யூனிசத்தை நாத்திகவாதம் ஆக்குகிறவர்கள்தான் அது தோல்வியுற்றதாகவும் காண்பார்கள். அதிலும் ஒரு ஆன்மீக வளர்ச்சியிருக்கிறது என்று பார்த்தால், கம்யூனிசத்தை உலகம் தழுவிய ஒரு சித்தாந்தமாக நாம் பார்க்கலாம். இன்னும் சொல்லப் போனால், அமெரிக்க வாழ்க்கை முறையில்


படிப்பகம்

www.padippakam.com

கம்யூனிசத்திற்கு மிகவும் இடமிருக்கிறது என்று நான் நினைக்கிறேன்.''

இவையெல்லாம் ஏதோ ஜெயகாந்தன் என்னும் கஞ்சாக் கதாசிரியரின் போதை உளறல் போல தோன்றும். ஆனால், இவை இரண்டு சட்டபூர்வ கம்யூனிசக் கட்சிகளின் நிலைப்பாடுகளை வேறு விதமாகக் கூறுவனதாம்.

ஆர்.எஸ்.எஸ். - பா.ஜ.க.வின் ''இந்துத்துவா''வை எதிர்த்து மதச்சார்பற்ற கூட்டணி அமைத்துப் ''புரட்சிப் போராட்டம்'' நடத்தும் இரண்டு சட்டபூர்வ கம்யூனிசக் கட்சிகளின் நிலைப்பாடு என்ன? மதநல்லிணக்கம்தானே! அதற்காகத் தானே மாநாடுகள், பேரணிகள், பிரச்சாரங்கள் எல்லாம் நடத்தப் பாடுபடு கின்றன! ''மதத்திற்கும் அரசியலுக்கும் உள்ள உறவை அறுத்து, அரசியலை மதச்சார்பற்றதாக்குவது'' என்பதல்ல இரண்டு சட்டபூர்வக் கம்யூனிசக் கட்சிகளின் நிலைப்பாடு.

''அனைத்து மதங்களையும்சமமாதவும், நல்லிணக்கத்தோடும் இருக்கச் செய்வது தான் மதச் சார்பின்மைக்கு இந்தக் கட்சிகள் தரும் விளக்கம். அது மட்டுமல்ல, உண்மையான இந்துமதம் என்பதே அனைத்து மதங்களையும் சமமாகக் கருதும் சகிப்புத் தன்மைதான்; ஆர்.எஸ்.எஸ். - பா.ஜ.க.தான் இந்து மதத்துக்கு வகுப்புவாதச் சாயம் பூசி அரசியல் ஆதாயம் தேட முயல்கிறது; உண்மையில் இந்து மதத்திற்கு அத்தகைய வகுப்புவாத, குறுகிய கண்ணோட்டம் கிடையாது'' என்பதுதான் இரண்டு போலிக் கம்யூனிசக் கட்சிகளின் நிலைப்பாடு.

இதைத்தான், ''எல்லா மதங்களையும் அணைத்துக் கொள்ளும் வாழ்க்கை முறைக்குப் பெயர்தான் இந்துத்துவம்'' என்கிறார், ஜெயகாந்தன்.

இதையே அரசியலுக்கும் நீட்டிக்கும் ஜெயகாந்தன், ''மனிதனுடைய நலம்தான் கம்யூனிசத்துக்கு முக்கியம். முதலாளித் துவத்திற்கு அந்த நலனின் மீது அக்கறையில்லாத ஒரு நூற்றாண்டு இருந்தது. இன்றைக்கு முதலாளித்துவம் மாறியிருக்கிறது. வளர்ச்சி பெற்றிருக் கிறது. மனித நலனுக்காக அதுவும் பங்களிப்புச் செய்கிறது. எதற்கும் எதிரியாக இல்லாத, அனைத்தையும் அணைத்துக் கொள்ளும், ஒரு ஜனநாயக ரீதியான கம்யூனிசம் என்பது அமெரிக்க வாழ்க்கை முறையில் சாத்தியமென்று நான் நம்புகிறேன்'' (ஜெயகாந்தன், கணையாழியில் பக்: 15-16, செப். 2000)

இவையும் கூட இரண்டு போலிக்



கம்யூனிஸ்டுகளின் நிலைப்பாடுதான். அதாவது, ''எதற்கும் எதிரியாக இல்லாத, அனைத்தையும் அணைத்துக் கொள்ளும், ஒரு ஜனநாயக ரீதியான கம்யூனிசம்'' என்பதில் இந்தப் போலிக் கம்யூனிசக் கட்சிகளுக்கு உடன்பாடுதான்.

1950-களின் மத்தியில், சோவியத் ஒன்றியத்தில் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தைக் கைவிட்டு, அனைத்து மக்கள் ஆட்சியை குருசேவ் பிரகடனம் செய்ததை இந்தியக் கம்யூனிசக் கட்சி ஆதரித்து ஏற்றது. பின்னர் ஏகாதிபத்திய நாடுகளின் உள்ள கம்யூனிசக் கட்சிகள் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை வலியுறுத்தும் லெனினிசத்தை நிராகரித்த போது அதையும் ஆதரித்து ஏற்றது.

இவ்விரண்டு நடவடிக்கைகளையும் எதிர்ப்பதாகக் கூறிய சி.பி.எம். கட்சி, இவற்றையே மறைமுகமாக ஆதரித்து, இந்த அடிப்படையிலேயே தனது திட்டத்தையும் செயல்பாடுகளையும் வகுத்துக் கொண்டது. இரண்டு கட்சிகளுமே தற்போதைய முதலாளித் துவ நாடாளுமன்ற ஜனநாயகத்தைக் காத்து, அதன் மூலமாகவே ஆட்சியைப் பிடிக்கும் பாதையில் போகின்றன.

**ஜெயகாந்தனது கஞ்சாப் போதையில் அமெரிக்க நாடு என்பது பொதுவுடமை சோசலிச நர்டர்கத் தெரிகிறதாம்!**

குறிப்பாக, சோவியத் ஒன்றியத்தின் கலைப்பு, போலிக் கம்யூனிச ஆட்சிக் கவிழ்ப்புக்குப் பிறகு பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை பகிரங்கமாகவே கைவிட்டுவிட்டது. பல கட்சி ஜனநாயக அரசியலையும் சந்தை சோசலிசத்தையும் நிறுவப்போவதாக அறிவித்துள்ளது. இது தற்போதைய நாடாளுமன்ற ஜன்நாய கத்துக்கும் காங்கிரசின் ஜனநாயக சோசலிசத்துக்கும் எந்த வகையிலும் மாறுபாடானது இல்லை.

எனவே, ''எதற்கும் எதிரியாக இல்லாத, அனைத்தையும் அணைத்துக் கொள்ளும், ஒரு ஜனநாயக ரீதியான கம்யூனிசம்'' என்ற ஜெயகாந்தன் சொல்லும் கோட்பாடுதான் இரண்டு போலிக் கம்யூனிஸ்டு கட்சிகளின் அரசியல் வழிகாட்டி.

இதையே நீட்டித்து இந்த கோட்பாடு அடிப்படையில் ஜெயகாந்தன் அமெரிக்க அரசியல் சமுதாயத்திற்கு புகழ்பாடுவதை மட்டும் போலிக் கம்யூனிசக் கட்சிகளால் சகித்துக் கொள்ள முடியவில்லை. ''ஜெயகாந்தனின் அமெரிக்க மோக''த்தை விமர்சிக்கும் சி.பி.எம்., ஜெயகாந்தனின் சித்தாந்த விளக்கங்களுக்கு மறுப்பு எதுவும் கூற முடியவில்லை.

போலிக் கம்யூனிஸ்டுகளின் நிழலில் வளர்ந்த ஜெயகாந்தன், அவர்கள் வரையறுத்த எல்லைக்குள் எப்போதுமே நின்றவரில்லை. இலக்கிய வியாதிக்காரர் களுக்கே உரிய ''எல்லையற்ற சுதந்திர உணர்வோடு'' செயல்படுபவர். எல்லை யற்ற சுதந்திரமான பாலுறவுக்காக வாதாடுபவர். எனவேதான் கழிசடைக் கலாச்சாரத்தின் தாயகமான அமெரிக் காவைக் கண்டதும் பிடித்துப் போய் விட்டது. அவரது கஞ்சாப் போதையில் அமெரிக்காவின் இன்றைய ஏகாதி பத்தியச் சமுதாயத்திலேயே பொது வுடமை, சோசலிசம் எல்லாம் காண்கிறார்.

இதுவும்கூட ''மண்ணுக்கேற்ற மார்க்சியம்'' என்ற கேடுகெட்ட கோட் பாட்டின் அடிப்படையில்தான் ஜெய காந்தன் பேசுகிறார். இந்தியாவுக்கு ''மண்ணுக்கேற்ற மார்க்சியம்'' பேசும் போலிக் கம்யூனிஸ்டுகள் அதையே அமெரிக்காவுக்குப் பொருத்தி ஜெயகாந்தன் பேசும்போது அதிர்ந்து போகிறார்கள்.

''மார்க்சீயத்தின் முதல்வரி என்னவென்றால் "It is not dogma". (அது வறட்டுச் சூத்திரம் அல்ல.) அது அந்தந்தச் சூழ்நிலைகளுக்கு ஏற்ப, அந்தந்தச் சமுதாயத்தின் சரித்திரப் பின்னணிகளுக்கு ஏற்ப நிறைவேற வேண்டிய ஒரு வாழ்க்கை நடைமுறை. இந்தச் சூத்திரத்தை

www.padippakam.com

ஏற்றுக் கொண்டால், அமெரிக்காவுக்கும் அது பொது என்று புரிந்து கொள்ளலாம்.''

''அமெரிக்கக் கண்டமென்பது உலகத்தின் எல்லா மக்களாலும் ஆக்கிரமிக்கப்பட்டு, எல்லோருக்கும் சொந்தமான ஒரு நாடாகத்தான் வளர்ச்சி பெற்றிருக்கிறது. இதுதான் பொதுவுடமை. ஆகவே, சரித்திரப் பின்னணியைப் பார்க்கையில் ஒரு பொதுவுடமை நாடாகவே உருவானது இந்த அமெரிக்கா தான். மார்க்சீயம் ரஷ்யாவுக்கு மட்டுமே சொந்தமென்று நினைத்ததால்தான் அது தோல்வியுற்றது போல் தெரிகிறது. Marxism has lost USSR, but has gained the whole world. (மார்க்சீயம் சோவியத் ஒன்றியத்தை இழந்திருக்கிறது. ஆனால் முழு உலகையும் பெற்றிருக்கிறது.)''

கஞ்சாப் போதைக்கு அடிமையானவர்கள் சொல்வதுண்டு: ''நாம் எதை விரும்புகிறோமோ அதுவே எதார்த்தத்தில் நடப்பதாக உணர வைப்பதுதான் கஞ்சாவின் மகிமை.'' அப்படித்தான் ஜெயகாந்தனுக்கும். எதற்கு எதிரிகளையும் நண்பர்களையும் கணித்து, கட்சி கட்டி, மக்களைத் திரட்டி, போராடி, புரட்சி செய்ய வேண்டும்? முதலாளிய நாடுகளையே அவற்றில் நடக்கும் ஒடுக்குமுறை, சுரண்டலை மறந்து சோசலிச நாடுகள் என்று நாமகரணம் சூட்டிவிட்டால் போகிறது.

இதைவிட எளிதான வழி ஒன்றிருக்கிறது. தனித்தனி முதலாளிய நாடுகளில் சோசலிசத்தின் கூறுகளைத் தேடிக் கொண்டிருப்பதைவிட உலகையே சோசலிச உலகமென்றும், முதலாளிய - ஏகாதிபத்திய வாதிகளே அதை உருவாக்கிவிட்டார்கள் என்றும் அறிவித்து விட்டால் போகிறது என்பது தான் ஜெயகாந்தனின் இன்றைய நிலை.

''தேசம் தேசமாகப் பிரிந்திருக்கிற, பெயரிட்டுக் கொள்கிற இந்த முதலாளித்துவத்திற்கு எதிராக ஒரு சக்தி உருவாக வேண்டுமென்ற நோக்கத்தில் தான் 'உலகத் தொழிலாளர்கள் ஒருங்கிணைவோம்' என்ற கோஷம் அன்று பிறந்தது. இன்றைக்குச் சொல்லப் போனால்... உலக முதலாளித்துவம் உலகத் தொழிலாளிகளின் ஒற்றுமைக்குக் காரணமாக இருக்கிறது. அதற்கும் மேல், முதலாளி - தொழிலாளி வர்க்கங்களுக்கிடையே ஒரு ஒத்திசைவும் சகோரத்துவமும் இன்று இருக்கிறது. Capitalists have taken workers as their partners. இதெல்லாம் இருபதாம்/இருபத்தியோராம் நூற்றாண்டுகளின் மகத்தான வளர்ச்சி. இதையெல்லாம் மார்க்ஸ் பார்த்திருந்தால், இந்தப் புதிய



சூழ்நிலைக்கு ஏற்ப ஒரு புதிய மார்க்சீயம் உருவாகியிருக்கும். மார்க்சீய வாதிகள் புதிய மார்க்சீயவாதிகள் ஆகியிருப்பார்கள்.''

மூலதனம், உழைப்பு, சந்தை ஆகியவற்றை சர்வதேசியமயமாக்குவது ஏகாதிபத்தியம் பிறந்தபோதே உருவாகி விட்டது. இல்லை என்றால் அது ஏகாதிபத்தியமே கிடையாது. இப்போது அந்தச் சர்வதேசியமயமாவது மேலும் ஆழமாவதிலும், ஒன்று குவிப்பதிலும் ஒரு புதிய படிநிலையை எட்டியிருக்கிறது. இவ்வாறாக ஏகாதிபத்தியங்கள் மேல்நிலை வல்லரசு களாக உலக நாடுகளை, தேசங்களை, மக்களை அடக்கி, ஒடுக்கி மேலாதிக்கம் செலுத்துவதாக வளர்ந்து விட்டது.

ஆனால் உலக முதலாளித்துவத்தையே மார்க்சியத்தின் பரிணாம வளர்ச்சி என்று கதைக்கிறார், கஞ்சா கதாசிரியர். ''உலகப் பொருளாதாரம் என்பதை உலக முதலாளித்துவம் கண்டுபிடித்திருக்கிறது. உலகமயமாக்குதல் என்பதுதான் மார்க்சியத்தின் நோக்கம். அதை யார் செய்தால் என்ன? ஆக, சோசலிச/கம்யூனிசக் குறிக்கோள்கள் முதலாளித்துவத்தின் வளர்ச்சி மூலம் நிறைவேற்றப்படுகின்றன.''

ஏகாதிபத்தியம் அதன் வளர்ச்சிப் போக்கில் தேசிய எல்லைகளைத் தகர்த்து, உலகப் பொருளாதாரத்தை நிறுவி வளர்ப்பதால் அது வரவேற்கத்தக்கதுதான் என்பது கடந்த நூற்றாண்டின் ஆரம்பத்திலேயே காவுத்ஸ்கி தலைமையிலான கம்யூனிச துரோகிகளான இரண்டாம் அகிலத்துக்காரர்களே சொல்லி, லெனினால் சாடி அம்பலப்படுத்தப்பட்ட கருத்துத் தான். இது ஏதோ ஒரு புதிய கண்டுபிடிப்பு போலச் சொல்லுகிறார், ஜெயகாந்தன்.

**தனித்தனி முதலாளிய நாடுகளில் சோசலிசத்தின் கூறுகளைத் தேடிக் கொண்டிருப்பதைவிட முதலாளித்துவ உலகையே சோசலிச உலகமென்றும் அறிவித்து விட்டால் போகிறது என்பது தான் ஜெயகாந்தனின் இன்றைய நிலை.**

தேசிய சுயநிர்ணய உரிமை என்றாலே பிரிவினைவாதம் என்று முத்திரை குத்தி எதிர்க்கும் போலிக் கம்யூனிசக் கட்சிகள், ஏகாதிபத்திய உலகமயமாக்கத்தையும் எதிர்ப்பதாக பாசாங்கு செய்யும் போலிக் கம்யூனிசக் கட்சிகள், ஜெயகாந்தனின் இந்த வாதத்தை ஏற்பார்களா? அதற்கும் விளக்கும் சொல்கிறார் ஜெயகாந்தன்.

அவர்கள் ''என்ன சொல்வார்கள் என்பது வேறு. நடைமுறையில் அவர்கள் என்ன செய்கிறார்கள் என்று பார்க்க வேண்டும். உலகமயமாதலைச் சீனா ஏற்றுக் கொண்டு, சந்தைப் பொருளாதாரத்தில் சேர்ந்திருக்கிறது. சித்தாந்தமென்று ஒன்றைச் சொன்னாலும், நடைமுறையில் அவர்கள் மாறுவதை நான் பார்த்துக் கொண்டிருக்கிறேன். அதேசமயம், க்யூபாவில் கம்யூனிசமும் (கத்தோலிக்க) மதமும் இணைந்து செயல்படுகின்றன. ஆக, மதமும் கம்யூனிசமும் இணைகின்றன. முதலாளித்துவத்தோடு தொழிலாளிகள் இணைகின்றனர். இது மார்க்ஸின் கனவு நனவாகும் காலம் என்றே செரல்ல வேண்டும்.''

சில மாதங்களுக்கு முன்பு, இந்தியக் கம்யூனிசக் கட்சியின் தமிழ்நாடு துணைத் தலைவராக இருந்த சீனிவாசன் பாரதீய ஜனதாக் கட்சிக்குத் தாவினார். அப்போது மார்க்சியத்தின் குறிக்கோள்கள் இந்துத்துவா மூலம் நிறைவேறுவதாகப் புளுகினார். இப்போது அக்கட்சியின் அரசவை இலக்கிய வியாதிக்காரர் ஜெயகாந்தன் என்ன சொல்கிறார்? ''சோசலிச/கம்யூனிசக் குறிக்கோள்கள் முதலாளித்துவத்தின் வளர்ச்சி மூலம் நிறைவேற்றப்படுகின்றன'' என்று புளுகுகிறார்.

இதைக்கேட்டு இன்னமும் கம்யூனிசத்தின் பெயரால் கட்சி நடத்துபவர்களுக்குக் கோபம் வரவில்லை. ஜெயகாந்தன் தமது வளர்ப்புப் பிராணி என்பதால் செல்லமாகக் கடிந்து கொள்கிறார்கள். தவிரவும் அவர்களின் நிலையைத்தான் வேறு விதமாகச் சொல்லுகிறார், ஜெயகாந்தன்.

அதோடு ஜெயகாந்தனின் கருத்துக்கள் எல்லாம் மார்க்சியத்தை, கம்யூனிசத்தை திரித்துச் சொல்லுவதுதானே! மார்க்சியத்தைக் கொச்சைப்படுத்துவதை போலிகள் ஏன் எதிர்க்க வேண்டும்?

(தொடரும்)


படிப்பகம்

www.padippakam.com

**தொடர் கட்டுரை: 12**

### சிறுபான்மையினருக்கு எதிரான ஆர்.எஸ்.எஸ்.இன் பொய்யும் புரட்டும்



# விடுமுறை — யாருக்கு அதிகம், இராணுவம் — யாருடைய அடியாள்?

**"இந்நாட்டில் ஏசு கிறிஸ்து, முகமது நபி பிறந்த தினங்கள் தேசிய விடுமுறையாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் பாரதத்தின் தேசிய புருஷர்களை ஸ்ரீராமர் (ராம நவமி) ஸ்ரீ கிருஷ்ணர் (கோகுலாஷ்டமி) பிறந்த தினங்களுக்கு விடுமுறை அளிக்க அரசு மறுக்கிறது."**

**– இந்து முன்னணியின் இந்துக்களுக்கான கோரிக்கைகளில் ஒன்று.**

மகாவிஷ்ணுவின் பத்து அவதாரங்களில் இரண்டிற்கு மட்டும் விடுமுறை கோருகிறார்கள். கல்கி அவதாரம் எப்போது பிறக்கும் என்பது தெரியாததால், ஏனைய ஏழு அவதாரங்கள், அப்புறம் சிவன் பிரம்மா அவர்கள் மனைவிமார்கள் - வைப்பாட்டிகள், நேரடிக் குழந்தைகள் - கள்ளக் குழந்தைகள், அவர்களின் பேரன் - பேத்திகள், மொத்தத்தில் முப்பது முக்கோடி தேவர்களையும் தேசிய புருஷர்களென கருதினால், விடுமுறை அளிக்க 365 நாட்கள் போதாது. போதும் என்று வைத்துக் கொண்டால் வருடம் முழுவதும் கொழுக்கட்டை, அப்பம், பணியாரம், வடை, முறுக்கு, சுண்டல், அவல், பொரி, கடலை, பூசை - புனஸ்காரங்கள் என்று குஷாலாக காலம் தள்ளலாம். தற்சமயம் அவாளின் ஆட்சி நடைபெறுவதால் உடனே இதை அமலுக்குக் கொண்டு வர என்ன தடை?

மைய அரசின் விடுமுறைகளில் முசுலீம்களுக்கு ரம்சான், பக்ரித், மொகரம், மிலாதுநபி நான்கும், கிறிஸ்தவர்களுக்கு கிறிஸ்துமஸ், புனிதவெள்ளி என இரண்டு மட்டும்தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. எஞ்சிய விடுமுறைகளில் பெரும்பங்கு இந்து மதப் பண்டிகைகளுக்குத்தான் அளிக்கப்பட்டிருக்கிறது. மகர சங்கராந்தி, சித்திரை - யுகாதி வருடப்பிறப்பு, விநாயகர் சதுர்த்தி, சரஸ்வதி - ஆயுத பூசை, விஜய தசமி, தீபாவளி - கார்த்திகை போன்றவை மைய அளவிலும், ராமநவமி, கிருஷ்ணஜெயந்தி, ஓணம், ஹோலி, ரக்ஷாபந்தன், பொங்கல், சூரசம்ஹாரம், ஆடி வெள்ளி, புரட்டாசி சனி, பங்குனி உத்திரம், கும்பமேளா, குடமுழுக்கு, மகாமகம், தேரோட்டங்கள் போன்றவை மாநில, உள்ளூர் அளவில் விடுமுறை தினங்களாக இருக்கிறது.

எனவே எல்லா மாநிலங்களிலும் உள்ள இந்துப் பண்டிகை விடுமுறை தினங்கள் இருபதுக்கும் மேல் வருகிறது. ராமநவமி, கிருஷ்ண ஜயந்தி இரண்டும் 'விருப்பப் பூர்வ விடுமுறை தினங்கள்' என்ற பட்டியலில் மறைமுகமாக மைய விடுமுறை தினங்களாக உள்ளது. பார்ப்பன மேல்சாதியினர்தான் இந்தப் பண்டிகை விடுமுறைகளைக் கொண்டாடுகின்றனர். இத்தகைய இந்துப் பண்டிகைகளில் பெரும்பான்மை இந்துக்களான சூத்திர - பஞ்சமர்கள் தீபாவளி, பொங்கலைத் தவிர எதையும் கொண்டாடுவதில்லை. அவர்கள் கொண்டாடுகின்ற சுடலை மாடன், மதுரை வீரன், முனியாண்டி, இசக்கியம்மன் விழாக்களுக்கும் விடுமுறை இல்லை. காரணம் அவை பார்ப்பன எதிர்ப்பு வரலாறுகள்.

புராணக் கடவுளர்களான ராமனையும், கிருஷ்ணனையும் 'தேசிய புருஷர்கள்' என்று பொருள் மாற்றி நாட்டு மக்களது தலைவர்களாக சித்தரிப்பது இந்து மதவெறியர்களின் சதியாகும். இருவரும் கோவில்களில் கும்பிடப்படும் கற்பனை உருவக் கடவுள்கள்தான். மேலும் இவ்விருவரையும் புராணப்புரட்டுக்களின்படி 'உண்மையான' அரசர்கள் என வைத்துக் கொண்டாலும் அவர்கள் சாதாரண அரசர்களேயன்றி முன்னுதாரணமானப் பண்புகளைக் கொண்ட தேசிய நாயகர்களல்லர். இந்த 'தேசிய புருஷர்' மோசடியை அடுத்த மாதக் கட்டுரையில் காணலாம்.

ஆனால் பார்ப்பனப் பண்டிகைகளின் 'வரலாற்றுக் கதை'களைப் பாருங்கள். அனைத்தும் தேசிய இன, பழங்குடி, மொழி, சாதி, பெண்கள் மீதான அடக்குமுறையைத் தான் கொண்டிருக்கிறது. தீபாவளி திராவிட 'அசுரர்களை'க் கொன்றதற்காகவும், விஜயதசமி பழங்குடி மக்களை வென்றதற்காகவும், ரக்ஷாபந்தன் பெண்கள் சாகும் வரை அடிமையாக இருப்பதற்கும் கொண்டாடப்படுகிறது. எனவே இந்தியாவின் பெரும்பான்மை மக்கள் பார்ப்பனியத்தின் ஆகப் பெரும்பான்மையான பண்டிகைகளை (பொங்கல் போன்றவை தவிர) கொண்டாடவே கூடாது என்கிறோம். மாறாக பார்ப்பன இந்துமத எதிர்ப்பு முன்னோடிகளை புத்தர், சித்தர், நந்தன், ஏகலைவன் இன்னபிற தலைவர்களைக் கொண்டாடலாம்.

அதேபோன்று காலனிய, நிலபிரபுத்துவ எதிர்ப்புப் போராட்ட சம்பவங்களான 1857 சுதந்திரப் போர், ஜாலியன் வாலாபாக், 1905 வங்கப் பிரிவினை, 1942 மக்கள் போராட்டம், தெலுங்கானா - கீழ்த் தஞ்சை விவசாயப் போராட்டங்கள் போன்றவற்றையும், பகத்சிங் போன்ற புரட்சியாளர்களின் தினங்களையும் கொண்டாட வேண்டும். அதேபோன்று தாழ்த்தப்பட்ட, முசுலீம் மக்கள் மீதான படுகொலைக் கலவரங்கள் நினைவு கூறப்படவேண்டும்.

எனவே பண்டிகைகள் என்பது மனித குல வரலாற்றில் அந்தந்த கால பிற்போக்கு விசயங்களை தளராத ஆற்றலுடன் போராடி வென்ற மக்களின் போராட்டங்களையும், தலைவர்களையும் மனிதகுல நாகரீகத்தின் மைல் கற்களாக நினைவு கூறப்படுவதுதான் சரி. அவ்வகையில் பார்ப்பனப் புராணப் புரட்டு, அடிமைத்தனப் பண்டிகைகளையும் மொத்தத்தில் எல்லா மதப் பண்டிகைகளையும் - அவற்றுக்கான விடுமுறைகளையும் ரத்து செய்வதே சரி.

***

**"இராணுவம், துணை இராணுவம், போலீசுத் துறை - ஆகியவற்றில் முசுலீம்களுக்கு ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்று அபாயகரமான கோரிக்கை ஒன்று எழுந்துள்ளது. இராணுவத்தில் மதத்தை வைத்து ஒதுக்கீடு செய்வது என்பது தேசப்பாதுகாப்புக்கு ஊறு விளைவிக்கும் செயலாகும்."**

**– நாட்டைப் பாதுகாக்க இந்து முன்னணி வைக்கும் கோரிக்கைகளில் ஒன்று.**

ஏதோ இந்திய பாதுகாப்புப் படைகளும், போலீசுப் பிரிவுகளும் நடுநிலையாக இருப்பதாகவும், முசுலீம்களுக்கான கோரிக்கையினால் அந்நடுநிலை சீர்குலைவதாகவும் இந்து முன்னணிக் கும்பல் ஒநாயைப் போல் வருந்துகிறது. உண்மையில் பாதுகாப்புப் படைகளின் யோக்கியதை என்ன?

www.padippakam.com

எல்லைப் பாதுகாப்புப் படையின் உளவுப் பிரிவு டி.ஜி. விபூதி நாராயண்ராய் 1995-ஆம் ஆண்டு 'வகுப்புக் கலவரங்களில் போலீசின் நடுநிலைமை' குறித்து ஒரு ஆய்வினை மேற்கொண்டார். எந்தக் கலவரத்தையும் 24 மணிநேரத்திற்குள் அடக்கிவிட முடியும் என்றும், அதற்கு மேல் கலவரம் நீடிப்பது என்பது போலீசும், அரசும் விரும்பினால் மட்டுமே சாத்தியம் என்று அந்த அதிகாரி குறிப்பிடுகிறார்.

ஆக முசுலீம்களுக்கெதிரான கலவரம் வார, மாதக் கணக்கில் நீடிப்பதிலிருந்தே போலீசின் நடுநிலை இலட்சணம் என்ன என்பது தெரிகிறது. அடுத்து இந்துக்கள் மட்டும் போலீசை நமது நண்பர்களாகவும், முசுலீம் - சீக்கிய மக்கள் போலீசை தமது வில்லன்களாகவும் கருதுவதாக விபூதி நாராயண் சிங் குறிப்பிடுகிறார். இப்படி போலீசின் மீது சிறுபான்மை மக்கள் நம்பிக்கை இழக்கிறார்கள் என்பது அரசின் மீதான நம்பிக்கை இழப்புக்கு இட்டுச் செல்லும் என்றும் கூறுகிறார்.

உயர்மட்டத்தைச் சேர்ந்த ஒரு 'இந்து' உளவுத்துறை அதிகாரியே போலீசு என்பது இந்துக்களின் காவலன் என்பதை நிரூபித்து விட்ட போது வேறு என்ன ஆதாரம் வேண்டும்?



**கடற்படையின் வைஸ் அட்மிரல் (ஓய்வு) கே.கே.நய்யார், ஆர்.எஸ்.எஸ்.-ஐ தீவிரமாக வெளிப்படையாக ஆதரிக்கிறார். தளபதியே இப்படியென்றால் சேனைகளின் கதி என்ன?**

இந்தியாவின் அதிகார வர்க்கம், நீதித்துறை, இராணுவ - போலீசு நிறுவனங்கள் மற்றும் செய்தி நிறுவனங்கள் அனைத்தும் பார்ப்பனிய இந்துமதத்தை இயல்பாக கருத்திலும், செயலிலும் ஆதரிக்கின்றன. அதன்படி இந்துமதவெறியர்களின் சித்தாந்தத்திற்கு நெருக்கமாகவே உள்ளன. இராணுவ - உளவுத்துறைகளின் உயர் பதவிகளுக்கு முசுலீம்கள் வர முடியாது என்பது எழுதப்படாத விதியாக பின்பற்றப்படுவதும் இதனால்தான்.

வேறு எந்தக் கட்சியையும் விட அதிகாரிகள் விரும்பிச் சேரும் கட்சியாக பா.ஜ.க.தான் இருக்கிறது. 1949 ஆம் ஆண்டு பாபர் மசூதியில் திருட்டுத்தனமாக வைக்கப்பட்ட ராமர் சிலையை பாதுகாத்த மாவட்ட நீதிபதி நாயர், 1987-இல் பூட்டை உடைத்து ராமனை கும்பிட தீர்ப்பளித்த நீதிபதியும் ஓய்வு பெற்றபின் பா.ஜ.க.வில் சேர்ந்தனர்.

இவர்கள் மட்டுமல்ல இந்தியா முழுவதும் ஓய்வு பெற்ற ஐ.பி.எஸ்., ஐ.ஏ.எஸ் அதிகாரிகள் பா.ஜ.க.வில் நிரம்பி வழிகின்றனர், முந்தைய ஆர்.எஸ்.எஸ். தலைவர் இராஜேந்திர சிங் உ.பி. மாநில ஐ.ஏ.எஸ். அதிகாரிகளுக்கு தேசபக்தி பற்றி வகுப்பே எடுத்திருக்கிறார்.

எனவே, கடந்த 50 ஆண்டுகளில் நடைபெற்ற மதக்கலவரங்கள் அனைத்திலும் அதிகாரவர்க்கம் - போலீசு - இராணுவம் - நீதித்துறை அனைத்தும் ஆர்.எஸ்.எஸ். இன் கிளையாகவே செயல்பட்டன என்பது எவரும் மறுக்க முடியாத உண்மையாகும். '87 மீரட் கலவரம் - ஹஷிம்புரா மலியானா படுகொலையிலும், '89 பகல்பூரிலும், '97 கோவை கலவரத்திலும் போலீசு - அரை இராணுவப் படைகள் ஏராளமான முசுலீம் மக்களைக் கொன்றன. '93 பாபர் மசூதி இடிப்பை வேடிக்கை பார்த்த எல்லைப் பாதுகாப்பு படையினர் பின்பு வழிபாடும் நடத்தினர். '93 பம்பாய்க் கலவரத்தில் முசுலீம்களை வேட்டையாடிய 20 போலீசு அதிகாரிகளை நீதிபதி ஸ்ரீ கிருஷ்ணா குறிப்பிடுகிறார். இன்றுவரை அவர்கள் மீது நடவடிக்கை ஏதும் எடுக்கப்படவில்லை.

இந்துமத வெறியர்கள் உருவாக்க விரும்பும் இந்து ராட்டிரத்துக்கு இப்போதே அடியாட்படை தயாராகிவிட்டதைத்தான் மேற்கண்ட சம்பவங்கள் காட்டுகின்றன. முசுலீம் மக்களுக்கு எதிராக மட்டுமல்ல தாழ்த்தப்பட்ட மக்களுக்கெதிரான மேல் சாதி வெறியோடும்தான் போலீசு நிறுவனங்கள் செயல்படுகின்றன. கொடியங்குளம் முதல் ரன்பீர்சேனா படுகொலை புரியும் பீகார் வரை அதற்குப் பல உதாரணங்கள் இருக்கின்றன.

எனினும் போலீசு - இராணுவத்தின் 'நடுநிலை'யை பட்டறியாத, படித்த முட்டாள்கள்தான் நம்புகின்றனர். இராணுவத்தில் முசுலீமைச் சேர்க்காதே என்ற ஆர்.எஸ்.எஸ். இன் பகிரங்கக் கோரிக்கை மதச்சார்பின்மை கோவணத்தையும் உருவி அரசை அம்மணமாக்குகிறது. இந்துமத வெறியர்களின் இக்கோரிக்கைக்குக் காரணம் என்ன?

பஞ்சாப் பிரச்சினையில், நீல நட்சத்திர நடவடிக்கையை எதிர்த்து இராணுவத்தின் சீக்கிய ரெஜிமண்ட் கலகம் செய்தது வரலாறு. முசுலீம்களைப் பெருந்திரளாக போலீசுப் பிரிவுகளில் சேர்த்தால் அவர்களும் கலகம் செய்வார்கள் - அப்பாவி முசுலீம் மக்களைக் கொல்ல மறுப்பார்கள் என்பதே இந்து மதவெறியர்களின் கவலை.

இனிமேல்தான் இப்படி நடக்கும் என்பதல்ல, ஏற்கனவே இப்படித்தான் நடந்திருக்கிறது. சில ஆண்டுகளுக்கு முன்பாக நடந்த ஜம்மு காசுமீர் போலீசின் வேலை நிறுத்தத்தைக் குறிப்பிடலாம். மத்திய அரசின் இராணுவ, துணை இராணுவப் படைகள் காசுமீர் முசுலீம் மக்கள் மீது நடத்திய அடக்குமுறைக்கு உள்ளூர் காசுமீர் போலீசு உடன்பட மறுத்தது. அதனால் ஏற்பட்ட முரண்பாடு பின்பு பெரும் வேலை நிறுத்தத்திற்கு இட்டுச் சென்றது.

இதையெல்லாம் எதிர்பார்த்துத்தான் இப்படிப் போராட்டம் நடக்கும் மாநிலங்களில் அந்த இன மக்களைக் கொண்டே தனிச் சிறப்பான போலீசுப் பிரிவுகள் - தனிச் சிறப்பான பயிற்சி அதிக சம்பளத்துடன் உருவாக்கப்படுகின்றன. அதாவது துரோகிகளுக்கான படை உருவாக்கப்படு


படிப்பகம்

www.padippakam.com

கிறது. அசாம் ரைபிள்ஸ், காசுமீர் ரைபிள்ஸ் போன்றவை இப்படித்தான் உருவாக்கப்பட்டன. இப்படி அவர்கள் எத்தனை துரோகப் படைகளை உருவாக்கினாலும், படைகளுக்குள் நிச்சயம் முரண்பாடு ஏற்படவே செய்யும்.

ஆனால், இத்தகைய கலகங்கள் மதத்தோடு மட்டும் நின்று விடாது. பார்ப்பனிய இந்துமதம் என்பது இன, மொழி, மத, வர்க்க, சாதி ஒடுக்குமுறைகளை உள்ளடக்கியது என்பதால் கலகங்கள் இந்த பிரிவுகளுக்குள்ளிருந்தும் எழும். அப்படி எழக்கூடாது என்பதற்குத்தான் நாட்டின் பல்வேறு பிரச்சினைகளுக்கு வேறு வேறு இன இராணுவப் பிரிவுகள் கவனமாக அனுப்பப்படுகின்றன.

மேலும் இந்திய இராணுவத்தின் பல பிரிவுகளும் சாதி ரீதியாகவே உருவாக்கப்பட்டு, இன்றும் பராமரிக்கப்படுகின்றன. மராத்தா, ஜாட், ராஜ்புதன, சீக்கிய கூர்க்கா ரெஜிமண்டுகள் இத்தகைய அப்பட்டமான சாதியப் பிரிவினையின் உதாரணங்களே. இந்திய ஆளும் வர்க்கத்தின் அடியாட்படையான இராணுவ, துணை இராணுவப் பிரிவுகள் அனைத்தும் தேசிய இன, சாதி ரீதியாக பிரித்தாளும் சூழ்ச்சியால்தான் இயங்குகின்றன. அதனால்தான் ஒரு இன மக்கள் போராட்டத்திற்கு, வேற்று இன இராணுவத்தை அனுப்பி தற்போது அடக்கி வருகிறார்கள்.

தமிழகத்து இந்தி எதிர்ப்பை அடக்க கேரளத்தின் மலபார் போலீசு, வடகிழக்கு தேசிய இனப் போராட்டங்களை அடக்க மராட்டியத்தின் மராட்டா ரெஜிமன்ட், காசுமீருக்கு மதராஸ் ரெஜிமண்ட், ஈழத்துக்கு பஞ்சாப் ரெஜிமண்ட் என ஒன்றுக்கு எதிராய் வேறு இனத்தை நிறுத்துகிறார்கள்.

இந்தப் பிரித்தாளும் சூழ்ச்சியும், நாடகமும் எத்தனை நாள் நடத்த முடியும்? விவசாயிகள், தொழிலாளர்கள் போராட்டம் முற்றி வெடிக்கும் போது இராணுவமும் வர்க்க ரீதியாகப் பிளவுபடும். 1942 காலனிய எதிர்ப்பு போராட்டத்தில் பம்பாயின் கப்பற்படை வீரர்களின் எழுச்சி அதற்கோர் உதாரணம். இன்று ராணுவத்தில் முசுலீமை நம்பாதே என்று துவங்கும் இந்து மதவெறியர்களின் கோரிக்கை அடுத்து சீக்கியனை நம்பாதே, அசாமியனை நம்பாதே, தமிழனை நம்பாதே என இறுதியில் சிப்பாயை நம்பாதே என்று முடியும்.

தன் நிழலைத்தவிர யாரையும் நம்ப இயலாத நிலைக்கு ஆளும் வர்க்கமும் அதன் அடிவருடிகளான இந்து மதவெறியர்களும் தள்ளப்படுவார்கள். அப்போது உழைக்கும் மக்களும் 'போலீசை நம்பாதே, இராணுவத்தை நம்பாதே' என்று கையில் ஆயுதம் ஏந்துவார்கள்.

- தொடரும்

## சிறுகதை:

# உயர்வு

• சிவசுப்ரமணிய ஜெயசேகர்

பாண்டியம்மாளையும் அவரது மகன் சேகர் துரையையும் வாசலுக்குச் சென்று ஆட்டோவில் ஏற்றி வழியனுப்பிவிட்டு உள்ளே நுழையும் முன்னர் 'ஹெக் ஹெக்' எனச் சிரிப்பொலி உள்ளேயிருந்து வெடித்துக் கிளம்பியது. எனது மைத்துனர் அழகர் பெருமாளும் எனது மனைவியும் ஒரே சமயத்தில் வாய்விட்டு சிரித்துக் கொண்டிருந்தனர்.

என் தலையைப் பார்த்ததும் அவர்கள் சிரிப்பை அடக்க முயன்றனர்; முடியவில்லை. நான் அவர்களின் சிரிப்பின் காரணத்தை யூகித்தறிவேன். எனினும் எனக்கு அவர்கள் மீது எவ்விதக் கோபமும் எழவில்லை. அமைதியாக எனது அறையை நோக்கி நடந்தேன்.

பாண்டியம்மாளும், சேகர்துரையும் எனது நண்பர் செல்லையாவின் மனைவியும் மகனுமாவர். அரசுப் பணியில் சேருவதற்கு முன்னர் நான் சிலகாலம் கொடைக்கானல் மலைப்பகுதியில் உள்ள மலைவாழ் மக்களுடன் வாழ நேர்ந்தது. அப்போது எனக்கு அறிமுகமானவர்தான் செல்லையா. சாதாரண முடிதிருத்தும் வேலையில் இருந்தவர் அவர். ஆனால் எனக்கும் அவருக்கும் இடையில் எப்படியோ நல்ல நட்பு ஏற்பட்டு விட்டது. தனது நட்பின் ஆழத்தைக் காட்ட பல வருடம் ஒட்டிக் கொண்டிருந்த புகைப் பிடிக்கும் வழக்கத்தை விட்டவர்.

தாட்டியமான உடல்வாகு உள்ளவர். நான் மலைப்பகுதியில் ஏற இறங்க சிரமப்படும் போதெல்லாம் வயது வித்தியாசத்தை மீறி என்னை சிறு பிள்ளையாகப் பாவித்து தோளில் சுமப்பார். நீச்சல் தெரியாத என்னை காட்டாற்றில் முதுகில் சுமந்து முதலையாகி அக்கரை சேர்ப்பார். பதினைந்து நிமிடத்தில் நூறு பரோட்டா தின்று சாதனை படைப்பார். கட்சிப் பணியில் ஈடுபட்டிருந்த என்னைக் காப்பாற்ற இடுப்பில் கத்தியும் சொருகி வருவார்.

அரசுப் பணி கிடைத்து நான் சமவெளிப் பகுதிக்கு வந்தபின்னர் நட்பின் பிரிவு அவரைப் பெரிதும் பாதித்திருக்க வேண்டும். ஏதோ போதைக்கு அடிமையாகி அவர் மரணம் அடைந்த செய்தி கேட்ட போது எனக்கு இடி விழுந்தது போல இருந்தது.

வாலிப வயதிற்கும் கீழே மூன்று குழந்தைகளுடன் அவரது விதவை மனைவி தவிப்பது நினைக்க கஷ்டமாக இருந்தது. அவர் விட்டுச் சென்ற பிளம் காட்டினால் தான் அவர்கள் வாழ்க்கை ஓடுவதாக அறிந்தேன். மூத்தவன் சேகர் துரை பெரியவனானதும் தந்தையின் தொழிலை செய்ய முன் வந்து கொடைக்கானல் அருகில் உள்ள அவர்களது ஊரான பள்ளங்கியில் கடை வைக்க இருப்பதாக கடிதம் எழுதினான்.

முடிதிருத்தகத்திற்குத் தேவையான சாமான்கள் திருச்சியில் விலை மலிவாக கிடைப்பதாக கடிதத்தில் குறிப்பிட்டிருந்தான். திருமணமாகி திருச்சியிலேயே தங்கியிருந்த எனக்கு அது மகிழ்ச்சியைக் கொடுத்தது. எனவே அவனையும் அவனது தாயாரையும் வீட்டிற்கு வருமாறு கடிதம் எழுதினேன். அவர்கள் இருவரும் என் வீட்டிற்கு வந்த அன்று தான் சற்றும் எதிர்பாராமல் எனது மைத்துனர் அழகர் பெருமாளும் வந்து சேர்ந்தார்.

அழகர் பெருமாள் எனது மைத்துனர் மட்டுமல்ல. தமிழ்த் திரையுலகில் பலரும் அறிந்த புகழ்பெற்ற இயக்குனரும் கூட. அவருடைய படங்கள் நான்கைந்து வெளி வந்திருந்த போதிலும் அனைத்தும் பல தரப்பினரையும் கவர்ந்து நூறு நாட்கள் ஓடியவை. செல்வத்தில் திளைப்பவர். எனக்கும் அவருக்கும் பல விசயங்களில் கருத்து வேறுபாடுகள் உண்டு. எனவே, பல விசயங்கள் பற்றி நாங்கள் விவாதிப்பதில்லை. விவாதங்கள் உறவுக்கு ஊறு செய்யும் என்பதால் அதற்கு என் மனைவி தடை விதித்திருந்தாள்.

சேகர்துரைக்கும், பாண்டியம்மாளுக்கும் அவரைச் சந்தித்ததில் பெருமகிழ்ச்சி அவரின் படப் பெருமைகளையும் பல முறை பார்த்ததற்கான காரணங்களை யும் மகிழ்ச்சியுடன் அவருடன் பகிர்ந்து கொண்டனர்.

ஒருநாள் தங்கியிருந்து இன்று காலை கிளம்பும்போது அவர்கள் இருவரும் சொல்லிக் கொள்வதற்காக அவரிடம் சென்றனர். பாண்டியம்மாள் இறுதியில் ''நானுங்கூட நல்லா பாட்டு எழுதுவே

www.padippakam.com

னுங்க. எனக்குங்கூட உங்க படத்துல எதுனாச்சும் எழுத சான்சு குடுங்க'' என்றவாறு விடைபெற்றனர்.

பாண்டியம்மாளின் இந்த இறுதிக் கோரிக்கையே அவர்களின் வெடிச் சிரிப்பிற்குக் காரணம்.

முகத்தில் சிரிப்பு மாறாமல் எனது அறையில் நுழைந்த என் மனைவி ''நல்ல பிரண்டு போங்க உங்களுக்கு, கடைசில அவளுக்கு சினிமாவுலல்ல பாட்டு எழுதணுமாம்'' நான் பேசாதிருந்தது அவளுக்கு இன்னும் களிப்பை ஊட்டியது, ''நல்ல வேளை அந்த பய நடிக்கணும்னு சொல்லாம போனானே''.

கைலியை மடித்துக் கட்டிக் கொண்டே கைகளில் மோதிரங்கள் மினுக்க, கண்களில் கேலி மின்ன உள்ளே நுழைந்த என் மைத்துனர் ''நல்ல ஜோக் மச்சான். அவனவன் இராத்திரி பகலா ஃபைவ் ஸ்டார் ஹோட்டல்ல ரூம் போட்டு மண்டையைப் பிய்ச்சிக்கிட்டு டியூனும் பாட்டும் போடுறோம். இது என்னன்னா ரொம்பச் சுலபமா சினிமாவுல பாட்டு எழுதுவேன்குதே''.

கலையும் இலக்கியமும் உழைக்கும் மக்களிடமிருந்து வருவது; அவை உழைக்கும் மக்களுக்கானது என்பதில் திடமான நம்பிக்கை உள்ளவன் நான். கலை இலக்கியம் ஒரு சிலருக்கானதே, அதுவும் பொழுது போக்கிற்கானதே என்பது அவர் கட்சி. அவரிடமிருந்து வேறு என்ன வார்த்தைகளை எதிர்பார்க்க முடியும். நான் பேச்சை திசை மாற்றினேன்.

ஓரிரு மாதங்களுக்குப் பின் அவர் திடீரென என்னைத் தொலைபேசியில் தொடர்பு கொண்டார். ''மச்சான் நா அடுத்த படத்துக்கு ஷூட்டிங் கொடைக்கானல்ல பண்லாம்னு இருக்கேன். எல்லாரும் பண்ணின அதே லொகேஷன்ல நானும் பண்ண விரும்பல. அங்கேயே எங்கயாவது இன்டீரியரா பண்ணலாம்னு தோணுது. நீங்கதான் அங்க கொஞ்ச நாள் இருந்திருக்கீங்கல்ல. வாங்க நாம போயி லொக்கேஷன் பாத்துட்டு வரலாம்''

விருப்பம் இல்லாவிட்டாலும் அவரது கோரிக்கையை மறுக்க முடியவில்லை.

கொடைக்கானலின் 'லேக்வியூ' தங்குமிடத்தில் கால் வைக்கவே எனக்கு மனசு கூசிற்று. அங்குள்ள பணியாளர்கள் என்னை வித்தியாசமான 'பிராணியைப்' போல பார்த்தார்கள். ஒரு பணியாளர் என்னிடம் வந்து பெருமையாக ''இந்த 116 எப்பவுமே கார்த்திக் சார் ரூம். மொத்த வாடகைக்கு எடுத்துருக்கார் அவருக்கு நான்தான் பிடிச்ச சர்வெண்ட்'' என்றார். எனது முகத்தில் எந்தவித விளைவும்



இல்லாததால் பேச்சை நிறுத்தினார்.

நடக்கும் இடமெல்லாம் காசுமீர் கம்பளங்களின் அலங்காரங்கள். சுவரெங்கும் ஓவியங்கள், மின்சாரச் சூடேற்றிகள், அதன் குளியலறையும், கழிப்பறையும் மத்தியதர வர்க்கத்து வீடுகளுக்குச் சமம்.

இரண்டு நாட்களில் சாதாரணக் காட்சிகள் அலுத்ததும் அவர் என்னிடம் ''சொல்லுங்க மச்சான் உங்களுக்குத் தெரிஞ்ச வித்தியாசமான இடம் எதாச்சும்.''

''பள்ளங்கின்னு ஒரு ஊர் இருக்கு. இங்கிருந்து ஏழெட்டு கிலோ மீட்டர் தூரம் இருக்கும். என் பிரண்டு செல்லையா ஊர். அவர் இருந்தப்ப ஒரு தடவ போனதா ஞாபகம், பிளம்சும், பேரிக்காயும், பீன்சும், கேரட்டும் காடுகளாக இருக்கும். நம்ப சேகர்துரை கூட அங்கதான் இருப்பான். அவங்க 'பிளம்ஸ்' காடும் ரொம்ப நல்ல இடம்னு சொன்னான் ஒரு பால்ஸ் (நீர்வீழ்ச்சி) கூட இருக்காம். போலாமா?''

''பள்ளங்கி போற ரோடு வேல நடக்குது சார் அதனால கார்ல போக முடியாது. ஒரு நாலைஞ்சு கிலோ மீட்டர் அட்ஜஸ்ட் பண்ணி ஜீப்ல போகலாம். அப்புறம் நடந்துதான் போகணும்'' ஹோட்டல் வரவேற்பாளர் கூறினார்.

'பரவாயில்லை' என்றபடி பயணத்தைத் தொடர்ந்தோம். ஜீப்பை விட்டு இறங்கி நடக்க நடக்க அற்புதமாக இருந்தது. மலைகளும், மேகங்களும் சுற்றிச் சுற்றி வந்தது. இதமான வெயில் குளிர் சாதன அறையைத் தோற்கடித்தது. கண்ணில் பட்ட காடுகளில் எல்லாம் மனிதர்கள் தீவிரமாக வேலையில் ஈடுபட்டிருந்தனர். இயற்கைக்கு எதிரான போராட்டத்தில்


படிப்பகம்

www.padippakam.com

மனிதன் எவ்வளவு தூரம் வெற்றி பெற்றிருக்கிறான் என்பதை அந்தக் காடுகளைப் பார்க்கும் போதுதான் தெரிந்தது.

பள்ளங்கியில் சேகர் துரையின் முடி திருத்தகத்தைக் கண்டறிவது எளிதாகத் தான் இருந்தது. ஆனால் கடை அடைக்கப் பட்டிருந்தது. ''பிளம்ஸ்பழம் பறிக்கிற நேரங்க இது..காடு இருக்கிறவ்ங்க மூச்சு விடக் கூட நேரமிருக்காது இந்த குளிர்ல யும், மழையிலயும் காட்லதான் கிடப்பாங்க குரங்குங்க கிட்டயிருந்து பழத்த காப்பாத் தணுமில்ல'' என்றார் ஒரு பெரியவர்.

நான் அழகர் பெருமாள் முகத்தைப் பார்த்தேன். நடந்து வந்ததில் சற்று களைப்படைந்திருந்தார் அவர். எனினும் புது இடம் காணும் ஆர்வத்தில் ''பரவால்ல மச்சான் அவுங்க காடு ரொம்ப நல்லா இருக்கும்னு சொன்னீங்கல்ல எங்க இருக்குன்னு கேளுங்க போய்ப் பார்த்திடுவோம்''.

கொடைக்கானலிலிருந்து பழனிமலை செல்லும் குறுக்குச் சரிவில் பயணிக்க வேண்டியதிருந்தது. மிகவும் கஷ்டமான மலைப்பாதை. குறுகிய நடைபாதை கடக் கும் போது வழுக்கி விழுந்து உடைகளை ஈரமாக்கிக் கொண்டார். எனக்கு 'பழைய' ஞாபகம் கை கொடுத்தது. ஆனால் அந்தக் கஷ்டத்தையும் மீறி ஆண்களும், பெண் களும் குழந்தைகளும் கூட பத்து, இருபது கிலோ பிளம்ஸ் கூடைகளைச் சுமந்தவாறு எங்களைக் கடந்து கொண்டிருந்தனர்.

இரண்டு மூன்று கிலோ மீட்டர்கள் கடந்ததும் நாங்கள் தளர்ந்து போனோம். மாலை வெய்யில் வேறு மங்கிக் கொண்டி ருந்தது. காற்றின் ஊதல் அதிகமாகிக் கொண்டிருந்தது. தூரத்து மலைகளையெல் லாம் வெண்பனி மூட ஆரம்பித்திருந்தது.

வழியில் கூடை சுமந்த பெண்ணிடம் விசாரித்தேன். '' அவுக காடு இன்னும் கொஞ்ச தூரம்தான். இப்படி திரும்பி அந்தச் சரிவுல இறங்குனா போதும் அந்தாக்க ஓவுண்ணு அருவி சத்தம் போடு தில்ல அதாங்க. அங்கன பள்ளத்துல. அதாங்க அவுககாடு'' என்றபடி கை நிறைய பிளம்ஸ் பழங்களை அள்ளிக் கொடுத்தாள்.

எதற்கும் சற்று ஓய்வு எடுக்கலாம் எனக் கருதி பாதையில் உட்கார்ந்தோம். அனைவரும் இயற்கையின் அழகை ரசித்தபடி பிளம்ஸ் பழங்களைக் கொறித்துக் கொண்டிருந்தோம்.

சற்றைக்கெல்லாம் தூரத்திலிருந்து அந்த அமைதியைக் கிழித்துக் கொண்டு ஒரு பாடல் ஒலி எழுந்தது. எவ்விதப் பின்னணி இசையும் இன்றி அந்தக் குரல்

**கைலியை மடித்துக் கட்டிக் கொண்டே கைகளில் மோதிரங்கள் மினுக்க, கண் களில் கேலி மின்ன உள்ளே நுழைந்த என் மைத்துனர் ''நல்ல ஜோக் மச்சான். அவனவன் இராத்திரி பகலா ஃபைவ் ஸ்டார் ஹோட்டல்ல ரூம் போட்டு மண்டையைப் பிய்ச்சிக்கிட்டு டியூனும் பாட்டும் போடுறோம். இது என்னன்னா ரொம்பச் சுலபமா சினிமாவுல பாட்டு எழுதுவேன்குதே''.**

எங்களை நெருங்க ஆரம்பித்தது. குரலின் இனிமையிலும், பாடல் வரிகளிலும் காணப்பட்ட உள்ளார்ந்த சோகத்திலும் ஈர்க்கப்பட்டு நாங்கள் பேச்சற்று உட்கார்ந்திருந்தோம்.

இடையில் விட்டு விட்டுப் பாடல் தொடர்ந்தது.

''நான் பூக்கும் பருவத்திலே என்னை பார்க்கப் பரிதவிச்ச ராசாவே

நான் பிஞ்சு விடும் நாளையிலே என்னைப் பிரியாம தவிச்சவனே

நான் காய்க்கும் காலத்திலே என்ன காலமெல்லாம் காத்தவனே

**சற்றைக்கெல்லாம் தூரத்திலிருந்து அந்த அமைதியைக் கிழித்துக் கொண்டு ஒரு பாடல் ஒலி எழுந்தது. எவ்விதப் பின்னணி இசையும் இன்றி அந்தக் குரல் எங்களை நெருங்க ஆரம்பித்தது. குரலின் இனிமையிலும், பாடல் வரிகளிலும் காணப்பட்ட உள்ளார்ந்த சோகத்திலும் ஈர்க்கப்பட்டு நாங்கள் பேச்சற்று உட்கார்ந்திருந்தோம்.**

நான் கனி பழுக்கும் காலையிலே கைவிட்டுப் போனியே நீ''

ஒரு இடைவெளியில் அழகர் பெருமாள் மௌனத்தை உடைத்தார். ''என்ன அற்புதமான பாட்டு? பாட்டும், இடமும், சூழலும் ரொம்ப அற்புதமாக இருக்கு'' அவர் வாயைத் திறப்பதற்கா கவே காத்திருந்தது போல அவரது உதவி இயக்குநர்களும் புகழ ஆரம்பித் தார்கள். மேலோட்டமான அவர்களது ரசனையையும் மீறி, அவர்கள் பாடலில் ஆழ்ந்திருந்ததை பேச்சு காட்டிற்று.

அந்தக் கூட்டத்தில் நான் மட்டும் ஏதும் பேசவில்லை. பாட்டு மீண்டும் தொடர்ந் தது. நான் களைப்பு நீங்கி எழுந்து பாதையையும் பாட்டு வந்த திசையையும் நோக்கி நடந்தேன். அவர்கள் என்னைப் பின் தொடர்ந்தனர். பாதை குறுகித் திரும்பிக் கீழிறங்கியது. அனைவரும் குதித்துத் திரும்பினோம்.

புதர்களுக்கு மறைவிலிருந்து தலை யில் பிளம்ஸ் பழக் கூடையுடன் அந்தப் பாட்டுக்காரி வெளிப்பட்டாள். ''அட பாண்டியம்மா'' எங்களைப் பார்த்ததும் அவளுக்கு வெட்கமாயிற்று. ''ஐயா ராசா எப்ப வந்தீங்க'' என்றவாறு கூடையைக் கீழிறக்கினாள். ''ஐ டைரக்டரு தம்பி நீங்க வந்துருக்கியளா, ஒரு வார்த்தை கடுதாசி எழுதிப் போட்டுருக்கப் படாது. இம்மாந் தூரம் நடந்தா வந்திய? ஐயோ பாவம். காடுல்ல இது. ரோடா?''

''இப்ப பாட்டு பாடிட்டு வந்தது நீங்கதானா?'' உதவி இயக்குநரில் ஒருவரான ஸ்டாலின் வினவினார்.

பாண்டியம்மாளுக்கு வெட்கம் தாங்க முடியவில்லை. ''சும்மாதேன் கூடையைத் தூக்கிட்டு மேடு ஏறணுமுல்ல அதான் சும்மா இட்டு கட்டி பாடிகிட்டு வந்தேன்''.

''ரொம்ப நல்லா இருந்துச்சும்மா உங்க பாட்டு'' இது பாவேந்தன், இன்னொரு உதவி இயக்குனர். பாண்டியம்மாவுக்கு மேலும் வெட்கம் கூடிற்று. தரையில் விரல்களால் கீறினாள், முந்தானையை கைகளால் முடிச்சிட்டாள்.

நான் அழகர் பெருமாளை நோக்கி னேன். எங்கிருந்து உண்மையான இசை யும் கலையும் பெருகுகிறது என்பதை உணர்ந்தீர்களா என்றெல்லாம் நான் கேட் கவில்லை. இருப்பினும் என் பார்வை யின் பொருளை அவர் உணர்ந்திருக்க வேண்டும்.

ஏதோ பேசி நகைத்தபடி மேலும் சில பெண்கள் கூடையுடன் மலையேறி னார்கள்.

படிப்பகம்

www.padippakam.com

# போலிகளே! 'கம்யூனிசப் பெயரை' மாற்றுங்கள்!

# நாங்கள் பேசவும், நீங்கள் ஏசவும் தேவையில்லை

"இனி உங்களிடம் பேச என்ன இருக்கிறது?'' என்றொரு கவிதை எழுதினார் தோழர் துரை. சண்முகம். சென்ற இதழ் புதிய கலாச்சாரத்தில் அது வெளியானது. வலது, இடது கம்யூனிஸ்டுகளின் சந்தர்ப்பவாதம் குறித்து நாம் விமர்சித்து எழுதுவது இதொன்றும் முதல் முறையல்ல.

ஆனால் இதுநாள் வரை உலக்கை விழுங்கியவன் போல மவுனம் சாதித்தவர்கள், "இனி பேச என்ன இருக்கிறது'' என்று நாம் கேட்டவுடனே பேசித் தீர்த்து விட்டார்கள்.

டிசம்பர் - 12, 13, 14 தேதிகளில் மார்க்சிஸ்டு கட்சியின் தீக்கதிர் நாளேட்டில் புதிய கலாச்சாரத்தை விமரிசித்து வெளிவந்துள்ள 'கவிதை'களிலிருந்து சில முத்துக்களை மட்டும் உங்கள் பார்வைக்கு எடுத்துப் போடுகிறோம்.

"முதலாளிகளின் கூஜா, பண்ணைகளின் தொன்னை, கோபாலபுரத்தின் அடிமை, அபினி கடத்தல் - மாஃபியாக் கூட்டம், கொள்ளைக்காரர்கள், எதிரியின் ஐந்தாம் படை, கூலிப்படை, நாய், ஏவல் நாய், சொறிநாய், நரி, கழுதை, பன்றி, டினோசர்....'' இன்னபிற.. இன்னபிற.

இவையெல்லாம் நம் மீது மார்க்சிஸ்டுகள் கூறும் 'விமரிசனங்கள்'. சாராயக்கடை வாசலில் மட்டுமே கேட்கக் கிடைக்கும் இத்தகைய கவிதை மொழிகளைப் படிக்க விரும்பும் வாசகர்கள் தீக்கதிரை வாங்கிப் படியுங்கள்.

கொதிகலன் வெடித்தாற்போன்ற கோபம் மார்க்சிஸ்டுகளுக்கு வந்ததன் மர்மம் இதுதான். புதிய கலாச்சாரத்தில் வெளிவந்த கவிதையை தினமணி டிசம்பர் - 10-ம் தேதி வெளியிட்டது.

அத்தோடு தொலைந்ததா? டிசம்பர் - 11-ம் தேதி அதே கவிதையை முரசொலி வெளியிட்டது. 12-ம் தேதி தலையங்கத்தில் கவிதை வரிகளை மீண்டும் மேற்கோள் காட்டி, "இதற்குப் பதில் சொல்லும் நாணயமோ, அறிவுத் தெளிவோ மார்க்சிஸ்டுகளுக்குக் கிடையாது'' என்று வாலை முறுக்கி விட்டது.

தங்கள் 'அறிவுத் தெளிவை' நிரூபித்தாக வேண்டிய கட்டாயத்திற்கு உள்ளான மார்க்சிஸ்டுகள் உதிர்த்த முத்துக்கள்தான் மேலே நீங்கள் படித்தவை.

"அம்புக்கு முகவரி எய்தவன் தானே - இந்த அடிமைகட்கு முகவரி கோபாலபுரமோ'' என்று தனது வழக்கமான வேலையைத் தொடங்குகிறது தீக்கதிர்.

கனவான்களே, ம.க.இ.க.வும் புதிய கலாச்சாரமும் தி.மு.க.வின் கையாட்கள் என்ற உளறலை மக்களும் ஏற்கமாட்டார்கள். உங்கள் மரியாதைக்குரிய புரட்சித் தலைவியும் கூட ஏற்க மாட்டார்.

ரசியாவை போலி சோசலிசம் என்று நாங்கள் சொன்னபோது அதற்குப் பதில் சொல்ல வக்கில்லாமல் எங்களை "சி.ஐ.ஏ. கைக்கூலிகள்'' என்றீர்கள். "நான்தாண்டா உண்மையான சி.ஐ.ஏ. கைக்கூலி'' என்று உங்கள் தோழர் கோர்பசேவ் நிரூபித்தவுடன் பேச முடியாமல் அசடு வழிந்தீர்கள். மீண்டும் ஏன் இந்த அசட்டுத்தனம்?

கடந்த 18 ஆண்டு பு.க. இதழ்களிலிருந்து தி.மு.க.வையோ வேறு யாரையோ துதிபாடி எழுதப்பட்ட ஒரு வரியைக் கூட யாரும் காட்ட முடியாது. "எல்லோரையும் குறை சொல்பவர்கள்'' என்பதுதான் உங்களது சமீபத்திய செம்மலர் இதழ் எமக்களித்துள்ள பட்டம். மாறாக உங்கள் கதை என்ன? கருணாநிதி முதல் எம்.ஜி.ஆர். வரை எந்தக் கூட்டணியில் இருக்கிறீர்களோ அதன் தலைவர்களைத் துதிபாடி நீங்கள் பேசிய பேச்சுக்களைத் தொகுத்து வெளியிட்டால் உங்கள் கதி என்ன? யோசித்தீர்களா?




முரசொலியோ, தினமணியோ எமது கவிதையை எடுத்து வெளியிடுவது அவர்கள் விருப்பம். நீங்கள் கூட்டணிக்காகக் கொள்கையைத் தயாரிப்பது போல நாங்கள் யாருக்காகவும் கவிதையைத் தயாரிப்பதில்லை.

இத்தனைக்கும், நீங்கள் மறக்க விரும்பும் களப்பால் குப்பு, இரணியன் போன்ற தியாகிகளின் பெயர்களையும், உங்களைத் துன்புறுத்தக்கூடிய மேலும் சில வரிகளையும் நீக்கிவிட்டுத்தான் அவர்கள் அக்கவிதையை வெளியிட்டிருந்தார்கள்.

வெளியிட்டவர்கள் "ம.க.இ.க.-வின் புதிய கலாச்சாரம் இதழிலிருந்து'' என்பதை நாணயமாகக் குறிப்பிட்டிருந்தார்கள்.

உங்கள் கதை என்ன? நீங்கள் நடத்தும் கலை இரவுகளில் ம.க.இ.க.வின் பாடல்களை உங்கள் சொந்தப் பாடல் போலப் பாடாத மேடை உண்டா? தட்டிக் கேட்டால் தகராறு செய்யாத இடமுண்டா? எத்தனை முறை பத்திரிகையில் எழுதியும் நீங்கள் திருந்தாததால், எமது பாடல் ஒலிப்பேழைகளில் உங்கள் திருட்டு பற்றி அறிவிப்பே செய்திருக்கிறோமே!

அது மட்டுமா? வாஜ்பாயி - ஜெயலலிதா கூட்டணியை அம்பலப்படுத்தும் எமது பாடலில் "பிரதமர் பதவி சீட்டுக்குள்ளே போயசு மூட்டைப் பூச்சி'' என்ற பாடல் வரியை நீங்கள் பாடி, மக்கள் கைதட்டியவுடனே புளகாங்கிதம் அடைந்து "நாளை நடப்பதை இன்றே கூறும் மார்க்சிஸ்டுகளாகிய எங்களுடைய தீர்க்க தரிசனம்'' என்று வெட்கமில்லாமல் மேடையில் பொய் சொன்னீர்கள். (தாம்பரத்தில் நடந்த கலை இரவுக் கூட்டம்).

பிறகு வாஜ்பாயி ஆட்சி கவிழ்ந்தது. கூட்டணியில் உங்கள் இடம் மாறியது. பாட்டும் மாறியது. போயசு மூட்டைப் பூச்சி என்பதற்குப் பதிலாக "மம்தா மூட்டைப் பூச்சி'' என்று இப்போது வரியைத் திருத்திப் பாடுகிறார்கள் உங்கள் பாடகர்கள்.

அடுத்தவன் ரத்தத்தைக் குடித்துத் தன் ரத்தமாக்கிக் கொள்ளும் மூட்டைப் பூச்சிகளையொத்த உங்களை என்ன பெயரிட்டு அழைப்பது?

பிரெஞ்சுப் புரட்சி, சீனப்புரட்சி, ரசியப் புரட்சி போன்ற சொற்களிலிருந்து புரட்சியை மட்டும் வெட்டியெடுத்துத் தன் பெய


படிப்பகம்

www.padippakam.com

ருக்கு முன்னால் ஒட்டிக் கொண்ட தலைவியும், அடுத்தவன் பாடலின் வார்த்தையை தமக்கேற்ப வெட்டி ஒட்டிக் கொண்டவர்களும் இணைந்தது ஒரு வேளை இயற்கை விதியோ?

முகத்தையே தொலைத்தவனுக்கு அடுத்தவனின் முகவரி பற்றிய ஆராய்ச்சி எதற்கு? ஒவ்வொரு பொதுத் தேர்தலுக்கும், இடைத்தேர்தலுக்கும், நகராட்சித் தேர்தலுக்கும் உங்கள் முகவரிதான் மாறியபடி இருக்கிறது. இப்போதைக்கு போயசு தோட்டத்தின் வாயிலில் வலப்புறம் ஒருவரும், இடப்புறம் ஒருவருமாக நின்று கொண்டிருக்கிறீர்கள்.

''கழுதை அறியுமோ கற்பூர வாசனை - பன்றி அறியுமோ நந்தவன மகிமை'' என்பது ஒரு தீக்கதிர் கவிதையின் தலைப்பு. நந்தவனப் பூக்களின் மகிமையும், அம்மவின் கற்பூர வாசனையும் மணியடிக்கும் பூசாரிகளுக்குத்தானே தெரியும். கழுதைக்கும் பன்றிக்கும் தெரிய நியாயமில்லை தான்.

''பண்ணைகளின் தொன்னைகள்'' என்று எங்களை மோனை நயத்துடன் சாடியிருக்கிறார் உங்கள் கவிஞர். உங்கள் கூட்டணியில் இருக்கும் மூப்பனார் இதைப் படித்துச் சிரித்திருப்பாரா, வெட்கப்பட்டு முகம் சிவந்திருப்பாரா? தெரியவில்லை.

கபிஸ்தலம் நிலமீட்புப் போராட்டத்தில் அடி உதைபட்ட வலது கம்யூனிஸ்டு கட்சித் தொண்டர்கள் இதைப் படித்துக் குமுறுவார்களா, குதூகலிப்பார்களா? தெரியவில்லை.

வெண்மணியின் 'ஆவிகள்' கண்ணீர் விடுமா, கட்சி அலுவலகத்தின் கதவைத் தட்டுமா? அதுவும் விளங்கவில்லை.

எங்களை ''முதலாளிகளின் கூஜாக்கள்'' என்று இகழ்கிறீர்கள். ''கூஜாவிலும் கூஜா இப்பேர்ப்பட்ட வெள்ளி கூஜாவை இந்தியாவில் எங்குமே கண்டதில்லை'' என்று ஜோதிபாசுவின் ஆட்சியைப் புகழ்ந்திருக்கிறார்கள் இந்திய முதலாளிகள்.

பழைய கதை கிடக்கட்டும். ''மேற்கு வங்கத்தில் தொழில் வளர்ச்சி கெட்டதற்குக் காரணம் தொழிலாளர் போராட்டங்கள் தான்'' என்று அறிக்கை விட்டிருக்கிறார் உங்கள் புதிய முதல்வர் புத்ததேவ் பட்டாசார்யா.

''இது பொய். மே. வங்கத்தில் வேலை நிறுத்தத்தினால் உற்பத்தி முடங்கியது 30 லட்சம் மனித உழைப்பு நாட்கள். முதலாளிகளின் கதவடைப்பினால் முடங்கியது 176 லட்சம் நாட்கள்'' என்று ஆதாரத்துடன் மறுக்கிறார் சி.ஐ.டி.யு. தலைவர் சித்தப்பிரதா மஜூம்தார் (டைம்ஸ் ஆப் இந்தியா - டிசம்பர் - 2000)

அது மட்டுமல்ல, ''எப்போதும் தொழிலாளர்களையே தியாகம் செய்யச் சொல்கிறீர்களே முதலாளிகளையும் கொஞ்சம் தியாகம் செய்யச் சொல்லுங்கள்.'' ''கட்சியில் முதலாளிகளின் எடுபிடிகள் அதிகரித்து விட்டார்கள்... பதவி நாற்காலி, கம்யூனிஸ்டுகளை எப்படிச் சீரழிக்கும் என்பதற்கு வரலாற்றில் நிறைய ஆதாரமுண்டு'' என்று உங்கள் முதல்வரை திருப்பி ஒரு பிடி பிடித்திருக்கிறார்.

இது ஐந்தாம் படை, கூலிப்படை, ஏவல் நாய், சொறி நாயின் குரைப்பு அல்ல; கூஜாவுக்குள் சிக்கிய சி.ஐ.டி.யு. தலைவரின் கதறல்; ஊரே சிரிக்கும்படி டைம்ஸ் ஆப் இந்தியாவில் வந்திருக்கும் பேட்டி.

எந்த நாடாளுமன்ற நாற்காலி கம்யூனிஸ்டுகளைச் சீரழிக்கிறது என்று சி.ஐ.டி.யு தலைவர் சொல்கிறாரோ, அந்த நாடாளுமன்றத்துக்காக ''நாடி நரம்புகளை முறுக்கேற்றி சமர் புரிந்த வீரர்கள்'' (தீக்கதிர் 12.12.2000) என்று மார் தட்டுகிறது உங்கள் கவிதை.




நாற்காலிப் போராட்டமே புரட்சி என்று மார்தட்டும் கட்சிக்கு, 'நா'வுக்கு 'நா' போட்டு எழுதுபவர்தான் கவிஞர்! தவிடு தின்னும் ராஜாவுக்கு முறம் பிடிப்பவன் தான் மந்திரி.

''நாற்காலிக்காக நாடி நரம்பை முறுக்கேற்றும் நாயகன்'' திருவாளர். தாமரைக்கனி அவர்கள்தான் என்றல்லவா எண்ணியிருந்தோம். நாடாளுமன்றத்துக்காக நாடி நரம்புகளை முறுக்கேற்றும் ''கம்யூனிஸ்டுகளை'' நாங்கள் இப்போதுதான் பார்க்கிறோம். மோதிரமும் போட்டு விட்டிருப்பாரே அம்மையார்!

அடுத்தநாள் (14.12.2000) உஷாரான இன்னொரு கவிஞர் ''அற்பச் சீட்டுகள் கூட மக்களுக்கான கேடயம்தான்'' என்று கொஞ்சம் அடக்கி வாசிக்கிறார். சீட்டுகள் அற்பமானவை மட்டுமல்ல சொற்பமானவைதான் என்பதையும் சேர்த்துச் சொல்லுங்கள். வெட்கமென்ன?

எண்ணெயைப் பூசிக் கொண்டு நீங்கள் தோட்டத்தில் உருண்டாலும் ஒட்டப்போவது இரண்டு மூன்று சீட்டுதான். இப்படியொரு 'கேடயம்' கிடைக்கவில்லையென்று யார் அழுதார்கள்?

இந்தக் கேள்வியை நாங்கள் கேட்டால் நாய், பேய் என்று 'கவிதை' பாடுவீர்கள். ஜனசக்தி இதழின் பொன்விழாக் கூட்டத்தில், உங்கள் தலைவர்கள் நல்லக் கண்ணு, சங்கரய்யா ஆகியோரை மேடையில் வைத்துக் கொண்டு திரைப்பட இயக்குனர் சேகர் இதே கேள்வியைத்தான் கேட்டார். உங்கள் தொண்டர்கள் அவருக்கு உற்சாகமாகக் கை தட்டினார்கள். (பார்க்க பழைய நக்கீரன் இதழ்)

பீதியடைந்த தலைவர் சங்கரய்யா, ''சீனத் தலைவர் மாவோ, சியாங்கே ஷேக்குடன் ஐக்கிய முன்னணி வைத்து ஜப்பானை எதிர்த்த வரலாற்றை'' அவிழ்த்து விட்டார்.

இந்த சீன நீதிக்கதைக்கு ஒரு முடிவு கட்டுவோம். ஜப்பானை எதிர்த்த போரில் (தேர்தலில் அல்ல) உறுதி காட்டிய சீன கம்யூனிஸ்டு கட்சியுடன் ஐக்கிய முன்னணி அமைக்க மறுத்த சியாங் கே. ஷேக்கை அவரது தளபதிகளே கைது செய்து மாவோவின் முன்னால் நிறுத்தி ஐக்கிய முன்னணி அமைக்க நிர்பந்தித்தனர். புரட்சித் தலைவியை உங்கள் கட்சி ஆபீசில் கொண்டு வந்து நிறுத்திய அவரது தளபதி யார் - தினகரனா?

அது கிடக்கட்டும். உங்கள் இருவரில் யார் மாவோ? முன்னர் ஒரு முறை அம்மையார் ஐதராபாத்திற்குத் தலைமறைவாகி மீண்டும் தலைகாட்டியபோது தன்னை மாவோவுக்கு ஒப்பிட்டுக் கொண்டார். விவரம் புரியாமல் கதை சொல்லி, மன்னிப்புக் கேட்க வேண்டிய கட்டாயத்துக்கு ஆளாகி விடாதீர்கள்.

உங்கள் கூட்டணிக்கு தேர்தல் அரசியல் தருமத்தின் படியே நீங்கள் அளிக்கும் விளக்கம் என்ன? ஊழலா - மதவெறியா என்றால் மதவெறிதான் பிரதான எதிரி என்கிறீர்கள். அப்படியானால் ''ஜெயலலிதா ஊழல் பேர்வழி என்பதிலும், ஊர் சொத்தைக் கொள்ளையடித்தவர் என்பதும் உண்மைதான். இருந்தாலும் மதவெறியை எதிர்க்கும் ஒரே நோக்கத்திற்காகத்தான் அவருடன் கூட்டணி அமைத்திருக்கிறோம்'' என்று மேடையில் சொல்ல வேண்டுமல்லவா?

நடப்பதென்ன? டான்சி வழக்கில் தண்

படிப்பகம்

www.padippakam.com

டனை கிடைத்தவுடன் ஆறுதல் சொல்ல தோட்டத்துக்கு ஓடுகிறீர்கள். ''இதெல்லாம் சும்மா கீழ் கோர்ட்டுதான்; உச்ச நீதிமன்றம் வரை போவோம்'' என்று நாவலர் போலப் பேசுகிறீர்கள்.

ஐயா, மேற்படி ஊழல் வழக்குகளில் நீங்கள்தான் வாதி. ஜெயலலிதா பிரதிவாதி. மறந்துவிட்டதா, ஐந்தாண்டுகள் முன் தமிழகம் முழுவதும் மேடை போட்டு ஜெயா மீது ஊழல் குற்றம் சாட்டி, மக்களிடம் நீதி கேட்டது நீங்கள்தான். தீர்ப்பு வந்தவுடன் பிரதிவாதி ''மேல் முறையீடு'' செய்வதைப் பார்த்திருக்கிறோம். பிரதிவாதி சார்பாக வாதியே மேல் முறையீடு செய்யும் கேலிக்கூத்தை இப்போதுதான் பார்க்கிறோம்.

இத்தனை மானக் கேடும், நாணயக் கேடும் எதற்காக? ஐக்கிய முன்னணிக்காக. ஆனால், முன்பு தி.மு.க. கூட்டணியில் இருந்து கொண்டே வடசென்னைத் தொகுதியில் மட்டும் எதிர்த்துப் போட்டியிட்டது எதற்காக? - தொகுதிக்காக! தொகுதிச் சழக்குகளில் காட்டும் கொள்கைப் பற்றை ஊழல் வழக்குகளிலும் கொஞ்சம் காட்டுவதுதானே!

''மக்களின் முழு விடுதலையே கம்யூனிஸ்டுகளின் உயிர் மூச்சு! அந்தப் பாதையில் முன்னேற கட்டங்கள் பலப்பல. கடக்க வேண்டிய பாதைகள் பலப்பல. அதற்காகவே ஐக்கிய முன்னணி. 50 ஆண்டுகளாக நீங்கள் கடந்து வந்த கட்டங்களெல்லாம் புரட்சியின் கட்டங்களா? தாயக் கட்டங்களா? இந்தியத் தேர்தல் எனும் பரமபதக் கட்டத்தில் பாம்பு கடித்துச் செத்த கட்சி ஒன்று உண்டென்றால் அது நீங்களல்லவோ?

தமிழகத்தில் பிரதான எதிர்க்கட்சி என்ற நிலையலிருந்து இன்று போயஸ் தோட்டத்தின் பிரதான ஆலோசகராகப் பதவி உயர்வு? தேசிய சின்னமோ கூட்டணி சாணைக் கல்லில் தீட்டித் தீட்டியே தேய்ந்து காணாமல் போய்விட்டது.

''வங்கத்தைப் பார் - வங்கத்தைப் பார்'' என்றீர்கள். ஊழலுக்கு உடன்படாவிட்டால் கட்சிக்காரர்களே கொன்று விடுவார்கள் என்று உயிருக்குப் பயந்து பதவியை ராஜிநாமா செய்துவிட்டு ஓடினார் மே.வங்க மின்சாரத்துறை அமைச்சர். கட்சியில் முதலாளிகளின் கையாட்கள் அதிகரித்து விட்டார்கள் என்று குற்றம் சாட்டுகிறார் தற்போதைய சி.ஐ.டி.யு. தலைவர்.

கட்சியின் யோக்கியதையைச் சொன்ன நிருபன் சக்ரவர்த்தி 'பைத்தியம்'. நாங்களோ சாத்தான்கள், காட்டில் திரிபவர்கள்.

கட்சியின் யோக்கியதையைச் சொல்லிப் புலம்பிய நிருபன் சக்ரவர்த்தியைப் பைத்தியம் என்றீர்கள். 'புதிய கலாச்சாரம்' என்ன காட்டிலிருந்தா வெளிவருகிறது?

நீங்கள் என்ன ஈ, எறும்பை மிதிக்காத அகிம்சாவாதிகளா? மேற்கு வங்கத்தில் திருணாமுல் காங்கிரசுடன் துப்பாக்கி ஏந்திப் போராடுவீர்கள் - ஏனென்றால் அது நகராட்சி, ஊராட்சி நாற்காலிக்கான ஜீவமரணப் போராட்டம். ஆனால் தொழிலாளிக்கு கோவணப் போராட்டம், மொட்டைப் போராட்டம், சிரிக்கும் போராட்டம், ஒப்பாரிப் போராட்டம்!

எங்களை வசைபாடும் சாக்கில் கேள்வி கேட்கும் உங்கள் தொண்டர்களைப் பயமுறுத்துவது இருக்கட்டும். கோவையில் இந்து முன்னணியின் மிரட்டலுக்குப் பயந்து மார்க்சிஸ்டு கட்சியை விட்டு ஓடி இந்து முன்னணியில் சேர்ந்த உங்கள் தொண்டர்கள் எத்தனைப்பேர் தெரியுமா? கம்யூனிஸ்டு தொகுதிகள் என்று அழைக்கப்பட்ட நாகர்




கோயிலும், திருச்சியும், கோவையும் பாரதீய ஜனதாவின் தொகுதிகளானது எப்படி?

இந்து மதவெறியர்களை எதிர்த்ததனால் அல்ல, எதிர்க்கத் தவறியதனால்தான் அவற்றை இழந்தீர்கள்.

பாபர் மசூதி இடிக்கப்பட்டு நாடெங்கும் முஸ்லீம் மக்களுக்கெதிராகக் கலவரம் நடந்தபோது இந்து மதவெறியை முறியடிப்போம் என்று நாங்கள் முழங்கினோம். நீங்கள் ஏதோ முஸ்லீம் மக்களும் இந்து மக்களும் தத்தம் கடவுளுக்காகச் சண்டை போட்டுக் கொண்டதைப் போல ''கடவுளின் பேரால் கலகம் எதற்கு'' என்று இந்து மதவெறி எதிர்ப்பைத் திசை திருப்பினீர்கள்.

சாதி ஆதிக்கமும் மனுநீதியும் இந்துமத வழிபாட்டில் சட்ட ரீதியாக அங்கீகரிக்கப் பட்டிருப்பதை எடுத்துக்காட்ட நாங்கள் திருவரங்கம் கோயில் கருவறை நுழைவுப் போராட்டம் நடத்தியபோது தமிழகமே ஆதரித்தது. அதை எதிர்த்தவர்கள் இரண்டே பேர். இந்து முன்னணியும் மார்க்சிஸ்டு கட்சியும்தான். வேறெந்த பக்தரின் மனமும் எங்கள் போராட்டத்தால் புண்படவில்லை.

இ.எம்.எஸ்.ஸின் ''வேதங்களின் நாடு'' என்ற நூலையும், இந்து மதம் குறித்த எஸ்.ஏ. டாங்கேயின் ஆய்வையும் படியுங்கள். இது குறித்து டி.டி. கோசாம்பியின் (நீங்களும் ஏற்கும் ஆய்வாளர்தான்) விமரிசனத்தையும் படியுங்கள். வலது கம்யூனிஸ்டு கட்சியின் மத்தியக் குழு உறுப்பினரே பாரதிய ஜனதாவுக்குத் தாவிவிட்டது விபத்தும் அல்ல, விதிவிலக்கும் அல்ல.

அதுதான் விதி என்பது உங்களுக்கே புரியும்.

இந்து மதவெறி என்றுகூடப் பெயர் குறிப்பிட்டுப் பேச முடியாத சூரப்புலிகள், 'அதை' எதிர்ப்பதற்கு ஐக்கிய முன்னணி கட்டுகிறார்களாம். அந்த முன்னணியின் தலைவி கரசேவைக்கு ஆதரவு தந்த காவி(ய)த் தலைவியாம்! நல்ல வேடிக்கைதான்.

ஐயா, நீங்கள் ஊழல் வழக்குகளைக் கண்டு கொள்ளாமல் இருக்கலாம்; அம்மையார் அப்படி இருக்க முடியாதே. நீங்கள் ம.சா. கூட்டணி (மதச் சார்பற்ற கூட்டணி) என்று ''தொண்டை நரம்புகள் புடைக்க'' கூவிக் கொண்டிருக்கிறீர்கள். அம்மையாரோ மகா கூட்டணி என்கிறார், பார்க்கலாம். குப்புற விழுந்தாலும் மீசையில் மண் ஒட்டாமல் மூன்றாவது அணி கட்டிவிட முடியாதா என்ன?

ஐம்பது ஆண்டுகளாக பொதுத் தேர்தல், இடைத் தேர்தல், நாடாளுமன்றத் தேர்தல், சட்டமன்றத் தேர்தல், நகராட்சித் தேர்தல் ஆகிய அனைத்துத் தேர்தல்களிலும் நீங்கள் அமைத்த கூட்டணிகள் அதற்கான ''கொள்கை விளக்கங்கள்'' ஆகியவற்றைத் தொகுத்து ஒரு நூலாக வெளியிடுங்கள். பரமார்த்த குரு கதைகளைப் போலப் படிக்கச் சுவையாக இருக்கும்.

எதற்கு வீண் பேச்சு? சுப்பிரமணிய சாமி தினம் ஒரு அணிக்குத் தாவுகிறார். அவரை ஏன் என்று நாங்கள் கேட்கிறோமா? உங்களை மட்டும் கேட்க ஒரே காரணம் நீங்கள் ''கம்யூனிஸ்டு கட்சி'' என்று பெயர் வைத்திருப்பதுதான். ஐம்பதாண்டுப் பழக்கத்தை மாற்றிக் கொள்வது சிரமம்தான். அதைவிட பெயரை மாற்றிக் கொள்வது சுலபம்; மாற்றிக் கொள்ளுங்கள். அப்புறம் நாங்கள் பேசவும், நீங்கள் எங்களை ஏசவும் தேவையே இருக்காது.

● சூரியன்

படிப்பகம்

www.padippakam.com

# கட்ட பொம்மன் மேடை நாடகம்

**கட்டபொம்மனை எட்டப்பன் இன்று சந்தித்தால் மன்னிப்புக் கேட்பானா, எள்ளி நகையாடுவானா?**

**ம.க.இ.க.வின் தமிழ் மக்கள் இசை விழாவிற்காக தயாரிக்கப்பட்ட நாடகம்**

## எட்டப்பன் வருகை:

பாடல்:

சித்தி விநாயகனே... கணபதியே
சிருடன் வாழனும் என்குலமே - உனை
நித்தம் வணங்கிடும் எட்டப்பனே - என்
வம்சம் விளங்கிட வேணுமய்யா

என் சித்தம் நிறைந்த பரம்பொருளே - தினம்
சுத்தும் உலகமும் உன்கையிலே - எனக்கு
பிச்சையளக்குற ஆண்டவரே - பிரிட்டிஷ்
கோமகனே...

எட்டப்பன்: (வசனம்)

*சபையோர்களே! மகாஜனங்களே!*

குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்று ஐவகை நிலங்களைப் பிரித்தும்,

தமிழகம், கேரளம், வங்கம், கலிங்கம், மராட்டியம் என்று மாநிலங்களைப் பிரித்தும்,
பாரதம், நேபாளம், வங்கதேசம், சுங்கதேசம் என பல தேசங்களை உருவாக்கியும்,

பஞ்சம், பசி, பட்டினி தீர்ந்தபாடில்லை.

நாட்டுப்பற்று, மொழிப்பற்று, இனப்பற்று என்று பற்றக்கூடாத பற்றுக்களையெல்லாம் பற்றிக் கொண்டு, தொற்றக்கூடாத தொற்றுக்களையெல்லாம் தொற்றிக் கொண்டு தடுமாறி, உருமாறி, நிலைமாறி

நிற்கும் உங்கள் நிலைகாணப் பொறுக்காமல் ஒரு வழிகாட்ட வந்திருக்கிறேன் எட்டப்பன்!

எட்டப்பன்: (பாடல்)

வீரமும் மானமும் சோறிடுமா - வெட்டி
வீராப்பினால் பசியாறிடுமா
காலில் விழாமல் ஒரு காரியமா - தூக்குக்
கயிற்றிலே தொங்குவது வீரியமா

ராவணன் போல்மோதிச் சாகனுமா - தம்பி
விடணன் போல் அரசாளணுமா - பிரிட்டிஷ்
ஒழிக ஒழிகன்னு ஒழியணுமா - துரை
வாழ்க வாழ்க என வாழணுமா

வஞ்சமும் துரோகமும் என்குணமா - அதை
சாணக்கியன் செஞ்சா தந்திரமா
......... ராஜ தந்திரமா
தாய்மண்ணு மண்ணுன்னு கொஞ்சனுமா ஒங்க
சந்ததியாவது மிஞ்சணுமா...

யோசித்துப் பாருங்கள்... யாரங்கே! அங்கே என்ன ஆரவம் கேட்கிறது?

*(கட்டியங்காரன் காதில் ஏதோ பேசுகிறான்)*

என்னது கட்டபொம்மனா? தூக்கில் தொங்கியவன் மீண்டுமா? ஏன் கயிறு சரியில்லையா?

கட்டியங் : ஒங்க நேரந்தான் சரியில்லை.

எட்டப்பன் : மாண்டவர் மீண்டதாக
இம்மண்ணுலகில் வரலாறு இல்லையே!

கட்டியங் : எட்டப்பன் இருக்கும் இடமெல்லாம்
கட்டபொம்மன் வருவான்.
இது வரலாற்று விதி மகாராஜா.

## கட்டபொம்மன் வருகை:

பாடல்:

வணங்குகிறேன் எந்தன் தாய்நாடே... இவ்
வையத்தில் இல்லை உனக்கிடே...
பணிய மறுத்ததுன் வரலாறே - உன்
மடியில் பிறந்தது பெரும்பேறே.

நெல்லும் தினையும் உன்வரமா
அல்லும் உழைப்பவர் கைத்திறமா - தாய்
மண்ணும் மக்களும் வேறினமா - உன்னை
விற்கத் துணிந்தவன் உயிரினமா?

இரு நூறாண்டுகள் ஏங்கிப் புதைந்திருந்து
சுதந்திர பூமியைக் காணத் தவித்திருந்து
என் தாய்த்திருநாடே...
எனதருமை மக்களே...
உங்களைக் காண வந்திருக்கிறேன்
கட்டபொம்மன்!

காவலா...
மாதம் மும்மாரி பொழிந்ததா
என மந்திரியைப் பார்த்துக் கேட்கும்
மன்னனில்லை நான்!
இரு நூறாண்டுகளாய்ப் புதைந்திருந்தேன்
மண்ணோடு...
என்ன நடந்தது சொல்!

வெள்ளைப் பரங்கியர் வீழ்ந்தனரா?
கப்பம் கட்டும் கயமை ஒழிந்ததா?
பரங்கியன் காலை நக்கும்
பாளையக்காரத் துரோகிகள் ஒழிந்தனரா?

www.padippakam.com



சமஸ்தானங்களுக்கும்
சக்ரவர்த்திகளுக்கும்
கும்பினிக்காரர்களுக்கும்
குனிந்து அடங்கிக் கிடந்த மக்கள்,
நெஞ்சம் நிமிர்த்தி
மானத்தோடு வாழ்கிறார்களா?
சொல் காவலா! சொல்.
விரைவாகச் சொல்!

**கட்டியங் (பாடல்):**

என்ன சொல்வேன்... மன்னா... மன்னா
என்ன சொல்வேன்
கண்ட கனவெல்லாம் பொய்யானதே
கும்பெனியான் சூழ்ச்சி மெய்யானதே
பாளையத்தின் பேரிப்போ பாரதமே... அதை
ஆள்பவனும் ஒரு எட்டப்பனே.

**கட்டபொம்மன் (பாடல்):**

என்ன செய்தி சொன்னாய் காவலா - எனை
ஈன்ற மண்ணில் மீண்டும் துரோகமா
உண்மையா சொல்லு காவலா - நம்
மண்ணுக்கென்ன் இது சாபமா

கயத்தாற்றிலே
நான் தூக்குமேடையில் நின்றபோது
என் மக்கள் கதறியழுதைதைக் கண்டேன் அன்று.
அவர்களுமா அடங்கிப் போய் விட்டார்கள்!
என்ன செய்தான் என் தம்பி ஊமைத்துரை?

**கட்டியங் (வசனம்):**

அடங்கிடுமா மன்னா
நமை ஈன்ற பாஞ்சாலங்குறிச்சி மண்?

பீரங்கி பிளந்த கோட்டையை - கட்டி
மீண்டும் செலுத்தினான் சேனையை - அந்த
ஊமைத்துரை கதை சொல்லவா - அவன்
வீரத்தின் வாரிசு அல்லவா...

கும்பெனியான் அஞ்சி நடுங்க - எங்கும்
பீரங்கியாய் மக்கள் முழங்க - பெண்கள்
வீசிய கூழின் சூட்டிலே - வெள்ளை
நாய்களின் தோலும் பொசுங்க.

ஆயுதம் தூக்கியது
ஆண்கள் மட்டுமல்ல மன்னா.

அகப்பை பிடிக்கும் பெண்களும்
கொதிக்கும் கேப்பைக் கூழை
வெள்ளையன் முகத்தில் வீசினார்கள்.

ஆனாலும்
எச்சிலை தின்னும் ஓநாய்கள்,
மற்றைய பாளையக்காரர்கள்,
எதிரிகளுடன் சேர்ந்து கொண்டார்கள்.

பிடிப்படாமல் தப்பி
சிவகெங்கை போய்ச் சேர்ந்தான்
ஊமைத்துரை.

''ஊமைத்துரையை ஒப்படைத்து விடு''
என்று மருது சகோதரர்களை மிரட்டினான்
கும்பினிக்காரன்.
''முடியாது'' என்று எதிர்த்து நின்றனர்
மருது சகோதரர்கள்.

''மருது வேறு சாதிக்காரன்''
என்று மக்களிடையே
சாதிப் பகைமையைத் தூண்டி
மருதுவைத் தோற்கடித்தான்
வெள்ளைக்காரன்.

ஊமைத்துரை, சின்ன மருது,
மந்திரி தானாதிபதிப்பிள்ளை
அனைவரையும் தூக்கிலிட்டான்.
மருது பரம்பரையின் இளவரசர்களை
மலேயாவின் ரப்பர் தோட்டத்துக்கு
நாடு கடத்தினான் கும்பெனிக்காரன்.

**கட்டபொம்மன் (பாடல்):**

அய்யகோ தம்பி யார் இதை ஈடு செய்வார்?
இந்த அநியாயக் கொலைகளுக்கு
யார் இனி வஞ்சம் தீர்ப்பார்?

ஊமையன் போய்விட்டான்,
மருதுவும் போய் விட்டான்,
பிள்ளையும் போய்விட்டார்.
அய்யகோ
வெள்ளை ஓநாய்களை எதிர்த்து நிற்க
நாதியற்று போய்விட்டதா இந்த நாடு?

**கட்டியங்காரன் (பாடல்):**

நாதியற்றுத்தான் போகுமோ - நாட்டின்
நாடி நரம்புகள் ஓயுமோ
கோடி கோடியாய் திரண்டார் - மக்கள்
கூட்டம் கண்டு துரை மிரண்டான்.

எத்தனைக் கதைகள் மன்னவா - எல்லாம்
இரத்தத்தில் வரைந்ததல்லவா
அத்தனைக் கதைகள் எங்கிலும்
எத்தனை எட்டப்பன் சொல்லவா?

பாஞ்சாலங்குறிச்சி தெற்கிலே - வீர
பாஞ்சால தேசம் வடக்கிலே - கட்ட
பொம்மன் ஊமைத்துரை மட்டுமா
பகத் சிங்கின் கனவும் தூக்கிலே!

www.padippakam.com

கட்டபொம்மன் (வசனம்):

காவலா! பெருமைப்படுகிறேன்.
தாய்நாட்டின் மானம் காக்க ஆயிரமாயிரம் வீரர்கள் உயிர் துறந்திருக்கிறார்களே, இந்த மண்ணில் பிறந்ததற்காகப் பெருமைப்படுகிறேன். இந்த மண்ணிற்காக இறந்ததற்கும் பெருமைப்படுகிறேன்.

கட்டியங்காரன் (வசனம்):

தியாகத்தை எண்ணிப் பெருமைப்படலாம் மன்னா! ஆனால் துரோகமே தொடர்கதையாகும் போது...

பாடல்:

சுதந்திரப் பயிரெங்கும் செழிக்க கண்டேன் -
துரோகம் பயிரில் களையாய் பதுங்கக் கண்டேன்
களைகள் பயிரையே மேயக் கண்டேன் -
வெள்ளைக் கதருக்குள் எட்டப்பன் ஒளியக்
கண்டேன்

எங்கும் ஆனந்த சுதந்திரம் - அது
வெள்ளைக்காரன் செஞ்ச தந்திரம்
பாளையமானாலும், பாரதமானாலும்
துரோகமே தாரக மந்திரம்

கட்டபொம்மன் (பாடல்):

வாளெங்கே என் சேனை எங்கே - தலை
வணங்கா என் மக்களெங்கே?
போர் எங்கே... போர்க்களம் எங்கே?
புறப்பட்டான் கட்டபொம்மன்

## எட்டப்பன் உள்ளே நுழைகிறான்

எட்டப்பன் : கட்டபொம்மா இன்னும் திருந்தவில்லையா நீ?


கட்டபொம்மன் : துரோகி எட்டப்பா தொலைந்தாய் இத்தோடு.

எட்டப்பன்: வசனம்

கத்தியைத் தீட்டாதே கட்டபொம்மா புத்தியைத் தீட்டு. வாளை உருவ நீ பாளையக்காரனுமல்ல, போரைத் துவங்க இது பாஞ்சாலங்குறிச்சியுமல்ல. இது பாரத தேசம். சொல்லப் போனால் இன்று உலகமே ஒரு தேசம். இந்த பாரத தேசம் அதற்குள்ளே ஒரு பாளையம். அதன் பாளையக்காரர்கள் என் வாரிசுகள்.

சக்ரவர்த்தி யார் தெரியுமா கட்டபொம்மா? அன்றைய மொழியில் சொன்னால் கும்பினிக்காரன். இன்றைய மொழியில் சொன்னால் பன்னாட்டுக் கம்பெனிக்காரன்!

வரி, வட்டி, கிஸ்தி என்று அன்றைக்கு மீசையை முறுக்கினாயே கட்டபொம்மா... விளையும்



பயிருக்கு மட்டுமல்ல மீசை மயிருக்கும் காப்புரிமை வைத்திருக்கிறது பன்னாட்டுக் கம்பெனி.

மஞ்சள் அரைத்துப் பணிபுரிந்தாயா என்று மரியாதை இல்லாமல் பேசினாயே கட்டபொம்மா... உனக்கு மட்டுமல்ல இன்று உலகத்துக்கே மசாலா அரைக்கிறது எங்கள் கம்பெனி! புரிகிறதா கட்டபொம்மா நாட்டு நடப்பு!

கட்டபொம்மன்: (வசனம்)

புரிகிறது...
கட்டிய மனைவிக்குக் காப்புரிமை கேட்டாலும்
விட்டுக்கொடுப்பதே விவேகம்
என்று பேசும் எட்டப்பர்களின் கூட்டம்
பெருத்து விட்டது புரிகிறது.
உங்கள் தலையை கொய்யத் தவறியதால்
இந்தத் தேசமே தலை இழந்த முண்டமாய்த்
தவிப்பது தெரிகிறது.

எட்டப்பன்: (வசனம்)

நிறுத்து.
இந்தக் கணம் நான் நினைத்தால்
உன்னை பயங்கரவாதி என்று
சுட்டுக் கொல்ல முடியும்.
கண்ணீர் விடவும் நாதியில்லாமல்
கொன்ற செய்தியையே
மறைக்கவும் முடியும்.

இருந்தாலும் நான் அகிம்சாவாதி,
மனிதாபிமானி .
என்னைப் பார்த்து
இப்போதாவது திருந்து கட்டபொம்மா...
வாழக் கற்றுக் கொள் கட்டபொம்மா...

கட்டபொம்மன் :

தூ...
மானமிழந்து வாழ்வது ஒரு வாழ்க்கையா..
மன்னனென்றா மதிக்கிறார்கள் உன்னை.
மானங்கெட்டவனே
மனிதப் பதரென்றல்லவா
தூற்றுகிறார்கள் மக்கள்.

படிப்பகம்

www.padippakam.com

எட்டப்பன்: (வசனம்)

மக்கள்! ஹா... ஹா... ஹா...

கட்டபொம்மா...
உன்னைக் காட்டிலும்
மக்களைப் புரிந்தவன் நான்!
எனக்கென்ன குறை!
அந்தப்புரமும் அரச பரிவாரமும்,
அழைத்தால் ஓடிவரக் காவலர்களும்
ஆனந்தமாய் வாழ்வைக் கழித்தேன் நான்.
என் ஆருயிர் நண்பர்களும்தான்.

உன்னைப் பிடித்துத் தந்தானே
புதுக்கோட்டை மன்னன்
விஜயரகுநாதத் தொண்டைமான்!
அவனுக்கென்ன குறை?
இன்றும் அவன் சந்ததிக்கென்ன குறை?

இந்தத் தஞ்சாவூர் மன்னன்
சரபோஜிக்கென்ன குறை?
அவர்களின் வாரிசுகளே கோயிலின்
அறங்காவலர்கள், அவர்கள் பெயரிலே
கல்லூரிகள், அரசுப்பட்டங்கள், பதவிகள்...
என்ன குறை?

இன்று நாட்டை ஆள்வது யார் தெரியுமா?
உன்னுடைய மொழியில் சொன்னால்
திப்பு சுல்தானைக் காட்டிக் கொடுத்த
பேஷ்வா அரச பரம்பரை!

பிரிட்டிஷ் ராஜ விசுவாசி
குவாலியர் மன்னனின் வளர்ப்பு மகன்தான்
இந்த நாட்டின் பிரதமர்!

காலம் மாறிவிட்டது கட்டபொம்மா...
நீ ஆம் என்று மட்டும் சொல்.
அனுபவிக்க ஆயிரம் வழிகளைக் காட்டுவேன்
நான். அழிவுக்கு வழிதேடாதே...

கட்டபொம்மன்:

ஆம்...
மாறித்தான் விட்டது எட்டப்பா!
தீப்பந்தங்களுக்கு ப் பதில் மின் விளக்குகள்,
அம்புகளுக்குப் பதில் ஏவுகணைகள்,
குதிரைகளை விஞ்சும் வாகனங்கள்,
கோபுரங்களை மிஞ்சும் கட்டிடங்கள்...
மாறித்தான் விட்டது காலம்.

ஆனால் இருநூறாண்டுகளாய்
மாறாதவை இரண்டு.
மக்களின் வறுமை...
எட்டப்பர்களின் புத்தி.





கட்ட பொம்மன்: (பாடல்)

மாளிகை பஞ்சணை பெரும் சுகமா - மக்கள்
மனமென்னும் அரியணைக்கீடாகுமா...
பொன்னும் பொருளும் உன் பெயர் கூறுமா...
புன்மைத் தேரைக்கு வரலாறு இடந்தருமா...

எட்டப்பன் :

ஹா... ஹா... ஹா... வரலாறு...

நேற்று கள்ளச் சாராயம் விற்றவன்
இன்று கல்வி வள்ளல்;
முந்தைய நாளின் ரவுடி
இன்றைய மாவீரன்;
ஆலயத்தைக் கொள்ளையடித்தவன்
அறங்காவலர்;
மண்ணை விற்றவன் மந்திரி,
பெண்ணை விற்றவன்....
அது கிடக்கட்டும்
இருந்தாலும் கட்டபொம்மா...
நான் ஒரு துரதிருஷ்டசாலி...

உன்னைத் தூக்கில் போட்டார்கள்.
காட்டிக் கொடுத்த எனக்கு துரோகிப் பட்டம்.
பகத்சிங்கையும் தூக்கில் போட்டார்கள்.
காட்டிக் கொடுத்தவருக்குக் கிடைத்த
பட்டமோ தேசப் பிதா!

ஆனால்
ஒரு நாள் வரும்...
தேசப்பிதா எட்டப்பன்
என்று இந்தத் தேசமே என்னைப் போற்றும்...
அந்த நாளுக்காகக் காத்திருக்கிறேன்
கட்டபொம்மா... காத்திருக்கிறேன்...

கட்டபொம்மன் :

ஓ... நீ துரதிருஷ்டசாலியோ?
ஆனால் எட்டப்பா நான் அதிர்ஷ்சாலி...
இருநூறாண்டுகாலப்பழி
'என்னைத் தீர்த்துக் கொள்'
என்று உன்னுருவிலே
என் முன்னால் வந்து நிற்கிறதே
நான் அதிருஷ்டசாலி.

அன்றே உன்னைக் கொல்ல
வாளை ஓங்கினான்
வெள்ளையத் தேவன்...
நான் தடுத்தேன்.
உன்னைக் கொல்லத் தவறியதால்
நான் கொல்லப்பட்டேன்.

அந்த வரலாற்றுப் பிழையை
சரி செய்கிறேன்...
அந்த வரலாற்றுப் பழியைத்
துடைத்தெறிகிறேன்...
தொலைந்து போ! துரோகமே...
ஒழிந்து போ!

www.padippakam.com

2-ஆம் பக்கத் தொடர்ச்சி

''ம.க.இ.க.வின் கருவறை நுழைவுப் போராட்டம் வன்முறையைத் தூண்டிவிடும்'' என்று கூறி வீரமணி கண்டன அறிக்கை வெளியிட்ட கதை இங்கே நினைவுக்கு வருகிறது. நிஜத்தில் கருவறைப் போராட்ட எதிர்ப்பு, நிழலில் கடத்தல் போராட்ட எழுச்சி!

இதையெல்லாம் விஞ்சும் பெரிய கோமாளித் தனம் - கிராமத்தில் சத்யராஜ் நடத்தும் வர்க்கப் போராட்டம்! ''சாதி, மதம், கடவுளையெல்லாம் ஒழித்த பிறகு தான் இந்தியாவில் வர்க்கப் போராட்டம் நடத்தமுடியும்'' என்று நிஜப் புரட்சிக்கு வழி காட்டும் தி.க., நிழல் புரட்சி வெற்றி பெறுவதற்கே வர்க்கப் போராட்டத்தை ஊறுகாய் போலத் தொட்டுக் கொண்டிருக்கிறது.

அதிலும் ஆசிரியர் ரொம்ப உஷார் தான். கிராமத்தில் கூட்டு பண்ணை அமைக்கும் சத்யராஜ் அதைப் புறம்போக்கு நிலத்தில் அமைக்கிறாரேயொழிய பண்ணையார் நிலத்தைத் தொடுவதில்லை.

**திராவிடர் கழகத்தின் அரசியல் வியூகங்களும், புரட்சிக்காரன் படத்தின் திரைக்கதை அமைப்பும் அச்சில் வார்த்ததைப் போல ஒன்றுபடுவதை எழுதிக் கொண்டே போகலாம்.**

சாதிக் கொடுமையால் பாதிக்கப்படும் ராதிகா கதாநாயகனிடம் முறையிட்டு செத்து விழுகிறாள். உடனே மலை உச்சியில் நின்றபடி ''தாழ்ந்த தமிழகமே'' என்று பாடுகிறார் புரட்சிக்காரன். கீழே தெரியும் மரங்களின் தலைகளை மேய்கிறது காமெரா. மேடையில் நின்றுகொண்டு கீழே அமர்ந்திருக்கும் தமிழர்களின் தலையைப் பார்த்து ''தமிழனுக்கு சொரணை இல்லையே'' என்று அங்கலாய்க்கும் தி.க. பேச்சாளரின் விழியும், இதயமும் அந்தக் காட்சியமைப்பில் துல்லியமாகப் பதிவாகியிருக்கின்றன.

புரட்சி செய்ய விரும்புகிறாயா, ''குதிரையை விட்டு இறங்கி நட'' என்றார் மாவோ. கதாநாயகனோ மலைமேல் நிற்கிறான். அதுவரை புரட்சி என்பது பிரசங்கமாகவும், நடைமுறை சாகசமாகவும் இருக்கும். அல்லது புரட்சி என்பது மக்களுக்கான அறிவுரையாகவும் நடைமுறை ஜெயலலிதாவுடனான கூட்டணியாகவும் கூட இருக்கலாம்.

''நல்ல விசயங்கள் ஒன்றுகூட உங்கள் கண்ணில் படவில்லையா, படத்தில் ஆபாசமில்லாமல் இருக்கிறதே பகுத்தறிவுப் பிரச்சாரம் இருக்கிறதே அதைப் பாராட்டியாவது ஒருவரி எழுதக்கூடாதா?'' என்று நம் விமரிசகர்கள் எரிச்சலுடன் கூறலாம்.

''இந்தியாவுக்கு வரும் அமெரிக்க ஜனாதிபதியைக் கொல்ல பின்லாடன் போலிச் சாமியார் கூட்டுச் சதி'' என்று இறுதிக் காட்சி வருகிறதே அதை விட ஆபாசம் வேறு என்ன வேண்டும்?

● பாலன்

## வாசகர் கடிதம்

✸ 'தமிழகத்தில் மனித உரிமைகள்' என்ற நூல் அறிமுகம் காவலர்களின் அட்டூழியங்களை விரிவாக விளக்குகிறது. தவறு செய்தவர்களைத் தண்டிக்கும் இடம்தான் காவல் நிலையம் என்று நினைத்து இருந்தேன். இந்தக் கட்டுரையைப் படித்தவுடன் போலீசைக் கலைத்து மக்கள் ஆயுதம் ஏந்தவேண்டும் என்ற கருத்தை ஏற்க முடிகிறது. எங்கள் பகுதி அஞ்செட்டி காவல் நிலையத்தில் இது போன்ற மனித உரிமை மீறல் சம்பவங்கள் நடந்திருப்பதைப் புரிந்து கொண்டேன்.

'உங்களுடன் பேச என்ன இருக்கிறது' என்ற கவிதை போலிகளைச் செருப்பால் அடிப்பது போல் இருந்தது. 'முழக்கத்திற்காகப் பழக்கத்தை விட முடியுமா' என்ற கேள்வி இவர்களின் வேடத்தைக் கலைத்தது.

பணவிடை சிறுகதையைப் படிக்க முயற்சித்தேன். முடியவில்லை. காரணம் ஒரு வட்டாரத்தில் பேசக்கூடிய பேச்சில் எழுதியிருக்கிறார். பொதுவாக மக்கள் பேசக்கூடிய மொழியில் எழுதினால் என்னைப் போன்ற வாசகர்கள் புரிந்து கொள்ளலாம்.

**– ம. கோவிந்தன், அத்திமரத்தூர், தருமபுரி மாவட்டம்.**

✸ பணம் காசு கணக்கு வழக்கில்லாமல் சம்பாதித்தவர்களுக்கு ஒரு சொர்க்கமாகவும், இல்லாதவர்களுக்கு நரகமாகவும் மாறிவிட்ட பச்சோந்தி நகர வாழ்க்கை வளர்ச்சியைப் படம்பிடித்து வெளிப்படுத்தியிருந்தது தலையங்கம். எரிமலையாய்ப் புகைந்து கொண்டிருக்கும் ஏழைகளின் சீற்றம் வெடிக்கும்போது அதன் விளைவுகள் தெரியும்.

'மனிதச் சரக்கின் துயரக் கதை' படித்து ரத்தம் கொதித்தது. மாஃபியாக் கும்பல்களின் மையமாக அமெரிக்க நாடும் நகரங்களும் ராக்கட் வேகத்தில் நாசமாய்ப் போகிற காட்சியும், அதையே கணினியில் கண்டு களிக்கும் கூத்து, உலகமயமாக்கம் என்ற புரட்டு விசயத்தை ஏகாதிபத்திய அடிமைத்தனத்தோடு சாமரம் வீசுகிற மாண்புகளின் ஆட்சியும் இக்கட்டுரையில் செருப்படி வாங்கியிருந்தன.

மது, மங்கை என ருசிபார்த்ததோடு முதலாளித்துவம் மீது அருவருப்பு கொள்ள வேண்டியதில்லை என கூசாமல் கூறுகிற ஜெயகாந்தன் தன்னை கம்யூனிச ஆதரவாளராகக் கயிறு திரிப்பதை இனியாவது நிறுத்திக் கொள்ளட்டும். இவரும், இவருக்குப் போட்டியாகக் கிளம்பியிருக்கும் ஜெயமோகனும் 'இலக்கிய வியாதிக்காரர்கள்' என்று 'புதிய கலாச்சாரம்' சித்தரித்திருப்பது சரியான எச்சரிக்கை!

**– ஆர்.ஆர். சாமி, திருவண்ணாமலை.**

✸ இரக்கமற்ற முறையில் மூன்றாம் உலக மக்களைச் சுரண்டி, பிராந்திய நாடுகளுக்கிடையில் உள்நாட்டுப் போரைத் தூண்டிவிட்டு, அதன் மூலம் ஆயுத விற்பனை செய்து கொழுத்த, மனித குல பயங்கரவாதியான அமெரிக்காவை 'சோசலிசத்தின் மறுவார்ப்பு' என்றும் 'மார்க்சியத்தின் பரிமாண வளர்ச்சியென்றும்' பேசி வரும் ஜெயகாந்தனுக்கு பைத்தியம் பிடித்துவிட்டதா அல்லது ஏகாதிபத்தியத்திடம் பணம் வாங்கிக் கொண்டு பேசுகிறாரா என்று சந்தேகம் எழுகிறது.

மார்க்சியத் தத்துவம் முதலாளியத்தோடு கலந்து விட்டது என்று பேசுகிறவர்களும் சரி, மார்க்சியம் வீழ்ச்சியடைந்து விட்டது என்று பேசுகிறவர்களும் சரி, மார்க்சியத்தின் அடிப்படையைப் பேசாமல் காலம் தோறும் உளறிக் கொண்டிருப்பதே வழக்கமாகிவிட்டது. 'இந்தியத் தொன்மங்கள், இந்தியப் படிமங்கள், இந்தியப் பண்பாடு, இந்திய மரபு இவைகளின் ஊடே மேற்கத்திய மரபை உள்வாங்கிக் கொள்வது' இப்படி இந்துமயமாதல் பற்றி பேசியும், எழுதியும் வரும் ஜெயமோகன் தன்னுடைய நாவலுக்கு 'சோவியத் யூனியனின்' படிமங்களை எடுத்துக் கொண்டிருப்பதை நம்மால் புரிந்து கொள்ள முடியும்.

ஏகாதிபத்திய கைக்கூலியான ஜெயகாந்தனையும் இந்துப் பண்பாட்டு எடுபிடியுமான ஜெயமோகனையும் வாசகர்களுக்கு அடையாளம் காட்டியிருக்கும் கட்டுரை சிறப்பானது.

**– இ.சி. இராமச்சந்திரன், ஈரோடு.**

**ஆசிரியரும் வெளியீடுபவரும்: வி. வல்லபேசன், 3, செகந்நாதபுரம், நான்காவது தெரு, சேத்துப்பட்டு, சென்னை - 600 031.**
**அச்சிடுபவர்: எழில் பிரிண்ட்ஸ், 110, இரண்டாவது மாடி, 63, ஆற்காடு சாலை, சென்னை - 600 024.**
**புதிய கலாச்சாரத்தில் வெளியாகும் படைப்புகள் அனைத்தும் சமுதாயத்தில் காணப்படும் உண்மைகளே!**

படிப்பகம்

PUTHIYA KALACHARAM (TAMIL MONTHLY)
REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPERS FOR INDIA UNDER NO. 42647/87
Regd. No. TN/Chief PMG-303 / 2000

www.padippakam.com

# போராளி

ரத்தக் களறியான
அவனது காயத்தின் மீது
மீண்டும் மீண்டும் எட்டி உதை
தானாக அது ஆறிவிடும் - விடாதே
அவனது வலி - அது கிடக்கட்டும்
அவன் காயத்திலிருந்து
ரத்தம் பெருக வேண்டும்
சித்திரவதையின் நினைவு
அவன் அடிவயிற்றில்
தேங்கிக் கிடக்க வேண்டும்.

மீறிப் பறப்பேன் என பிதற்றுகிறானா,
நீ ஓர் குற்றவாளி என்று சொல்
அதை அவன் மறக்கக் கூடாது,
சேற்றை வாறி அவன் முஞ்சியில் வீசு
அவனது சொல்லில் காட்டு மலர்கள்
பூத்து மணக்கிறதா,
மிதி - ரத்தக் கூழாகட்டும் அவன் கைகள்
பிணத்தின் கைகளைப் போல
வெளுத்துப் போகட்டும்

கிடக்கட்டும்
குப்பை போல
அவன் கீழே கிடக்கட்டும்
கவனமாயிரு
உள்ளே பூட்டிய இசையை
அவன் இதயம் ஒருக்காலும்
விடுதலை செய்யவே கூடாது

உன் சட்டம் வேறு
என் சட்டம் வேறு
ஒரு நதி சீறி எழுந்து
நிலவோடு பேசுமானால்
மலைகளால் - நீரிலேயே
சுவர் எழுப்பு.

ஒரு நட்சத்திரம்
தூரம் தவறிக் கீழே பாய்ந்து
அந்தச் சிறுவனின்
இளம் உதடுகளில்
பளிச்சிடுமானால்
அதை நெறித்துச் சபித்து

எங்கோ ஒரு வானமூலையில்
விட்டெறி

ஒரு காட்டுமான்
சுதந்திரத்தையும்
காட்டுப்பச்சையையும்
ஒன்றுசேர அருந்துவதைப்
பார்க்கிறாயா,
நாயை அடிப்பது போல அடி

ஒரு மீன்
துளி நீருமில்லாமல்
வாழ்ந்துவிடும் எனில்
கரை, நிலத்திலிருந்து
மீனை விலக்கி வை.

கைகள் - அவனது கைகள்
காற்றை அணைத்து மகிழும்
கனவை ரசிக்குமானால்
அவற்றைக்
கறிவெட்டும் கட்டைமீது
கிடத்திக் கொத்து

ஒரு விடியல் - பளிச்சிடும்
கிளர்ச்சியோடு புலருமானால்
இருளின் கருப்பு நிற வானை
அதன் கண்களில் பாய்ச்சு.

அதோ? அவனைப் போல
ஒரு மனிதன் - அவனுக்கு
காற்றைப் போல ஓர் இதயம்
இருக்கக் கூடுமானால்
அவனது முழங்கால்களை
மார்போடு சேர்
பாறைகளைச் சேர்த்து
இறுகக்கட்டு

உலகின்
அடி ஆழத்துக்கு அவனை
அனுப்பி வை!

★

- மார்கோஸ் ஆனா



மார்கோஸ் ஆனா (பிறப்பு 1921) ஸ்பானியக்கவிஞர்.ஸ்பெயினில்நடந்த உள்நாட்டுப் போரின் தொடக்கத்தில் சோசலிச இளைஞர் கழகத்தில் இணைந்தார். அப்போரில் அவரது தந்தை கொல்லப்பட்டார். போரின் இறுதியில் அவர் (18 - ஆவது வயதில்) கைது செய்யப்பட்டார். முதலில் தூக்குத்தண்டனை விதிக்கப்பட்டு பின் முப்பதாண்டு தீவிரச் சிறைவாசமாக மாற்றப்பட்டது. பின்னாளில், அவர் தனது40-ஆவது வயதில் (1961 - இல்) 22 ஆண்டு சிறை வாசத்துக்குப் பின் விடுதலை செய்யப்பட்டார். விடுதலைத் தாகமும் போராட்டத் துடிப்பும் ஒன்றுசேரக் கேட்கும் பலகவிதைகளை எழுதியவர்.

ஆங்கிலம் வழியாகத் தமிழில்
புதூர் இராசவேல்.

படிப்பகம்